

புரட்சிச்
சித்தர்கள்
(சிவவாக்கியரும் வேதாத்திரி மகரிசியும்.)
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
ராஜம் பதிப்பகம் ebook publishers

# புரட்சிச் சித்தர்கள்

(சிவவாக்கியரும் வேதாத்திரி மகரிசியும்.)

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.

பொருளடக்கம்.

1. சிவவாக்கியர்
2. வேதாத்திரி மகரிசி வாழ்க்கைக் குறிப்பு
3. புரட்சி சித்தர்கள்.
4. அனைத்தும் இறைநிலையே
5. உடலே இறையுறையும் கோயில்
6. என்னிலே இருந்த ஒன்றை அறிந்தேன்
7. அஞ்ஞானிகள்
8. நாதன் உள்ளிருக்கையிலே.....
9. கருக்குழியில் ஆசையாய் காதலுற்று நிற்காதே?
10. சடங்குவெறி கொள்வதன்று சமயம்
11. சிலை வணக்கம் எந்தவயது வரை?
12. ஒன்றே தெய்வம்
13. சாதியாவது ஏதடா?
14. செத்தபின் முக்தியா?
15. தேர்த்திருவிழா தவிர்த்தல்
16. பாலானாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்.
17. பெண்ணின் நிலைபாடு
18. அறவழிச் சிறப்பு
19. புலன்கள்
20. பிரம்ம ஞானம் உம்முள்ளே

# என்னுரை

ஆன்மீகத்தின் முதல் புரட்சியாளர் சிவவாக்கியர். சமுதாயத்தில் மலிந்து கிடந்த மூடநம்பிக்கைகளையம், சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் தகர்த்தவர்.

சமைத்த கறியின் சுவையை அக்கறியைச் சமைத்த சட்டியும், கிளறும் சட்டுவமும் தெரிந்துகொள்ளாது. பரம்பொருள் மனத்தின்கண்ணேயே இருக்க சிற்பியினால் உருவாக்கப்பட்ட கற்சிலை நிட்கள, நின்மல பர-வத்துவான பொருளாகாது என்பதனை உணர்த்த,

நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சார்த்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்திர மேதடா?

என்று கேட்கிறார்.

***பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்***
***பூசையுள்ள தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்***
***ஆதிபூசை கொண்டதோ அனாதிபூசை கொண்டதோ***
***ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே***

எனச் செய்த பூசையைக் கொண்ட பொருள் யாதென விளக்கித் தருமாறு கேட்கின்றார்.

ஐம்புலன்களையும் வெல்லாது அவற்றின் வழியே செல்லும் அஞ்ஞானிகளுக்கு அன்னதானம் முதலான தருமங்கள் செய்வதும் வீணே. அத்தகைய போலித் துறவிகளுக்கு ஈகைசெய்வது தீமையையே விளைவிக்கும்.

***“ஐம்புலனை வென்றிடா தவத்தமே யுழன்றிடும்***
***வம்பருக்கு மீவதுங் கொடுப்பதும்ம வத்தமே”***
***என்பதே சிவவாக்கியரின் அறிவுரை.***

மெய்ஞ்ஞானம் பெற்று இறைவனையுணர்ந்த நிலையில் தனக்குள்ளே தானன்றி மற்றொன்றையும் கண்டிலேன் என்று வியக்கின்றார்.

***“என்னகத்து ளென்னைநா னெங்கும்நாடி யோடினேன்***
***என்னகத்து ளென்னைநா னறிந்திலாத தன்மையால்***
***என்னகத்து ளென்னைநா னறிந்துமே தெரிந்தபின்***
***என்னகத்து ளென்னையன்றி யாதுமொன்று மில்லையே”***

ஆன்மிகமென்றாலே காவியுடையும், கமண்டலமும் என்றிருந்த காலமொன்று இருந்ததுண்டு.

ஆன்மிகத்திற்கு ஆண்களே அருகதை,பெண்களுக்கு முகத்திரை என்ற மாயவலையை விலக்கி,ஆன்மிகத்தில் பெண்மீகத்தை இணைத்து பெண்ணின் பெருமையை உலகறிய அறிவித்தார் அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி!,

ஆன்மாவில் ஆண்,பெண் பேதமில்லை,ஆன்மிகத்தில் பெண்களும் சளைத்தவரில்லை என்றே ஆன்மிகத்தில் திரட்சி முறையில் ஒரு புதுமை புரட்சியை புகுத்திமனைவிக்கு ஒரு விழா, மனைவி நல வேட்பு நாளில் தம்பதியராய் தவம் உயிர்கலப்பு பெற வடிவமைத்து தன் போதனையை சாதனையாக்கிவிட்டார்,ஆன்மிகப்புரட்சியாளர் அருட்தந்தை வேதாத்திரி.

ஆண்டவனைப் பற்றியதாக இருந்தாலும் அறிவுக்கு ஒவ்வாததை அறவே காணமுடியாது இந்த சித்தர்களிடம்.

இவ்விரு புரட்சியாளர்களையும் ஒப்பாய்வு செய்த இந்த நூலில் அங்கும் இங்குமாக சில அக்கினக் குஞ்சுகள் ஒடுவதையும், நெருப்புத் துளிகள் தெறித்து விழுவதையும் நாம் காணலாம்.

நெருப்பின் துளிகளாக, அக்கினிக் குஞ்சுகளாக இந்நூல் எழுப்பியருக்கிற விவாதங்கள் பண்டிதர்களின் பார்வைக்கு வரும்போது மிகுந்த பரவசமைடையும் பண்டிதர்களும் இருக்கலாம்.

அல்லது இந்நூலின் கருத்தோடு தன்னை மறைத்துக் கொள்ள் முடியாமல் ஆத்திரமடையும் பண்டிதர்களும் இருக்கலாம்.

எது எப்படியிருந்தாலும். பண்டிதர்களைச் சிந்திக்க வைத்து பாமரர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

இதனை சிந்தித்தின்புறும் நீங்களும் உங்கள் அன்புக் குடும்பமும், உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞ்ஞானம் ஓங்கி வாழ்க வளமுடன் என இறைநிலையோடு இணைந்து வாழ்த்துகிறேன் - பிராத்திக்கிறேன்.

குருவின் தொண்டில்

பானுகுமார்.

Mail id. banukumar.v @gmail.com

# 1.சிவவாக்கியர்

பதினெண்சித்தர்கள் என்ற வரிசையில் சிவவாக்கியரின் பெயர் இடம்பெறவில்லை யெனினும், திருமூலர், சிவவாக்கியர், பட்டினத்தார் எனும் மூவரும் தமிழகத்தின் முப்பெருஞ் சித்தர்களெனப் போற்றப்பட்டு வருகின்றனர்.

இவர் இயற்றிய நூலுக்கு “சிவவாக்கியம்” என இவரே முதற் காப்புச் செய்யுளில் பெயரிட்டிருக்கின்றார்.

அதனால் நூலின் பெயரைக் கொண்டு இவருக்கு சிவவாக்கியர் எனும் பெயர் ஏற்பட்டு வழங்கி வருகின்றது.



அவருடைய பாடல் தொகுப்பில் “சிவாயம்” என்ற சொல் அறுபதுக்கும் மேலான இடங்களில் வந்திருப்பதனால் அநேகமாக அவர் இப்பெயரை அடைந்திருக்கலாம் எனக் கருதுவோரும் உண்டு.

பெரிய ஞானக்கோவைக் கணக்குப்படி தத்துவ சித்தாந்தக் கோட்பாடுகளை உட்கொண்ட 550 பாக்களாலான நூல் சிவவாக்கியம்.

அபிதான சிந்தாமணி எனும் நூலில் காணப்படும் ஒரு கதைக்குறிப்பைத் தவிர இந்நூலின் ஆசிரியரான சிவவாக்கியரைப்பற்றிய ஆதாரபூர்வமான தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை.

சிவவாக்கியார் வேதியற் குலத்தில் பிறந்தவரென்றும், காசிக்குச் சென்ற இவரிடம் செருப்புத் தைப்பது தொழிலான ஒரு சித்தர் கொஞ்சம் மணலும், ஒரு பேய்ச்சுரைக்காயையும் கொடுத்து,

“எந்தப்பெண் இந்தச் சுரைக்காயையும், மணலையும் சமைத்துப் பரிமாறுகின்றாளோ அவளே உமக்கு மனைவி” என்று கூறியதாகவும்,

அவ்வாறே சமைத்து உணவிட்ட ஒரு குறப்பெண்ணை இவர் மணந்து இல்லறத்தில் ஈடுபட்டார் எனவும்,

ஒரு சமயம் மூங்கில் வெட்டும்போது அது பொன் பொழிய அதை ஆட்கொல்லி என வெறுத்து நீத்தார் எனவும்,

பின்னர் கொங்கண சித்தரின் நட்புடன் ஞானமார்க்கத்தில் திகழ்ந்த சித்தராக விளங்கினார் எனவும் அக்கதை குறிப்பிடுகிறது.

சிவவாக்கியரின் பாடல்களை ஆய்வு செய்து பார்க்கும் பொழுது சில பாக்கள் இருமுறை மீண்டும் கூறப்பட்டிருப்பதையும், சிற்சில பாக்களின் சில வரிகள் வேறு பாக்களில் மறுபடியும் வந்திருப்பதையும், சில பாடல்கள் உட்கருத்திலும், நடைநயத்திலும் மற்ற பாடல்களிலிருந்து மாறுபட்டிருப்பதையும் காணலாம்.

இக்காரணங்களால் சிவவாக்கியத்தின் சில பாடல்கள் இடைச்செருகல்களே என்று கூறுவாறும் உண்டு.

சிவவாக்கியர் பாடல்களின் சிறப்பு அம்சம் யாதெனின், அவற்றில் பக்தி அல்லது கடவுள்பற்றிற்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை என்பதேயாகும்.

திரு.ஏ.வீ.சுப்ரமணிய ஐயர் அவர்களின் “கவிதையும், தமிழ்ச்சித்தர் தத்துவமும்” (Poetry and the philosophy of the Tamil Siddhars) என்ற நூலில் இவ்வாறு கூறியுள்ளார்: “Sivavakkiyar’s poem is a grand remonstrance almost against everything that was held sacred in his time”.

அதாவது, “அவரது காலத்தில் புனிதத்தன்மை வாய்ந்தவை எனக் கருதப்பட்டுவந்த ஏறத்தாழ அனைத்தையுமே சிவாவாக்கியர் பாடல்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றன”.

இருப்பினும் அவர் ஒரு நாத்திகரோ, லோகாயதவாதியோ அல்லர்.

மெய்ந்நெறியில் ஆர்வமும், தெய்வ சிந்தனயும் கொண்ட புரட்சியாளரும், சமய ஒருமைப்பாட்டின் ஆதரவாளரும் ஆவார்.

சூது தெரியாத, கலப்படமற்ற உளந்திறந்த அறிவுரையையே சிவவாக்கியம் அளித்துள்ளது.

தனது "தமிழ் இலக்கிய வரலாறு" (History of Tamil Literature) எனும் நூலில் திரு.மீனாட்சிசுந்தரம் அவர்கள் இப்பாடல்களை, "ஒளிவுமறைவற்ற வெளிப்படைத்தன்மையால் சிலசமயங்களில் நம்மை அதிர்ச்சியடையச்செய்யும் ஆற்றல் வாய்ந்த தெளிவுபடைத்தவை" என்கின்றார்.



சித்தர் சிவ வாக்கியர்

"ஆபாசமானவை என்றும், நயமற்ற வக்கிரமானவை என்றும் விடாப்பிடியான ஒழுக்கக் கொள்கையுடையவர்கள் அழைக்கக்கூடிய சொற்றொடர்களை வரையாது பயன்படுத்துவதில் சிவவாக்கியர் சற்றும் தயக்கம் காட்டவில்ல

மனிதரின் நிலையற்ற காமவேட்கையையும், மனிதப்பிறப்பின் உயிரியல் ரீதியான உண்மைகளையும் ஏளனத்தொனியில் அவரது

பாடல்களில் இடையறாது சுட்டிக்காட்டியிருப்பதே சிவவாக்கியருக்கு நேரான ஆபாசக்குற்றச்சாட்டிற்குரிய காரணமாகும்.

## 2. வேதாத்திரி மகரிசியின் வாழ்க்கை குறிப்புகள்.

1. காலம் - 1911 முதல் 2006
2. பிறப்பு - 14.08.1911 திங்கள் காலை
3. பிறந்தஊர் - கூடுவாஞ்சேரி (சென்னை அருகே)
4. பெற்றோர் - சின்னம்மாள் -ஸ்ரீ வரதப்பன்
5. உடன் பிறந்தோர் - முதல் ஆறு பெண்கள், ஏழாவது ஆண், ஏழு வயதில் காலமானார். இவருக்கு அடுத்து ஒரு தம்பி.
6. இயற்பெயர் - வேதாத்திரி
7. சிறப்புப் பெயர்கள்- யோகிராஜ் வேதாத்திரி மகரிசி - பாமர மக்களின் தத்துவ ஞானி.
8. உறைந்த இடங்கள் - கூடுவாஞ்சேரி, சென்னை திருவான்மியுர். ஆழியாறு (பொள்ளாச்சி)
9. மகரிசியின் அமைப்பு - உலக சமுதாய சேவா சங்கம்.
10. உலக சமுதாய சேவா சங்க கிளைகள் - இந்தியாவிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கர். மெக்ஸிகோ, சிங்கப்புர் மற்றும் ஐரோப்பியா, அரப நாடுகள்.
11. நிறுவிய நிலையங்கள் - உலக சமுதாய சேவா சங்கம், திருவான்மியுர், சென்னை. உலக சமுதாய சேவா சங்கம், ஆழியாறு. இன்று வரை உலகெங்கும் 120 . அறிவுத்திருக்கோயில்கள். ..........மனவளக்கலை மன்றங்கள்.
12. திட்டங்கள் - உலக அமைதி - ஓருலகக் கூட்டாட்சி. அன்பு - சமத்துவம் - சகோதரத்துவம்-சமநீதி-மகளிர் மேன்மை.
13. இயற்றிய நூல்கள் - சுமார் 80க்கு மேல்
14. வழங்கும் பயிற்சிகள் - உடற்பயிற்சி, காயகல்பம். தியானம், அகத்தாய்வு. பிரம்மஞானம், ஆசிரியர் பயிற்சி.

15. வழங்கும் படிப்புகள் - சுமார் 20 க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களில், வேதாத்திரியத்தில் பட்டய படிப்பு, பட்ட படிப்பு. பட்டமேற்படிப்பு, எம்.பில்., பி.எச்.டி.

# 3. புரட்சி சித்தர்கள்

உலகப் புரட்சியாளர்கள் என்று சொன்னவுடனேயே நம் மனதில் தோன்றுகிற லெனின், மாவோ, பிடல் காஸ்ட்ரோ, சே குவேரா, போன்றோரின் வரிசையில் சமூகப் புரட்சியாளர்களின் முகங்கள் வருவதில்லை.

புரட்சி, வீரம் என்கிற சொற்கள் – போரிடுவது, உயிர்களைக் கொல்வது, எதிர் கருத்துக்கு இடமின்றி அடக்குவது, அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்ற பொருளில் புரிந்து கொள்ளப்படுவதால், அறிவு நிலைப் புரட்சிக்கு அதில் இடமிருப்பதில்லை.

உலகின் மிகப் பெரிய சிந்தனையாளர்கள் எல்லாம் அவ்வாறுதான் பின்னுக்குத் தள்ளப்படுகின்றனர்.

சமுதாய சிந்தயைாளர்கள் பலரும் அவ்வாறே பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தாலும், புரட்சி செய்த சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிசியும் விறு கொண்டு எழுந்து மானுடத்தை இன்றும் வழிநடத்தி வருகின்றனர்.

மனிதன் வாழத் தொடங்கிய காலத்திலிருந்து இன்று வரையில் அவன் வாழ்வுக்கு வழிகாட்ட வேண்டிய அவசியம் எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாத் தொழில்களிலும் தேவையாகவே இருந்து வந்திருக்கிறது.

சுழல் காற்றில் அகப்பட்ட கட்டுமரம் போல, கப்பல் போல உலகெங்கும மக்கள் குலம் தனியாகவும், நாடுகள் என்ற கூட்டாகவும் தத்தளித்துக் கொண்ருக்கிறது.

இந்த நிலையில் அவர்களுக்கெல்லாம் ஆறுதல் போன்று தெளிவான சிந்தனையின் முடிசவுகளை அளித்து தொண்டு செய்ய வேண்டியது அறிஞர்கள், சிந்தனையாளர்கள் ஆகியோர் கடமையாகும்.

இக்காலத்தில் விஞ்ஞான அறிவு வளர்ச்சி பெற்று வருகிறது. மக்களும் சிந்தனையாற்றலில் மேம்பட்டுக் காணப்படுகிறார்கள்.

இத்தயை வாய்புகளைப் பயன்படுத்தி சிவவாக்கியரும் மகரிசியும் புரட்சிக் கருத்துக்களை மானுடத்திற்கு வழங்கியுள்ளார்கள்.

தங்களது புரட்சிக் கருத்துக்கள் மூலம் மானுடத்தின் சிந்தனையாற்றலை காலந்தோறும் எழுப்பிக் கொண்டே இருக்கிறார்கள் இச் சித்தர்கள்.

சமுதாயத்தில் பல புரட்சிகளை ஏற்படுத்திய, சிவவாக்கியர், 'புரட்சிச் சித்தர்' என்றே குறிப்பிடப்பட்டார். ஆரம்பத்தில் நாத்திகராக இருந்து பின் ஆத்திகராக மாறியவர் இவர்.

பதினெட்டு சித்தர் வரிசையில் சிவவாக்கியர் இடம் பெறவில்லை. வேதாத்திரி மகரிசியோ பத்தொன்பதாவது சித்தராக போற்றப்படுகிறார்.

வேதாத்திரி மகரிசியோ ஆத்திகரும் இல்லை. நாத்திகரும் இல்லை. ஆன்மீகத்தில் புரட்சி செய்தவர்.

சிவவாக்கியரின் 550 பாடல்கள் பெரிய ஞானக்கோவையில் அமைந்துள்ளது. வேதாத்திரி மகரிசியின் சுமார்த 2000 மேற்பட்ட பாடல்கள் ஞானக்களஞ்சியத்திலும் அவரது மற்ற நூல்களில் உள்ளது.

இருவருமே சமூக சிந்தனையாளர்கள். சமூகப் புரட்சியாளர்கள். மானுடத்தை விழிப்படையச் செய்தவர்கள்.

சிவவாக்கியர் உருவ வழிபாட்டை முற்றிலும் மறுத்தார். மகரிசியோ குழந்தைகளுக்கு உருவவழிவாடு வேண்டும். ஆனால் பதினான்கு வயதுக்கு மேல் உருவ வழிபாடு தேவையில்லை என்கிறார். மகரிசியின் அறிவுத்திருக்கோயில்களில் உருவ வழிபாடு கிடையாது.

கடவுளின் பெயரால் சிலை உருவங்கள் செய்து வைத்து வணங்குவதும், அவைகளுக்குத் தினசரி பூசைகள், நைவேத்தியங்கள், திருவிழாக்கள் செய்வதும் என்று தொன்று தொட்டு நடந்து வரும் பழமைகளை மூடப்பழக்கங்கள் என்று சிவவாக்கியார் சாடுகிறார்.

மகரிசியோ புசைகள் முதலியன மனதை ஒருமைப்படுத்த தொடக்க காலத்தில் தேவை. ஆனால் 14 வயதுக்கு மேல் அதெல்லாம் தேவையில்லை என்கிறார்.

திருவிழாக்கள் எல்லாம் சிறுவர்கள் விளையாட்டே என்றே இரண்டு சித்தர்களும் பரிந்துரைக்கின்றனர்.

புரட்சிக் கருத்துக்கைளை வன்மையாக போதிக்கிறார் சிவவாக்கியார். அதனை மென்மையாகப் போதிக்கிறார் மகரிசி.

இருவருமே பெண்களை உயர்த்தி, பெண்களை இறைவனுக்கு அடுத்த நிலையில் வைத்து அழகுப் பார்க்கின்றனர்.

பிரம்மஞானம் என்பது மனிதனின் கதை என்பதும், அது அவனிடமே் உள்ளது என்றும் பகிங்கரமாக பறைசாற்றுகின்றனர் இருவரும்

சாதிகளை சாடிய இருவரும் சமுதாயத்தில் அதனை வேரறுக்க வழிமுறைகளையும் சொல்லியுள்ளனர்.

ஆசை, காமம் முதலியவை அளவு முறையோடு இருக்க வேண்டும் என்பதை இருவருமே பாடியுள்ளனர்.

சமுதாயத்தில் உலாவரும் போலிச் சாமியார்களின் திரைகளை இருவரும் கிழித்து எறிகின்றனர். இவர்களிடம் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டியதை பக்குவமாக உபதேசிக்கின்றனர்.

ஒன்றே தெய்வம் என்ற அத்வைத தத்துவத்தை வலியுறுத்தும் இருவரும், எங்கும் எதிலும் வியாபித்துள்ள இறைநிலையை நமக்குள்ளும் காணும் வழிமுறைகளை காட்டுகின்றனர்.

சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிசியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். இரண்டும் அன்பை அடிப்படையாகக் கொண்டாலும், மூட நம்பிக்கைகளை வேரறுப்பதை நோக்கமாகக் கொண்டவர்கள்.

இவர்களுடைய சிந்தனைதான் பழைய கண்மூடி வழக்கங்களை எல்லாம் போக்கி, புதிய எழுச்சிமிகு சமுதாயத்தை உருவாக்கி வருகின்றன.

# 4. அனைத்தும் இறையாற்றலே

நாம் காணுகின்ற பிரபஞ்சத்தில் நிகழுகின்ற எல்லா நிகழச்சிகளும் எல்லா இயக்கங்களும் இறைநிலை என்னும் பேராற்றலிலிருந்துதான் தோன்றியுள்ளன.

எந்த ஒரு தோற்றமும் நிகழச்சியும அறிவுக்குள்ளே அறிவாக மனத்திற்கும் அறிவாக இருந்து கொண்டு பரம்பொருளாக இருந்து கொண்டு எல்லாக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கிறது.

இறையாற்றலின் தன்மாற்றமே பேரியக்க மண்டலம் என்கின்ற எல்லாக் காட்சிகளும், நிலைகளும், இயக்கங்களும், விளைவுகளும் என்பதை உணர்ந்து கொள்ளுவோம்.

இறையாற்றல் என்பது சக்தியாகவும் அறிவாகவும் இருக்கிறது.

அரிசி தோசையான பிறகு அரிசியின் ருசி தோசை முழுவதும் இருக்கும். அதைப் போல தெய்வமே அனைத்துமாகி இருப்பதால் அனைத்திலும் தெய்வாம்சம் இருக்கும்.

***"அண்டம்நீ அகண்டம்நீ, ஆதிமூல மானநீ,***

***கண்டம்நீ, கருத்தும்நீ, காவியங்க ளானநீ,***

***புண்டரீக மற்றுளே உணருகின்ற புண்ணியர்,***

***கொண்டகோல மானநேர்மை கூர்மைஎன்ன கூர்மையே."***

அனைத்தையும் இறைவனாகக் காண்கிறார் சிவவாக்கியார்.

இந்தப் பிரபஞ்சத்தில் நாம் காணும் பொருளகளில் எத்தனை எத்தனையோ பேதங்கள் இருந்தாலும், அவைகளின் மூலம் ஒன்று தான் என்பதை பஞ்சதஸி வலியுறுத்துவதைக் பார்க்கிறோம்.

***"வ்ருசஷஸ்ய ஸ்வகதோ பேதஉற பத்ர புஷ்ய பலததிபிஉறி***

*வ்ருச்சாந்தத்ராத் ஸஜாதீயோ விஜாதீய ஷ்ஷிலாதிதஷ"*

ஒரே மரத்தில் காய், கனி என அதன் அங்க்களில் நாம் காணும் பேதம் - மரத்திற்கு மரம் நாம் காணும் பேதம் - தாவர இனத்திற்கும், விலங்கினத்திற்கும் உள்ள இனபேதம் - எனப் பலவகையான பேதங்களைப் பிரபஞ்ச அமைப்புகளில் நாம் பார்க்கிறோம் என்றாலும் அவைகளில் மூலம் ஒன்றுதான்.

பஞ்சதஸி வலியுறுத்துவதைப் பாமரனுக்கும் புரிய வைப்பதே சிவவாக்கியர் - வேதாத்திரியப் பார்வை.

வேதத்தை யான் படித்ததில்லை ஆனால் வேதத்தின் உட்பொருளாய் என்னைக்கண்டேன்..என்பார் வேதாத்திரி மகரிசி.

அனைத்துமாயிருக்கின்ற ஒரே மெய்பபொருளை பற்றிய சத்தியங்களின் தொகுப்பே " வேதாந்தமும் வேதாத்திரியம்."

முந்தையது பழமைக்கு பழமை. பவித்தரமான சமஸ்கிருதத்தில். பிந்தையது புதுமைக்கும் புதுமை, தூய தமிழிலவ். இரண்டும் சிந்திப்பது மூலமற்ற மூலத்தை.

பேதங்கள் உண்டு என்ற கருத்தோடு, அந்த பேதஙகள் எவ்வாறு ஏற்படுகின்றன என்ற விளக்கத்தயும்கொடுத்துத் தத்துவத்தை உணர்த்துகிறது இவர்களது பார்வை.

வெட்டவெளியான சுத்தவெளி மரமாகியது. பாம்பாகியது. விலங்கினமாகியது. மனிதனாகியது.

தன்னை முழுமுதற் பொருளோடு ஐக்கியப்படுத்தி, அந்த முழுமுதற் பொருளான இறைவெளியின் தன்மாற்றச் சரிதிரத்தை தனது சரித்திரமாக உணர்ந்த நிலையில் மாணிக்கவாசகர் அருளியது.

*"புல்லாகிப் புடாய்ப் புழுவாய் மரமாகிப்*

*பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்*

*கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்*

*வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்*

***செல்லா அறின்ற இத்தாவ சங்கமத்துள்***

***எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"***

எல்லாப் பொருள்களிடத்தும் எல்லா உயிர்களிடத்தும் இறைநிலையைக் காண வேண்டும். அப்படிக் காணக்கூடிய அளவு அறிவிலே உயர்வு பெற வேண்டும்.

உலக உயிர்கள் அனைததும் ஒன்று. ஒத்த நிலையுடையன என்பது அவர் கண்ட உண்மை. எல்லா உயிர்களும் தன்னுயிராகப் பாராட்ட விழைந்தார்.

"எவ்வுயிருந் தன்னுயிர்போல் எண்ணுந் தபோதனர்கள்

செவ்வறிவு நாடிமிகச் சிந்தனைவைப்ப தெந்நாளோ" (பாராபர)

அவ்வாறு கருதத் துணையாக நின்றது. அவர் எவ்வுயிரினம் இறைவனைக் கண்டமையே -

"எங்கெங்கு பார்த்தாலும் எவ்வுயிர்க்கும் அவ்வுயிராய்

அங்கங் கிருப்பதுநீ யன்றோ பராபரமே"

இத்தகைய உலக உயிர்கள் அனைத்தும் இன்பமமாக, மகிழ்வோடு வாழவேண்டும் என்பதே அவர் கொள்கை.

***மண்ணும்நீ அவ்விண்ணும்நீ மறிகடல்கள் ஏழும்நீ;***

***எண்ணும்நீ எழுத்தும்நீ இசைந்தபண் எழுத்தும்நீ;***

***கண்ணும்நீ மணியும்நீ கண்ணுள்ஆடும் பாவைநீ-***

***நண்ணும்நீர்மை நிறபாதம் நண்ணுமாறு அருளிடாய்.***

என்று அனைத்தும் நீயே என்கிறார் சிவவாக்கியர்.

காட்சி என்பது எது? அக்காட்சி எவ்வாறு அமைய வேண்டும்? கண்காட்சி, விலங்குக் காட்சி முதலியவைகளைக் கண்டு களிக்கிறோம்.

ஆனால் இவைகள் யாவும் நற்காட்சிகள் ஆகாது. எல்லாவற்றையும் ஒன்றுபோல் காண்பதுவே சிறந்த காட்சியாகும்.

”ஒன்றாகக் காண்பதுவே காட்சி என்று அருளினார் ஔவையார்.

ஏழை, பணக்காரன், இன்பம், துன்பம், இகழ்ச்சி, புகழ்ச்சி, ஏற்றம், தாழ்வு போக்கையும் - வரவையும் - வந்தனையும், நிந்தனையையும் ஒன்றாகப் பார்ப்பதுவே, காட்சி.

காட்சி - பளிங்கு போல் தூய மனமுடையவர்க்கே இது அமையும். இன்ப துன்பத்திற்குக் காரணம் நாம் செய்த வினைகளேயாகும்.

ஆவாரையாரே அழிப்பார்? சாவாரை யாரே தவிர்ப்பர்? ஒருவராலும் ஆகாது.

இதை உள்ளுணர்வாகப் பெறுவோமானால் யார் மீதும் காய்த்தல், உவத்தல் உண்டாகாது.

கண்ணபிரான் உயர்ந்த வெண்ணையையும் உண்டார் - மண்ணையும் உண்டார். தருமர் இகழையும், புகழையும் ஒன்றாகப் பார்த்தார்.

இராமர் காட்டையும் - நாட்டையும் ஒன்றாகப் பார்த்தார். அப்பர் அடிகள் பொன்னையும், மண்ணையும் ஒன்றெனப் பாத்து உழவாரப் படையால் பேர்த்து எறிந்தார்.

ஒரு கணவனும், மனைவியும் நல்லறமாகிய இல்லறத்தில் முறையாக வாழ்வாங்கு வாழந்தார்கள். பின்னர் இருவரும் துறவு புண்டு தேசாந்திரம் சென்றார்கள்.

ஒரு நாள் இருவரும் கடற்கரை வழியே செல்கிறர்கள். ஆண் துறவி முன்னே செல்ல அவர்கள் கண்களில் எப்போதோ யாராலே விடப்பட்ட வைர வளையல் படுகிறது.

அதில் அவருக்கு பற்று வரவில்லை. ஒரு வேளை பின்னால் வருகின்ற தன் மனைவிக்கு பற்று வந்து விட்டால் என்ன

செய்வது என்றும் அவளது துறவித் தூய்மைக் கெட்டுவிடுமே என்று மணலைப் போட்டு மூடுகிறார்.

இதை கவனித்த பெண் துறவி சுவாமி! எதை மூடுகிறீர்கள் என்று கேட்க, ஒன்றுமில்லை என்று ஆண் துறவி கூறினார்.

சுவாமி துறவிகள் பொய் கூறக் கூடாது, உள்ளதை உரைக்கவும் என்று கேட்டார்.

அதற்கு ஆண்துறவி ஒரு வேளை நான் பார்த்த மறைந்த இந்த வைர வயைலை நீ பார்த்தால் அதன்மீது ஆசை வந்து விடுமே என மறைத்தேன் என்றார்.

நீர் துறவி தானா? துறவுக்கும் உமக்கும் எத்தனை தூரம்? வைரம் என்றும் மணல் என்றும் வேற்றுமைக் காட்சி வரலாமா? மண்ணையும்., பொன்னையும் ஒக்கவே நோக்குவது தான் துறவியின் இலக்கணம்.

***"ஓடும், ஆக்கமும் கெட்ட திருவினார்***

***ஓடும் செம்பொனும் ஒக்கவே!***

***நோக்குவார்" பெரியபுராணம்.***

இக்கருத்தையே வேதாத்திரி மகரிசி ,"எங்கும் எதிலும் , இறைநிலையின் காட்சி" என்று கூறுகிறார்.

பாரதியார் -"காணும் இடங்களெல்லாம் நந்தலாலா உந்தன் கரிய நிறம் தோன்றுதடா நந்தலாலா " என்கிறார்.

சிவவாக்கியர் . " மண்ணும்நீ அவ்விண்ணும்நீ" என்கிறார். மகான்கள் பார்வைகள் அனைத்தும் ஒன்றே.

அங்கு இங்கு என்று சொல்ல முடியாதபடி, அண்ட வெளி முழுவதும் எங்கும் நிறைந்து விளங்கும் ஒளிமயமாகி, உயிர்களுக்குப் பேரின்பத்தை நல்கும் நிறைவான ஒன்றாகி. தனது

திருவருளாகிய சத்தியோடு கூடி, எங்குமாய் நிறைந்து நிற்கின்றது இறையாற்றல்.

# 5. உடலே இறையுறையும் கோயில்

சித்தர் மரபில் மனிதவுடல் என்பது பேரண்டத்தின் குறுவடிவமாகக் கொள்ளப்படுகின்றது.

உடலை ஒப்புக்கொள்கின்றவன் உலகையே ஒப்புக் கொண்டவனாகின்றான் என்பதே சித்தர்களின் நிலைபாடு.

உருவிலங்குமேனி எனும் புலன்களால் உணரத்தக்க மனித உடலின் தன்மை காலத்தால் அழிவதும், திருவிலங்குமேனி எனும் அகவுணர்வால் உணரத்தக்க உடல் அழியாமற் பாதுகாக்கப்பட வல்லதுமாகும் என்பது சிவவாக்கியர் கொள்கை.

***"உருவிலங்கு மேனியாகி யும்பராகி நின்றநீர்***
***திருவிலங்கு மேனியாகச் சென்றுகூட லாகுமே"***

என்று அவர் உறுதியளிக்கின்றார்.

சிவவாக்கியத்தின் ஆறாவது பாடல் முக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

***"வடிவுகண்டு கொண்டபெண்ணை மற்றொருவ னத்தினால்***
***விடுவனோவ வனையின்னம் வெட்டவேணு மென்பனே***
***நடுவன்வந் தழைத்தபோது நாறுமிந்த நல்லுடல்***
***சுடலைமட்டுங் கொண்டுபோய்த் தோட்டிகைக் கொடுப்பரே"***

இதன் பொருளாவது, யாக்கையே இறைவனை அறியவல்ல கருவியாக இருக்கும்போது, அதனைப் பேணாது புறக்கணித்து முடிவில் மரணமடைந்து சுடலையில் எரிபடக்கொடுக்கின்றனர்.

அடுத்ததாக சிவவாக்கியர் சொல்லணிமிக்க ஒரு கேள்வியைக் கேட்கின்றார்:

இதே மனிதர்கள் அழகிய உடல்வடிவுள்ள பெண்ணைத் தேடிக்கண்டுபிடித்து திருமணம் செய்துகொண்ட பின், அப்பெண்ணை

மற்றொருவன் கவர்ந்து கொண்டு போக எண்ணினால் அனுமதிப்பார்களா?

ஆகவே மாந்தர் தங்கள் இல்லப் பெண்களைக் காப்பது போல யோகமுறைகளால் தத்தம் உடல்களையும் பேணிப் பாதுகாக்க வேண்டும் என மக்களுக்கு உணர்த்துகிறார்.

***"சருகருந்தி நீர்குடித்து சாரல்வாழ் தவசிகாள்***
***சருகருந்தில் தேகங்குன்றி சஞ்சலமுண் டாகுமே***
***என உதிர்ந்த இலைச்சருகுகளை மட்டும் தின்று,***
***தண்ணீரையும் குடித்து மலைச்சாரல்களில் வாழும்"***

தவசிகளிடமும் அவர் உடலைப் பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகின்றார்.

இவ்வாறு, மனிதவுடலுக்கான முக்கியத்துவத்தையும், அதன் உள்ளார்ந்த பயனையும் சுட்டிக்காட்டுகின்றார் சிவவாக்கியர்.

தெய்வம் உனக்குள் குடியிருக்க விரும்பினால், உடல் என்னும் கோயிலை தூய்மையாக வைத்துக் கொள்.தர்ம சிந்தனை என்பது செயலில் காட்ட வேண்டும்.

உடலாகின்ற கோவிலில் இறைவனைக் காணலாம் என உறுதியாக நம்பிக்கையூட்டுகிறார் அவர்.

ஆனால், ஞானம் கொண்டு நல்லெண்ணத்துடன் வணங்கவேண்டியது அவசியம்.

***"ஞானமான பள்ளியில் நன்மையாய் வணங்கினால்***
***காயமான பள்ளியில் காணலா மிறையையே."***

அதுமட்டுமன்று, எவ்வாறு குடமானது நீரில் அமிழ்த்தப்படும்போது வெள்ளத்தால் நிரம்பப் படுகின்றதோ, அவ்வாறே எங்கும் இறைமயமாக இருக்கின்ற இவ்வெளியிலுள்ள இவ்வுடலும் சிவத்தால் நிறைந்திருக்கின்றது என்பதனை,

*“அக்குடஞ் சலத்தைமொண் டமர்ந்திருந்த வாறுபோல்*
*இச்சடஞ் சிவத்தைமொண் டுகந்தமர்ந் திருப்பதே”*

என்று விளங்கக் கூறுகின்றார்.

மனிதவுடலுருவால் ஆன அரங்கமே இறைவனின் திருவரங்கம் என்ற உண்மையறியாது உழலும் மாந்தர்களைக்கண்டு அவர் வருந்துகிறார்.

*“உருவரங்க மாகிநின்ற வுண்மையொன்றை யோர்க்கிலீர்*
*கருவரங்க மாகிநின்ற கற்பனை கடந்துபின்*
*திருவரங்க மென்றுநீர் தெளிந்திருக்க வல்லீரே.”*

இங்ஙனம் இறைவனை மெய்யுள் காணும் பயிற்சி நாடாமல் வெளியேதேடி அலையும் மக்களை நோக்கி,

*“தூரந்தூரந் தூரமென்று சொல்லுவார்கள் சோம்பர்கள்*
*பாரும்விண்ணு மெங்குமாய்ப் பரந்த அப் பராபரம்*
*ஊருநாடு காடுமோடி யுழன்றுதேடு மூமைகாள்*
*நேரதாக வும்முளே யறிந்துணர்ந்து கொள்ளுமே”*

எனவும்,

*“காடுநாடு வீடுவிண் கலந்துநின்ற கள்வனை*
*நாடியோடி யும்முளே நயந்துணர்ந்து பாருமே”*

எனவும் கடிகிறார்.

அதுமட்டுமன்று,

*“உறியிலே தயிரிருக்க ஊர்புகுந்து வெண்ணெய்தேடும்*
*அறிவிலாத மாந்தரோ டணுகுமாற தெங்ஙனே”*

என்றும் வருந்துகிறார் சிவவாக்கியர்.

சிவவாக்கியர் மனிதவுடலைத் தனிமுதலான மெய்ப்பொருளை அடைவதற்கான புனித வழியின் வாயிற்படியாக அடையாளம் காட்டுகிறார்.

புண்ணிய நதிகளெனவும், கோயில்களெனவும், மலைகளெனவும் அநேகவாசல்களைத் தேடிப்போவானேன். ஏழையான மனிதனுக்குகந்த புனிதவாசல் உடலான இவ்வாசலே.

***“அண்டவாச லாயிரம்ப்ர சண்டவாச லாயிரம்***
***ஆறிரண்டு நூறுகோடி யானவாச லாயிரம்***
***இந்தவாச லேழைவாச லேகபோக மானவாசல்***
***எம்பிரான் இருக்கும்வாசல் யாவர்காண வல்லரே.”***

என்று அவர் பாடுகிறார்.

உள்ளம் பெருங்கோயில் - திருமந்திரம்

***உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்***
***வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்***
***தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்***
***கள்ளப் புலனைந்துங் காளா மணி விளக்கே.***

ஐந்து புலன் களும் நம்மை மோசமாக்குவதாக விளக்கம் சொல்லி வருகிறோம்.இந்த நகலொட்டு அற்புதமானது. ஆனால் அதுவும் அதையே சொல்கிறது. இதன் விளக்கம் வேறு.

புலன் களுக்கு கட்டளை மூளையிலிருந்து பிறக்கும். ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்ட டேட்டா பேசிலிருந்து சிக்னல்கள் ஆராயும்.

அதன் பின்னர் காம க்ரோத மோகாதி குணங்கள் கட்டவிழ்த்து புலன் தன் வேலையை செய்யும். இதன் பலன் நுகரிச்சியை அனுபவிப்பது மனமே.

இங்கு நமக்கு தெரியாத விஷயம் ஆலயம், பெருங்கோவில் என்று உள்ளத்தையும், உடலையும் ஏன் சொல்ல வேண்டும்?

## உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்

காளாமணி பஞ்ச முக விளக்கு. ஐம்புலன் களும் அதை குறிக்கலாம். அந்த தீபங்கள் கோவிலுக்குள்ளும் வீட்டுக்குள்ளும் ஏற்றப்படுகையில் அதன் உயரங்கள் கூட ஆகம விதிப்படி மாறும்.

வீட்டில் உள்ள தீபம் அரையங்குல உயரமே ப்ரகாசிக்க வேண்டும். கோவில்களில் மூன்றங்குலம் வரை அனுமதி உண்டு. இந்த ஒளியில் தேடினால் இறையுருவம் கர்ப்ப கிரஹத்தில் தெரியும்.

ஆக புலன் களை அடக்க சொல்லவில்லை. மாறாக நியமத்துடன் அவற்றை துலங்க செய்து , அவ்விளக்கின் ஒளியால் பரமனை காண் என்பது தத்துவம்.

## காளா மணி விளக்கு என்றால் என்ன ?

காளா மணி விளக்கு என்பது, பழைய காலத்தில் அரண்மனை, கோவில் போன்ற இடங்களில் உபயோகத்தில் இருந்த பெரிய விளக்கு.

அதற்கு முன்னால் திருமூலர் சொன்ன அந்த மூன்று வார்த்தைகளையும் சேர்த்துக் கொண்ட வேண்டும்.

அப்பொழுதுதான் முழுமையான விளக்கம் கிடைக்கும். கள்ளப் புலனைந்தும் காளா மணி விளக்கே !!

புலன்கள் மூலமாகவே நாம் புறவுலகை உணர்ந்து நம் அறிவை விருந்தி செய்து கொள்கிறோம்.

எனவே புலன்களே புறவுலகை அறிந்து கொள்ள உதவும் விளக்குகளாக இருக்கின்றன.

ஆனால் அந்தக் கள்ளப் புலன்கள் நம்மை புலனின்ப நாட்டத்தில், மாயையில் ஆழ்த்தி விடக் கூடிய பெரிய மாய விளக்குகளாக இருக்கின்றன.

இது இறைவனின் செயல்தான். மாயையில் அழுந்தித் துன்புற்று உண்மை விளக்கம் பெற வேண்டும் என்பதற்கே இந்த ஏற்பாடு.

எனவே அவன் நம் தலையாகிய சகஸ்ராரத்தில் உள்ள, பிரம்மரந்திரத்தின் கோபுரவாசல் வழியாக( அதுதான் முதல் வழி, வழியை வாய் என்று குறிப்படிடுவார்கள்.

வாய்+ இல் = வாயில்) நுழைந்து உடலெனும் ஆலயத்தின் உள்ளமெனும் கருவறையில் உயிராகிய சிவலிங்கமாக வீற்றிருக்கிறான்.

பொதுவாக குழந்தைகளுக்கு புலன்கள் பற்றிய அறிவு வளரவில்லை. எனவே குழந்தைகள் முப்பரிமாண நிலையைக் கடந்த நிலையில் இருக்கின்றன.

எனவே குழந்தைகளுக்கு மனோ விருத்தி ஏற்படுவதில்லை. குழந்தைகளுக்கு அறிவு கிடையாது. வளர வளரவே அனுபவங்கள் மூலமாக அறிவைப் பெறுகின்றன என்று சிலர் சொல்வதுண்டு.

அது முற்றிலும் தவறு. உண்மையில் குழந்தைகளின் அறிவு பிரகாசமாக இருக்கிறது. ஒருவன் வளர வளர அனுபவங்களோடு கூடவே களங்கங்களும் வளர்ந்து விடுகின்றன.

எனவே அவன் சுயம்ப்ரகாசமான ஆன்ம இயல்பை இழந்து போகிறான். ஆனால் குழந்தைகளுக்கு அவ்வாறு இல்லை.

அறிவில் ஆன்ம ஒளி தகதகவென ஜொலிக்கிறது. அவர்கள் மூளை மற்றும் உடலெங்கும் பிரபஞ்ச ஆற்றல் குறைவுபடாமல் தளும்பி நிற்கிறது.

மனம் மற்றும் சொல், செயல்கள் வாயிலாக அவை தங்களுடைய சக்தியை விரையம் செய்து கொள்வது இல்லை.

மேலும், வளர்ந்த நம் உடலில் உள்ள உயிர் சக்திதான், அந்தச் சிறிய உடம்பில் குறைவின்றி நிறைவாகத் திகழ்கிறது.

நாமோ வளர வளர உயிர் சக்தி குறைபாடு உள்ளவர்களாக ஆகி விடுகிறோம். இந்த காரணத்தால்தான் குழந்தைகள் மிக அழகாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்கின்றன.

ஆன்மா எவ்வளவு அழகானது என்று ஒரு குழந்தையைப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

எனவே வளர்ந்து அனுபவம் பெற்று விட்டதால் தான் பெற்றுள்ள அறிவு பேரறிவு என்று ஒருவன் கருதுவானாகில் அவனே உலகின் தலைசிறந்த அஞ்ஞானி.

ஏனென்றால் பேரறிவு அல்லது வாலறிவு என்பது பரம்பொருளுக்குரியது. மனிதர்களாகிய நாம் பெற்றுள்ள அறிவு சிற்றறிவேயாகும்.

அறியும் தன்மை ஆன்மாவுக்குரியது. எனவேதான் இறைவனை வாலறிவாளன் என்பார்கள்.

ஆனால், ஜீவாத்மனோ சிற்றறிவு கொண்டவன். இந்த சப்த தாதுக்கள், ஐந்து கோசங்கள், ஐம்புலன்கள் மயமாகத் தன்னை உணரும் மனிதனின் அறிவு சிற்றறிவாகும்.

அறிவை அறிவதற்கு அறிவால்தான் முடியும். புலன்களால் அறிவை அறிந்து கொள்ள முடியாது.

நம்மை நாம் ஆராய்ந்து பார்த்தால்தான் இந்த உண்மை புலப்படும். இதையே தன்னையறிதல் என்பர்.

உதாரணமாக ஒருவனைப் பலர் விரட்டிக் கொண்டு வருகிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்.

அவன் போய் இருட்டில் மறைந்து கொள்கிறான். அவனைத் தேடி வந்தவர்கள் ஒருவருக்கொருவர் அவன் இங்கு இல்லை என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

அதைக் காதால் கேட்ட உடன் மறைந்திருப்பவன் நாம் இங்குதானே இருக்கிறோம்.

ஆனால், இல்லை என்று சொல்கிறார்களே, ஒரு வேளை நாம் இல்லையோ என்று எண்ணுகிறானா ?

இல்லையே. தான் இருப்பதற்கு தானே சாட்சி. இருக்கிறான் என்றோ, இல்லை என்றோ சொல்கிற வார்த்தை அவனை விளக்குறதா ? இல்லையே. அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள்.

ஆனால், அவன் இருக்கிறான். அது போல உலகப் பொருள்களைக் காட்டுவது போல ஆன்மாவின் இருப்பை சொல்லால் சுட்டிக் காட்டி விட முடியாது.

அடுத்து கண் இருக்கிறது. ஒளிந்திருப்பவனுக்கு தன் உடலைக் காண முடிவதில்லை.

ஏனென்றால் இருள். மற்றவர்கள் அவன் அங்கு இல்லை என்று சொன்னாலும் கூட தன் இருப்பை அவன் உணர்கிறான்.

தன்னுடைய அந்த உணர்வே அதற்கு சாட்சி. அதாவது ஆன்மா தன்னைத் தானே காண்கிறது.

ஊனக் கண் அதைக் காணாது. இது போலத் தொடு உணர்வை எடுத்துக் கொள்வோம். தொடு உணர்வு உடலெங்கும் பரவி உள்ளது.

உஷ்ணம், குளிர்ச்சி, மென்மை, கடினம் போன்ற உணர்ச்சிகளை இது உணரக் கூடியது. இது நிலம், நீர், காற்று, நெருப்பு இவற்றையெல்லாம் உணர்ந்து கொள்கிறாது.

ஆனால், ஆகாயத்தை உணர முடிகிறதா ? முடியவில்லையே ? பஞ்சபூதங்களில் ஒன்றாகிய ஆகாயத்தையே உணர முடியாத பொழுது அதனினும் நுட்பமான பரம்பொருளை எங்ஙனம் உணர முடியும் ? தொடு உணர்வாலும் ஆன்மாவை உணர முடியாது.

அது போலவே உடலுக்கு தகுந்தது எது, தகாதது எது என்று சுட்டிக்காட்டி சுவையை உணரும் நாக்கால் ஆன்மாவை சுவைத்து உணர முடியுமா ? முடியாது.

அடுத்தது மூக்கு. இதன் மூலம்தான் சுவாசிக்கிறோம். எண்ணெயில்லாமல் விளக்கு எப்படி எரியாதோ, அது போலச் சுவாசம் இல்லாமல் வாழ முடியாது.

அத்தகைய வாழ்வாதாரமான வாயுவில் உள்ள நலன் கேடுகளையெல்லாம் தன் மோத்தல் மூலம் விளக்கிக் காட்டும் மூக்கால் ஆன்மாவை முகர்ந்து உணர முடியுமா ? முடியாது.

எனவே பொறிகளால் ஆன்மாவை, அறிவை அறிய முடியாது. ஆனால், பொறிகளால்தான் ஒருவனுக்குப் பிரபஞ்சம் பற்றிய ஞானமும், தெளிவும் வாய்க்கிறது.

ஆனால், ஆன்மாவை விளக்க பொறிகளால் ஆகாது. சமாதி நிலையில் பொறிகள் செயலற்றுப் போய் விடுகின்றன.

எனவே ஜீவனும் ஒடுங்குகிறான். எனவேதான் பொறிகள் வயப்பட்ட மனிதர்களால் ஆன்மாவை, ஆன்ம தத்துவத்தை உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

கள்ளப் புலன்கள் வசப்பட்ட மனமும் ஜட நிலையில் திகழ்வதால் சூக்குமத்தை உணர முடியவில்லை.

வள்ளுவர் சொல்வது போலப் பொறி வாயில் ஐந்தவித்தால் ஆன்மாவை அறிவால் அறியலாம்.

அவ்வாறல்லாத வரை எப்படித்தான் புளியைப் போட்டு விளக்கினாலும் சூக்குமத்தை ஜட மனம் உணராது. கேள்விகளால் குமைந்து கொண்டேயிருக்கும்.

## ஊனுடம்பே ஆலயம் - மகரிசி

உடலும் உயிரும் இசைந்து வணங்கி இயங்கும் நிலையில் இணைக்கப் பெற்று வாழ்ந்து வருபவன் மனிதன்.

அற்புதமான தொகுப்பாக உள்ள உடல் அமைப்பு, வியத்தகு ஆற்றல்களை உள்ளடக்கமாகக் கொண்ட உயிர்ச்சக்தி, குறுகியும், விரிந்தும், நுணுகியும் இயங்கத்தக்க அறிவுத் திறன் இவை

இலட்சக்கணக்கான ஆண்டுகளாகக் கருமூலம் பிறவித் தொடராக மேலும் மேலும் சிறந்து மிகவும் உயர்ந்த நிலையை எய்தியுள்ளன.

ஒரு உயர்ந்த குறிக்கோளோடு மனித உயிர்கள் இவ்வுலகுக்கு வந்துள்ளன. மன உணர்வை விரிந்த அளவில் வளர்த்துக் கொள்ளவும், அறிவில் முழுமை பெற்று இயற்கையை உணர்ந்து, ரசித்து அதனோடு ஒன்றி வாழ்ந்து நிறைவு பெறும் நிலையான அமைதியைப் பெறவும் உள் நோக்கமாக அமைந்துள்ளதே மனித உயிர்.

அறிவின் உயர்வு பெற்று உயிரின் மதிப்பும் சிறப்பும் உணர்ந்து நிறைவு பெறுவதே மனிதப் பிறவியின் நோக்கமெனினும், அது வெற்றி பெற உடலை நலமோடும் வளமோடும் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்." என்பார் வேதாத்திரி மகரிசி

## உடலோம்பல் இறைவழிபாடு - வேதாத்திரி மகரிசி

இவ்வளவு சாப்பிட்டால் போதும், நன்கு ஜீரணமாகும். உடல் நன்றாக இருக்கும் என்று தெரிந்து அளவோடும், முறையோடும் சாப்பிடுவோம்.

ஆனால், சுவையாக இருக்கிறது என்று அதிகமாகச் சாப்பிட்டால் அதனைச் ஜீரணிப்பதற்கு வேண்டிய அதிகப்படியான அமிலம் எங்கிருந்து சுரக்கும்?

பற்றாக்குறையின் காரணமாக உணவு செரிக்காமல் தேங்கிப் போவதால் புளித்துப் போகிறது. அது வயிற்றில் புண்ணை உண்டாக்கித் துன்பம் தருகிறது.

மனிதன் அறியாமையால் செய்யும் தவறுகள் தான் துன்பமாக விளைகிறது. இறையின் ஆற்றலால் எல்லாம் சரியாக நடக்கிறது.

ஆனால் நாம் ஆசையினால், மறதியினால், இறைவனின் செயலை மறந்ததினால் அதிகமாகச் சாப்பிட்டோம் .

அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம். இறைவன் செயலில் குறுக்கிட்டோம். உறுப்புக் கெட்டுவிட்டது. அதன் விளைவாகத் துன்பத்தை அனுபவிக்கிறோம்.

இறையருள் எல்லாச் செயலிலும் கலந்து சரியான பலனைத் தந்து கொண்டே இருக்கிறது. நாம் அதைத் தடுத்தால் அந்தத் தடைக்குத் தகுந்தவாறு துன்பம் வரும்.

இதைத் தெரிந்து கொண்டால் இறைவனுக்குப் பயந்து நடக்க வேண்டுமென்று முன்னோர்கள் சொன்னது தவறா?

தவறாகச் செய்தால் துன்பந்தான் வரும். சரியாகச் செய்தால் இன்பமே நிலைக்கும். இந்த உண்மையைத் தெரிந்து கொள்கிறபோது இறையுணர்வு வருகிறது.

அதற்கு ஏற்றவாறு இந்த உடலுக்கு உணவு, ஓய்வு, உடலுறவு, எண்ணம், உழைப்பு இந்த ஐந்தையும் அலட்சியம் செய்யாமல், அதிகமாக அனுபவிக்காமல், முரணாக அனுபவிக்காமல் நாம் பார்த்துக் கொள்வோம்.

உடல் நலமாக இருக்கும். மனமும் அமைதியாக இருக்கும், அப்படி அறிவின் தெளிவோடு உடலை நலமாக வைத்துக் கொள்வதும் இறைவழிபாடு தானே?

## 6. என்னிலே இருந்த ஒன்றை அறிந்தேன்

உனக்குள் இறைவன் இருப்பதைப் போலவே உன் சக மனிதனுக்குள்ளும் இறைவன் இருக்கிறான்.

எனவே இறைவனுக்கு நீ ஏதேனும் தர விரும்பினால் சக மனிதனுக்கு கொடு.அவனுக்குள்ளே இருக்கும் இறைவன் அதை பெற்றுக்கொள்வான்.

என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்தது இல்லையே
என்னிலே இருந்தஒன்றை யான்அறிந்து கொண்டபின்
என்னிலே இருந்தஒன்றை யாவர்காண வல்லரோ?
என்னிலே இருந்திருந்து யான்உணர்ந்து கொண்டனே.

ஊர் எல்லாம் இருக்கும் இறைவன் உனக்குள்ளும் இருக்கின்றான்.. உனக்குள் இருக்கும் இறைவனை விட்டு ஊரேல்லாம் தேடினாலும் கிப்பானோ...

உனக்குள் இறைவன் இருப்பதை போலவே உன் சக மனிதனுக்குள்ளும்

இறைவன் இருக்கிறான் எனவே இறைவனுக்கு நீ ஏதேனும் தர விரும்பினால் சக மனிதருக்கு கொடு அவனுக்குள்ளே இருக்கும் இறைவன் அதை பெற்றுக் கொள் வான்.



ஒரு பாறை என்ற உருவப்பொருள். அதை வடித்தால் கிடைப்பது பல வடிவங்கள் ...அவை ஒரே மூல பொருளால் செய்யபட்டதோ , அதுபோல் இயற்கையில் உள்ள பொருள்கள் எல்லாம் ஒரே பொருளால் செய்யப்பட்டதாகும்.

பாறைக்குள் எப்படி எந்த அசைவும் இருக்காதோ அதேபோல் இயற்கைக்குள் எந்த அசைவும் இல்லை என்பது தான் உண்மை.

அப்படியென்றால் உலகம் தெரிகிறதே அசைவுகள் தெரிகிறதே என்றால் அது அப்படியாக தெரிவது மாயையே.

ஒரு புகைவண்டியில் பயணம் செய்யும் போது எதிரே இருப் பவர்கள் பின்னோக்கி செல்வது போல் தெரியும் .

உண்மையில் அவர்கள் அதே இடத்தில் நிற்ப்பார்கள் , அதுவும் மாயை ....அசைவு நம் வண்டியில் தான் உண்டு , அது போல அவரவர் உடலில் உண்மை தனி மனித ஆற்றல் உண்டு.

அதன் அசைவுகள் உணர்ந்தாலே உண்மை இறைவனை உணர் முடியும் .

*”உன்னிலே நானடங்க என்னுளே நீ விளங்க*

*உனதுஅருள் ஒளிர எனதுள்ளம் தூய்மை பெற்றேன்.*

*இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்*

*எடுத்த மனிதப் பிறபெய்தியதே முழுமை”*

என்று ஞானக்களஞ்சில் மகரிசி விளக்கியுள்ளார்.

இது எல்லாருக்கும் சாத்தியமே. பிரம்மம் என்ற பேராதார நிலையை ஐயமின்றித் தெளிவாக உணர்ந்தவர்கள்தான்,

*"எல்லாம் வல்ல தெய்வமது*
*எங்கும் உள்ளது நீக்கமற*
*சொல்லால் மட்டும் நம்பாதே*
*சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்*

*வல்லாய் உடலில் இயக்கமவன்*
*வாழ்வில் உயிரில் அறிவுமவன்*
*கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்*
*காணும் இன்ப துன்பமவன்*

*அவனின் இயக்கம் அணுவாற்றல்*
*அணுவின் கூட்டுப் பக்குவம்நீ*
*அவனில்தான்நீ, உன்னில் அவன்*
*அவன்யார்? நீயார்? பிரிவேது?*

*அவனை மறந்தால்நீ சிறியோன்*
*அவனை அறிந்தால்நீ பெரியோன்*

***அவன்நீ ஒன்றாய் அறிந்தஇடம்***
***அறிவு முழுமை அதுமுக்தி*** -அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி –

நானே கடவுளின் தூதன் என்கிறார்கள் சிலர். நானே கடவுள் என்கிறார்கள் சிலர். உண்மையான கடவுள் எங்கேதான் இருக்கிறார்?

ஒரு மனிதன், ஞானி ஒருவரைத் தேடிப் போனான். ‘‘நான் கடவுளைச் சந்திக்க வேண்டும்!’’ என்றான். அவர் ‘பளார்’ என்று இவன் கன்னத்தில் அறைந்து விட்டார். இவன் பயந்து ஓடிப் போனான்.

பக்கத்திலிருந்தவர்கள் ஞானியிடம் கேட்டார்கள்: ‘‘அவனை ஏன் அறைந்தீர்கள்?’’

‘‘அவன் ஒரு பைத்தியக்காரன்!’’

‘‘அப்படியா?’’

‘‘ஆமாம்! அவனையே அவன் தேடிக் கொண்டிருக்கிறான்!’’

#உன்னில் கடவுளை தேடு

***”அவனில் அணு , அணுவில் அவன்,***
***உன்னில் எல்லாம், நீ அறி உன்னை.”*** - வேதாத்திரி மகரிஷி

- ***நினைப்பதொன்று கண்டிலேன் நீயலாது வேறிலை,***
***நினைப்புமாய் மறப்புமாய் நின்றமாயை மாயையோ?***
***அனைத்துமாய் அகண்டமாய் அனாதிமுன் அனாதியாய்***
***எனக்குள்நீ உனக்குள்நான் இருக்குமாற தெங்ஙனே.***

- சிவவாக்கியார்.

நீ நானாக கண்டேன் :

இறைவா ! நான் எனைவிடுத்து உன்னை மதித்தேன்!
எவரெவரோ புனைந்த கற்பனைகள் கொண்டு,

நிறைவில்லை; என்அறிவோ நிலைக்க வில்லை ;
நேர்வழியோ புரியவில்லை; நினைத்து ஆழ்ந்தேன்;

மறைபொருளாய் இயங்கும் எனதறிவைப் பற்றி
நானுணர்ந்தேன். அங்குநீ நானாய்க் கண்டேன்;

உறைந்து விட்டேன் உன்னில்நான்; உணர்ந் துணர்ந்து
உலகுஇதை உணர்த்துய்யத் தொண்டு ஏற்றேன் ."

--அருள் தந்தை

# 7. . அஞ்ஞானிகள்

போலித்துறவிகளையும், பொய்த் தவவேடமணிந்தவர்களையும் நையாண்டிசெய்வதில் சிவவாக்கியர் ஒருபோதும் இரக்கம் காட்டியதில்லை.

அகநிலையனுபூதி பெற்ற மெய்யடியார்கள் தம் நிலையை எப்போதும் மறைத்து வைத்திருப்பர்.

அதல்லாதவர் வெளிவேடங்களாலும் நடிப்புக்களாலும் தம்புகழ்பாடித் திரிவர். சிவவாக்கியர் அத்தகைய போலி ஞானிகளை நாய்களுடன் ஒப்பிட்டு

ஞானிஞானி என்றுரைத்த நாய்கள்கோடி கோடியே என வெளிப்படையாகத் தாக்குவதற்கும் அஞ்சவில்லை.

”குண்டலங்கள் பூண்டுநீர் குளங்கடோறு மூழ்கிறீர் மண்டுகங்கள் போலநீர் மனத்தின்மா சறுக்கிலீர்” - என்றும்,

வெந்தநீறு மெய்க்கணிந்து வேடமுந் தரிக்கிறீர்; - என்றும்,

காவியுஞ் சடாமுடிக் கமண்டலங்க ளாசனம் தாவுருத்தி ராட்சம்யோகத் தண்டுகொண்ட மாடுகள்” - என்றும்

முத்திசேரச் சித்தியிங்கு முன்னளிப்பேன் பாரெனச் சத்தியங்கள் சொல்லியெங்குஞ் சாமிவேடம் பூண்டவர் என்றும்

நீரினிற்கு மிழியையொத்த நிலையிலாத காயமென் றூரினிற் பறையடித்து உதாரியாய்த் திரிபவர்” - என்றும்

பலவிதமாகக் கபடத்துறவி வேடம்போட்டவர்களிடம் சிக்காமலிருக்கப் பல பாடல்களில் மக்களைச் சிவவாக்கியர் எச்சரிக்கிறார்.



அவர்களைத் தனது பல பாடல்களிலும் வேடமிட்ட மூடர், சாத்திரச் சழக்கர், பாதகக் கபடர், மதியிழந்த பித்தர், மடிப்புமோசஞ் செய்பவர், கருத்தழிந்த கசடர், பிரக்ஞைகெட்ட மூடர், குணங்கெடுங் குருக்கள் என்றெல்லாம் பலவாறாக வசைபாடுகின்றார்.

"மெதுவாக முணமுணவென்று சொல்லி உட்கார்ந்திருக்கும் மூடர்களே! நீங்கள் அள்ளி அள்ளி நீரை மேலெ எறிந்ததேது? உள்ளங்கையாற் குழைத்ததேது? திருட்டுவேடம் தரித்ததேது? கண்ணைமூடி விட்டதேது? அதன் விசேடத்தைச் சொல்லுவீர்களாக"

அள்ளிநீரை யிட்டதே தகங்கையிற் குழைத்ததேது
மெள்ளவே முணமுணென்று விளம்புகின்ற மூடர்காள்
கள்ளவேட மிட்டதேது கண்ணைமூடி விட்டதேது
மெள்ளவே குருக்களே விளம்பிடீர் விளம்பிடீர்"

என்று கேட்கின்றார்.

மனதிலுள்ள ஆசையெனும் மாயக்கட்டவிழ்ந்து ஆழமான ஆன்மிகஞானம் கைவரப்பெற்ற யோகியர் மங்கையின் மார்பகத்தடியில் இருந்தாலும் அவர்கள் உலகமயக்கத்திற்கு வயப்படாமல் வினைத்தொடரை அறுத்தெறிந்து இருப்பர்.

ஆனால் மனவொடுக்கம் பெறாததால் பற்றறாத ஒரு யோகி மௌனம்பூண்டு வனத்தில் வாழ்ந்தாலும், மனதின்கண்ணுள்ள மாயையை அறுத்தொழித்தவராக மாட்டார் என்பதனை சொல்நயம் படைத்த அருமையான ஒரு பாடலால்ச் சிவவாக்கியர் உரைக்கின்றார்.

மனத்தகத் தழுக்கறாத மவுனஞான யோகிகள்
வனத்தகத் திருப்பினும் மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மவுனஞான யோகிகள்
முலைத்தடத் திருப்பினும் பிறப்பறுத் திருப்பரே."

ஐம்புலன்களையும் வெல்லாது அவற்றின் வழியே செல்லும் அஞ்ஞானிகளுக்கு அன்னதானம் முதலான தருமங்கள் செய்வதும் வீணே. அத்தகைய போலித் துறவிகளுக்கு ஈகைசெய்வது தீமையையே விளைவிக்கும்.

ஐம்புலனை வென்றிடா தவத்தமே யுழன்றிடும்
வம்பருக்கு மீவதுங் கொடுப்பதும்ம வத்தமே
என்பதே சிவவாக்கியரின் அறிவுரை.

நல்ல இடங்களைத் தேடி அவற்றைச் சுத்திசெய்து பீடமிட்டு, அதன் மீது திருநீறு பூசி அமர்ந்து அருமையாகத் தவங்கள் செய்வார்கள்.

ஆனால், ஆன்ம வடிவினனான இறைவன் ஒடுங்குமிடமும் உதிக்குமிடமும் யாதென்று அறிந்து பின் தவம் செய்யுங்கள் என்று அறிவுறுத்துகின்றார் சிவவாக்கியர்.

இடங்கள்பண்ணி சுத்திசெய்தே யிட்டபீட மீதிலே
அடங்கநீரும் பூசல்செய் தருந்தவங்கள் பண்ணுவீர்
ஒடுங்குகின்ற நாதனா ருதிக்குஞான மெவ்விடம்
அடங்குகின்ற தெவ்விடம் அறிந்துபூசை செய்யுமே.

அதுமட்டுமல்ல,
நித்தமும் மணிதுலக்கி நீடுமூலை புக்கிருந்து
கத்தியேக தறியே கண்கள்மூடி என்பயன்
என்றும்,
தேடிவைத்த செம்பெலாந் திரள்படப் பரப்பியே
போடுகின்ற புட்பபூசை பூசையென்ன பூசையோ
என்றும்,

மெய்ப்பொருளாகும் இறைவனை உள்நோக்கியுணர வேண்டுமேயன்றி வெளிப்புறமான மரபுவழிச் சடங்கு வழிபாடுகளாலும், ஆசாரங்களை

மேற்கொள்ளுதலாலும் எந்தப் பயனும் இல்லை என்று மனதில் பதியும்படிப் பல பாடல்களில் ஆவேசமாகக் கண்டனம் செய்கின்றார் சிவவாக்கியர்.

துவராடைத் துறவிகளுக்கு முன்னே  வெள்ளாடை உடுத்த வெண் துறவி வள்ளல் பெருமான்.

தயவும் கருணையும் ஞானமும்  இயற்கையாய்ப் பெற்றவர்க்கு காஷாயம் தேவைப் படவில்லை!

ஆன்ம தரிசனம் கிட்டிய பேர்க்கு  ஆடை அடையாளம்  அவசியமில்லை!
அதற்காக  காஷாயம் கட்டிய உண்மைச் சந்நியாசிகளை
வெறுக்கவும் தேவை இல்லை!

கபட சாமியார்கள் மட்டுமே  வெறுப்புக்குரியவர்கள்!
வள்ளலார் காலத்திலேயே  அந்தக் கபட சந்நியாசிகள் இருந்தார்கள்!
அதுகுறித்து இறுக்கம் இரத்தின முதலியாருக்கு
பெருமான் ஒரு கடிதம் எழுதினார் !

"நாயக்கர் சாமி என்பவர்  தற்காலம்
இவ்வுலகில் இருக்கின்ற
தான்தோன்றிச் சாமிகளில்
தலைநின்ற சாமி என்க.
என்னை..?
அறிய வேண்டுவனவற்றை
அறியாமையோடு,பித்த மயக்கால்
மனம் சென்ற வழி சென்று ,
பித்தச் சாமி என்றும்,விசேடப் பேர் ஒன்று
மிகையாகக் கொண்டிருக்கின்றனர்!
ஆதலின் சூழும் வண்ணம் சூழ்க.
மாறாது விழித்திருக்க...!"

என்று அந்தக் கடிதத்தில்
எச்சரிக்கை செய்கிறார்!

அன்பர்களை விழித்திருக்கச் சொல்கிறார் !

போலிகளிடம் எப்போதும் நாம் விழிப்போடு இருக்க வேண்டும் என்பது பெருமான் கட்டளை!

ஞானிகளையும் போலிகளையும் அடையாளம் காணத்தான் ஆறாவது அறிவு!

”காவித்துணி வேண்டா

கற்றைச் சடை வேண்டா

பாவித்தல் போதும்

பரநிலை யெய்துதற்கே.” - மகரிசி

மனிதன் புறத்தில் செய்து கொண்டிருக்கின்ற வேடங்கள் எல்லாம் இவைனை அடைத் தேவையானதே அல்லது இறைவனுக்கு ஏற்புடையதோ அல்ல.

தம் அகம் நோக்கி மனதைத் திருப்ப தன்னை அறிந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு சேர இறைவனையும் அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார் மகரசி.

கபட வேடதாரிகள்.

ஆன்மீகம் சார்ந்த குழப்பங்களுக்குக் காரணமாக அமையும் இன்னொரு தளம் ‘குரு’ என்ற கருத்துநிலை சார்ந்தது. சாதனா என்பது குரு இன்றி முழுமைகொள்ள முடியாது.

குரு என்பவர் நம்மை வழிகாட்டி அழைத்துச்செல்லும் ஒரு மனிதர். நம்முடைய அறியாமையை நாம் அவர்முன் வைக்கிறோம்.

அவரது ஞானத்தை பெறுவதற்காக நம்மை திறந்து கொள்கிறோம். இதில் ஒரு சுயசமர்ப்பணம் உள்ளது.

இந்தச் சுயசமர்ப்பணத்தை பக்தியாக உருமாற்றிக் கொள்கையில் குருவாக நாம் எண்ணும் மனிதரை அதிமானுடராக ஆக்கிக்கொள்கிறோம்.

சில வருடங்களுக்கு முன்னர் நான் ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் ஒரு நவீனச் சாமியாரை தன் குரு என்று சொன்னார். குரு தனக்களித்த ‘ஞான’த்தைப் பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தவர் தனக்கு வந்த கடுமையான வணிக நெருக்கடியை குரு தீர்த்து வைத்தார் என்றார்.

‘அது குருவின் வேலையா’ என்று நான் கேட்டேன். ‘நான் எல்லாவற்றையும் குருவிடம் ஒப்படைத்துவிட்டேன். அவர் பார்த்துக்கொள்வார்’ என்றார் அவர்.

இங்கே நிகழும் பிழை என்ன? குருவையும் கடவுளையும் இவர் குழப்பிக்கொள்கிறார்.

கடவுளின் இடத்தில் குருவை வைக்கிறார். விளைவாக அந்த குரு மானுடக்கடவுளின் இடத்துக்குக் கொண்டு செல்லப்படுகிறார்.

பல நவீன குருக்கள் தங்களை விளம்பரம் மூலம் பல்வேறு பிம்பங்கள் மூலம் அந்த இடம் நோக்கி நகர்த்திக்கொள்கிறார்கள்.

பக்திவழியையும் ஞானவழியையும் குழப்பிக்கொள்ளும் அறியாமையில் இருந்து இந்தச் சிக்கல் உருவாகிறது.

பக்தி என்பது எந்த வினாவும் இல்லாமல் தன்னை முழுமையாக சமர்ப்பணம் செய்துகொள்வது. அந்த வழியில் வினாவற்ற பணிதலுக்கு முதல்மதிப்பு உள்ளது.

ஆனால் அந்த சுயசமர்ப்பணம் இப்பிரபஞ்சத்தை உருவாக்கி நடத்தும் சக்தியிடம் மட்டுமே நிகழவேண்டும்.

அதை அறியமுடியாதென்பதனால் அதற்கு தன்னை ஒப்புக்கொடுத்தல்தான் பக்தி என்பது.

பக்தியின் தளத்திலும் குருநாதர்களுக்கு ஓர் இடமுண்டு. பக்தியை நோக்கி இட்டுச் செல்லக்கூடிய வழிகாட்டிகள் மட்டும்தான் அவர்கள்.

அவ்வழியில் உருவாகும் சஞ்சலங்களை அகற்றுபவர்கள், பக்தியை உணர்ச்சிகரமாக நிலைநாட்டக்கூடியவர்கள், பக்திக்கான குறியீடுகளை நிறுவக்கூடியவர்கள் அவர்கள்.

பக்தியில் ஆழ வேரூன்றிய மனம் படைத்த ஒருவர் சஞ்சலம் கொண்ட இன்னொருவரை தன்னுடன் அழைத்துக்கொண்டு ஆழமான பக்திக்குள் செல்ல முடியும்.

அத்தகைய குருநாதர்கள் பக்திவழியில் எல்லா காலகட்டத்திலும் உண்டு.

அந்தக்குருநாதர் மேல் ஒருவருக்கு இருக்கும் ஈடுபாடும் அர்ப்பணிப்பும் இயல்பானதே.

அந்த அர்ப்பணிப்பு அவரை குருநாதரின் வழியை பின்பற்றிச்செல்ல உதவக்கூடியது.

ஆனால் இங்கே ஒன்று கவனிக்கவேண்டும், பிரபஞ்சசக்தி ஒன்றை நோக்கி ஆற்றுப்படுத்தும் வழிகாட்டிதான் இங்கே குருநாதர்.

அவர் அதன் வடிவம் அல்ல, பிரதிநிதி அல்ல. அவர் வழிகாட்டுவதற்கு அப்பால் எதையுமே அளிக்க முடியாது.

அவர் மூன்றாம் வகுப்பு மாணவனுக்கு வகுப்பெடுக்கும் ஐந்தாம் வகுப்பு மாணவன் மட்டும்தான்.

ஞானவழியில் உள்ள குருநாதர்கள் நம்மை மெய்ஞானம் நோக்கி இட்டுச்செல்பவர்கள். அவர்களும் வழிகாட்டிகள் மட்டுமே.

ஞானவழியில் ஒவ்வொருவரும் அவரவர் பயணத்தை தாங்களேதான் செய்தாகவேண்டும்.

ஆகவே முழுமையான குரு என்று ஒருவர் அந்த வழியில் இல்லை. மாபெரும் ஞானியரின் வாழ்க்கையைக் கவனித்தால் அவர்களுக்கு பல குருநாதர்கள் இருப்பதைக் காணலாம்.

அவர்கள் ஒரு குருநாதரை விட்டு எழுந்து அடுத்த குருநாதரை நோக்கிச் சென்றிருக்கிறார்கள்.

ஞானத்தின் பாதையில் ஒவ்வொருவரும் ஒன்றை நமக்களிக்கிறார்கள்.

நமது பாதையை நாமே அமைக்கிறோம். நாம் சென்றுசேரும் புள்ளியில் நாம் மட்டும் தன்னந்தனியாகவே சென்று சேர்கிறோம்.

இந்த இரு வழிகளிலும் குருவை மனிதக் கடவுளாக ஆக்கும் மனநிலைக்கு இடமே இல்லை.

உண்மையில் அது குருவை அவமதித்து நிராகரிப்பதற்குச் சமம். அவர் ஞானத்தை நமக்களிக்க தயாராக இருக்கிறார், கூடவே என் தொழிலையும் நீ கவனித்துக்கொள் என அவரிடம் நாம் சொல்கிறோம் என்றால் அதற்கு என்ன பொருள்?

குரு ஒரு வழிகாட்டி மட்டுமே. நாம் சென்று சேரும் புள்ளி அல்ல அவர். அவர் வழியாக நாம் சென்றுகொண்டிருக்கிறோம்.

அவரை நாம் கடந்துசெல்வதும்கூட சாத்தியமே. நாம் தேர்ந்துகொண்ட வழிக்கு ஏற்ப நம்முடைய இயல்புக்கு ஏற்ப நாம் குருநாதர்களை அடைகிறோம்.

முழுமையான மெய்ஞானிகூட ஒருவனுக்கு அவனது வழியைத்தான் காட்டமுடியும். அவனது ஞானமென்பது அவனே அடைவதாகவே இருக்கும்.

”சொல்லால் மட்டும் நம்பாதே

சுயமாய் சிந்தித்தே செயல்படு”

என்று வேதாத்திரி மகரிசி தெளிவாக வழிகாட்டுகிறார்.

இந்த உண்மையான சாதகனுக்குரிய மனநிலையை நவீனக்குருமார்கள் பலர் உச்சகட்டப் பிரச்சாரம் மூலம் சிதைக்கிறார்கள்.

அந்தகுருவை மானுடக்கடவுளாக நம்பும் மனநிலையை பிறரிடம் உருவாக்குகிறார்கள்.

அவரை ஒரு பிம்பமாக ஆக்கி அளிக்கிறார்கள். எல்லா இடங்களில் இருந்தும் நம்மை நோக்கி வந்துகொண்டே இருக்கும் அந்தப் பிம்பம் நம்மை மெல்ல மெல்ல மூளைச்சலவைக்குள்ளாக்கி விடுகிறது.

எங்கோ ஒரு புள்ளியில் நம்மை ஆழ்ந்த ஏமாற்றத்துக்கும் உள்ளாக்குகிறது.

ஒரு குரு-சீட உறவு எப்படி அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குரு ஏன் தேவைப்படுகிறார்? நூறுநூறாயிரம் புத்தகங்கள் இருக்கின்றனவே, அவற்றில் இல்லாதவற்றையா ஒருவர் சொல்லிவிட முடியும்?

நூல்கள் நம்மிடம் பேசக்கூடியவை. நமக்குத்தேவை நம்முடன் உரையாடும் ஒருவர். நம்மை அறிந்து நமக்கு வழிகாட்டும் ஒருவர்.

ஓர் ஆசிரியர் கற்பிப்பதை நூல்கள் கற்பிக்க முடியாது. இது எல்லா அறிவுத்துறைகளுக்கும் பொருந்துவதுதான்.

ஞானவழியில் ஒருவனை ஒரு குரு ஏற்றுக்கொள்வதென்பது எளிய விஷயம் அல்ல. பற்பல வருடங்கள் அவனைக் கூர்ந்து அவதானித்த பின் அவனது தேடலையும் தகுதியையும் உறுதி செய்தபின்னரே அவர் அவனை ஏற்றுக்கொள்கிறார்.

அதேபோல ஒருவன் ஒருவரை குருவாக ஏற்றுக்கொள்வதும் எளிய விஷயமல்ல.

அவன் அவரை கூர்ந்து கவனித்துக்கொண்டே இருக்கிறான். தொடர்ச்சியாக, நெருக்கமாக. மெல்லமெல்ல அவரை அவன் அகம் குருவாக ஏற்றுக்கொள்கிறது.

பிறகு இருப்பது ‘உபநிஷத்’- உடனமர்தல் – தான். ஒரு குருவுடன் கூடவே இருப்பதுதான் உண்மையான கல்வி.

அவரது சிந்தனைகளுடன் சிந்தித்து, அவரது சொற்களை தனக்குள் முளைவிடச் செய்து, அவரை முழுமையாக உள்வாங்கிக் கொள்ளுதல்.

அவருக்கு குறைகள் இருக்குமென்றால் அவற்றையும் அறிந்துகொள்ளுதல். ஏதேனும் ஒரு கட்டத்தில் அவர் போதவில்லை என்றால் மிகச் சாதாரணமாக அவரை தாண்டிச் செல்லுதல்.

குருகுல முறை பெருநிறுவனமாக ஆக்கப்படும்போது இதெல்லாம் நடக்கிறதா என்று கவனியுங்கள்.

பெரும்பாலும் அந்த மையகுருவை நாம் அணுகவே முடிவதில்லை. அதிகபட்சம் அவர் ஒரு பேருரை ஆற்றும்போது நாம் பெருங்கூட்டத்துடன் அமர்ந்து கேட்க முடிகிறது.

அவர் பலநூறுபேருக்கு கற்பிக்கும் ஒரு வகுப்பில் அமர்ந்திருக்கமுடிகிறது. நான் சொல்வது அதுவல்ல. உபநிடதம் கூறுவதும் அதுவல்ல.

அருகமர்தல் என்றால் ஒரு மனிதரை உள்ளும் புறமும் எந்த ரகசியமும் இன்றி பார்க்குமளவுக்கு அருகே செல்லுதல்தான்.

நான் பார்த்தவரை பல பிரம்மாண்டமான அமைப்புகளில் குரு சில வருடங்களில் சில அடிப்படைப் பயிற்சிகளை அளித்து ஒரு முதல்நிலைச் சீடர்வளையத்தை உருவாக்குகிறார்.

அவர்கள் சில வருட பயிற்சி அளித்து இரண்டாம் நிலை சீடர்களை உருவாக்குகிறார்கள்.

அவர்கள் மூன்றாம்நிலைச் சீடர்களை. கடைசியில் சிலவாரங்கள் சில சொற்றொடர்களையும் சில செயல் முறைகளையும் கற்றவர்கள் பொதுமக்களுக்கு கற்பிக்க வருகிறார்கள்.

பல்வேறு ஆசாபாசங்களுடன் பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் வரக்கூடிய பலவகையான மக்கள் அனைவரையும் லட்சக்கணக்கில் உள்ளே கொண்டு வரவேண்டுமென்றால் வேறு வழியே இல்லை.

அவர்கள் அனைவருக்கும் கற்பிக்க ஒரு பொதுப் பாடத்திட்டம் தேவைப்படுகிறது.

மிக எளிமையாக யோகம் மற்றும் தியானம் சார்ந்த சில கருத்துக்களையும் சில செயல்முறைகளையும் இணைத்து அவற்றில் யோகத்தின் கலைச்சொற்களை தாராளமாக போட்டு தாளித்து ஒரு 'காப்ஸ்யூல்' செய்கிறார்கள். அது சாதாரணமாக வினியோகம் செய்யப்படுகிறது.

இந்தக் காப்ஸ்யூல் யோகத்தை அறுபதுகளில் முதல்முறையாக வெற்றிகரமாகச் செய்தார் ஒருவர்.

அதை மிகச்சிறந்த வணிக உத்திகள் மூலம் உலகளாவக் கொண்டு சென்று உலகின் மிகப் பிரம்மாண்டமான சமய அமைப்புகளில் ஒன்றை உருவாக்கினார்.

அவரது வழிமுறைகளையே இன்றுள்ள எல்லா நவீனச் சாமியார்களும் செய்து வருகிறார்கள்.

ஒரு மையக்குருவில் இருந்து சீடர்களின் வட்டங்கள் பெரிதாகி பெரிதாகி படிப்படியாக கீழிறங்கும் பிரமிட் அமைப்பு என்பது மகேஷ் யோகி உருவாக்கியதே.

ஏறத்தாழ இதேகாலகட்டத்தில் தான் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் 'கரிஸ்மாட்டிக் பிரீச்சர்ஸ்' என்று சொல்லப்படும் மதபோதகர்கள் உருவாகி பெரும் செல்வாக்கு பெற்றார்கள்.

ஓரல் ராபர்ட்ஸ் அவர்களில் முதல்பெரும் நட்சத்திரம். அறிவியல் கருவிகளின் துணையுடன் நிகழ்த்தப்படும் வசீகரமான நிகழ்ச்சிகள், உச்சகட்ட ஊடகப்பிரச்சாரம். ஆகிய இரு சக்திகளின் துணையுடன் இவர்கள் தங்கள் சாம்ராஜ்யங்களை அமைத்தார்கள்.

உருவாகிவந்த தொலைக்காட்சி என்ற ஊடகம் இவர்களுக்குக் கைகொடுத்தது.

இந்த சாம்ராஜ்யங்கள் பிரம்மாண்டமான பணபலத்துடன் அமைந்தபோது இவர்களுக்கு எல்லாத்துறைகளிலும் நிபுணர்களின் சேவைகள் கிடைத்தன.

இவர்களின் பேச்சுகள் பெரியதோர் ஆய்வறிஞர்களின் குழுக்களால் உருவாக்கப்பட்டன. பெரும் கலைஞர்களால் பாடல்கள் அமைக்கப்பட்டன.

இவர்களின் நிகழ்ச்சிகளுக்கு ஒளி அமைக்கவும் இவர்களின் உடைகளை வடிவமைக்கவும் உலகின் தலைசிறந்த நிபுணர்கள் கிடைத்தார்கள்.

ஒருகட்டத்தில் இவர்களை நம்பும் பலலட்சம் பேர் இவர்களுக்கான பிரச்சாரகர்களாக ஆகிவிடுகிறார்கள்.

ஒருகோடி பிரச்சாரகர்கள் உள்ள ஒரு பொருள் நம் சந்தைக்கு வந்தால் அதை எவர் தடுக்க முடியும்?

மேலும் மக்களின் மனநிலை மிக எளிமையானது. 'ஒன்றும் இல்லாமல் இத்தனைபேர் ஏற்றுக்கொள்வார்களா?' 'என் பக்கத்துவீட்டுக்காரர் செல்கிறார்.

அதனால் நானும் செல்கிறேன்'. 'இப்போதெல்லாம் இதுதான் எல்லாராலும் நம்பப்படுகிறது' — இப்படி இந்த நம்பிக்கைகள் பெருகிப் பெருகிச் செல்கின்றன.

மிக அபூர்வமாகவே சில பலூன்கள் உடைகின்றன. பெரும்பாலும் அந்த அமைப்புக்குள் உள்ள உள்சண்டைகள் காரணமாக.

சாதாரணமாக இந்த அமைப்பு மிகச்சிறந்த காவல் கொண்டதாக, மேலே மேலே சென்றபடியே இருக்கும்.

இந்தியாவில் கிறித்தவ கரிஸ்மாட்டிக் பிரீச்சர்களில் நாளொன்றுக்கு ஒருகோடி ரூபாய் வருமானம் உள்ளவர்கள் இருக்கிறார்கள்.

மாதம் ஒரு கோடிக்குமேல் வருமானமுள்ள ஐம்பதுபேர் இருக்கிறார்கள் என்று சொல்லப்படுகிறது.

இஸ்லாமியக் கடவுள் மனிதர்கள் அதற்கிணையாக இருக்கிறார்கள். இவர்கள் கடவுளிடம் நேரடியாகப் பேசுகிறார்கள்.

மேடைகளில் கடவுளை வரவழைத்து பேசுகிறார்கள். உறுதியான மத அமைப்பு கொண்ட மதங்களிலேயே இப்படி என்றால் எந்த கட்டுப்பாடும் இல்லாத இந்து மதத்திற்குள் கேட்கவே வேண்டாம். ஊருக்கு ஊர் குறிசொல்லும் சாமியார்கள், மனிதக்கடவுள்கள்தான்.

அமெரிக்க கரிஸ்மாட்டிக் பிரீச்சர்களின் உத்திகளையும் பாணியையும் கையாண்டு ஊடகங்கள் வழியாக விஸ்வரூபம் கொண்ட மனிதக் கடவுள்கள் இந்தியாவில் கடந்த முப்பதாண்டுக்காலமாகத்தான் பரலாகி வருகிறார்கள்.

இவர்களில் ஒரு நித்யானந்தர் உடைந்தாலும் எதிர்காலத்திலும் ஏராளமானவர்கள் வந்துகொண்டுதான் இருப்பார்கள் என்றே நினைக்கிறேன்.

அப்படியானால் இந்த வகையான தியானப் பயிற்சிகளினால் எந்தப்பயனும் இல்லையா? அப்படி அல்ல.

இவை பயனுள்ளவையே. அந்தப் பயன் எல்லைக்குட்பட்டது. அது அந்த குருநாதராலோ அந்த அமைப்பாலோ உங்களுக்குக் கிடைப்பது அல்ல.

இவர்கள் தியான-யோக முறையின் அடிப்படையான பாடங்களை எளிமைப்படுத்தி சொல்லித்தருகிறார்கள்.

பெரும்பாலும் அது பதஞ்சலி யோகத்தை அடிப்படையாகக் கொண்டது. சிலர் தாந்த்ரீகமுறைசார்ந்த தியானபாடங்களைச் கற்பிக்கிறார்கள்.

இந்த அடிப்படைப்பாடங்களை எவர் எப்படிச் செய்தாலும் அது அந்த அளவில் பயனுள்ளதே.

உச்சகட்ட மன அழுத்தம் கொண்ட ஒருவர் தினம் அரைமணிநேரம் சும்மா கண்மூடி இருந்தாலே அவரது அகம் மாற ஆரம்பிக்கும்.

தியானத்தில் கண்மூடி அமரும் ஒருவர் தன் அகத்தை கவனிக்க ஆரம்பிக்கிறார். சும்மா கவனிப்பதே கூட அந்த அளவில் நம்மை அமைதிப்படுத்தும். நம் கொந்தளிப்புகளை அணைக்கும்.

நம்முடைய சிந்தனையில், மன ஓட்டத்தில் பிரமிக்கத்தக்க விளைவுகளை உருவாக்கும்.

ஆகவே இந்த மாபெரும் அமைப்புகள் பல லட்சம் மக்களுக்கு அளிக்கும் இளைப்பாறல் என்பது பெருமளவுக்கு பயனுள்ளதேயாகும்.

ஆனால் இதனை தவறாகப் பயன்படுத்துவது - மக்களிடம் பணத்தை சுரண்டுவது போன்றவைகள் கண்டிக்கத்தக்கதாகும்.

அதேசமயம் பெரும்அமைப்புகளால் மட்டுமே வெற்றிகரமாக இதைச் செய்யவும் முடிகிறது.

மூன்று காரணங்கள். ஒன்று, அவர்கள் பிரம்மாண்டமான விளம்பரங்கள்மூலம் பெருமளவில் மக்களை உள்ளே கொண்டுவருகிறார்கள்.

அந்த மக்களின் மனத்தில் அந்த விளம்பரங்கள் மூலம் உரைகள் மூலம் சில பிம்பங்களை நிறுவி அழுத்தமான நம்பிக்கையை உருவாக்குகிறார்கள்.

மூன்றாவதாக பல்லாயிரம் பேர் கூடும் கூட்டுத் தியானங்களை ஒருங்கிணைக்கிறார்கள்.

பொதுவாக மானுட மனங்கள் கூட்டாகச் சேரும்போது ஒட்டுமொத்தமான உத்வேகத்துடன் செயல்படுகின்றன. அப்போது அவை சாதாரணமாகச் செல்லமுடியாத இடங்களுக்குச் செல்ல முடியும்.

ஆனால் இவற்றை மிக எளிமையான உளப்பயிற்சிகள் என்ற அளவிலேயே எடுத்துக்கொள்ள வேண்டும்.

அன்றாட லௌகீக வாழ்க்கையில் உழலும் ஒருவருக்கு தன்னை தானே கவனிக்கவும் தன் அகம் மீது ஓரு கட்டுப்பாட்டை அளிக்கவும் இவை உதவும்.

பக்தியின் மூலம் தன்னை சமர்ப்பணம் செய்ய முடியாத அளவுக்கு தர்க்கஅறிவு கொண்ட ஒருவருக்கு தர்க்க பூர்வமாக இந்த பிரபஞ்சப்பேரியக்கத்தின் பிரம்மாண்டத்தை இவை காட்டும்.

அதில் ஒத்திசைவுடன் இணையும் சில கணங்களை அளிக்கும். அதன் மூலம் அவரில் ஒரு சமநிலை உருவாகும்.

அது அவரது அன்றாட லௌகிகச் செயல்பாடுகளில் நிதானமும் செறிவும் கைகூட உதவும்.

இந்தத் தியான முறைகள் நான் கவனித்தவரை பதஞ்சலி யோகமுறையின் மிக ஆரம்பப் படியிலேயே நிற்கின்றன.

அதாவது சில எளிய பயிற்சிகள் மூலம் மேல் மனதை சற்றே ரத்து செய்கின்றன.

ஜாக்ரத் என்ற விழிப்புநிலை சற்றே விலகி ஸ்வப்னம் என்ற ஆழ்கனவுநிலை கொஞ்சம் நீடிக்கும் ஒரு தளத்தை மட்டுமே அதிகபட்சமாக இவை அளிக்கின்றன.

ஆனால் இந்த அமைப்புகள் துரியநிலை, உச்சநிலை என்றெல்லாம் அதற்கு பெயரிட்டு விடுகின்றன.

பதஞ்சலி மானுட அகத்தை நான்காகப் பகுக்கிறார். ஜாக்ரத்,ஸ்வப்னம், சுஷ¤ப்தி ,துரியம். முறையே விழிப்பு, கனவு, ஆழ்நிலை, முழுநிலை.

ஆனால் இதை ·ப்ராய்டின் பகுப்புடன் ஒப்பிடக்கூடாது. இப்படிச் சொல்லலாம். துளி, துமி, அலை ,கடல். கடல்தான் இருக்கிறது, மற்றவை அதன் வெவ்வேறு நிலைகள் மட்டுமே.

பதஞ்சலி யோகத்தில் துரிய நிலையே மானுட அகத்தின் பூரணநிலை. அந்நிலையில் மனிதமனம் தான் என்ற நிலையை முற்றாக இழந்து பிரபஞ்சமாகவே தன்னை ஆக்கிக்கொள்கிறது.

துரியாதீதம் என்று பிரம்மத்தை அல்லது பிரபஞ்சமனத்தைத்தான் சொல்கிறார்கள்.

ஆனால் நம் பயிற்சிமையங்களில் அந்த துரியாதீத நிலையை ஐயாயிரம் ரூபாய் கட்டணத்தில் ஆறுமாதப் பயிற்சியில் அளிப்பதாக சொல்கின்றனர்.

யோகம் வணிகமாக ஆகும்போது நிகழ்வது இது. இந்த அபத்தத்தைப் பற்றியே நாம் கவனமாக இருக்கவேண்டும்.

இன்று சர்வ சாதாரணமாக நான்குபேர் கூடினால் அதில் ஒருவர் தான் யோகம் வழியாகச் சென்ற உச்சங்களைப்பற்றி எடுத்துவிட ஆரம்பிக்கிறார்.

இவற்றில் பெரும்பாலானவை தன்னைப் பற்றிய மிகையான கற்பனை மூலம் உருவாகிக்கொள்பவை.

கற்பனை செய்து செய்து ஒரு கட்டத்தில் அதை உண்மை என்றே நம்ப ஆரம்பித்துவிடுகிறார்கள். சிலர் உண்மையாகவே ஏமாந்தும் சொல்கிறார்கள்.

யோகத்தின் முதல்படி மிகமிகமிக எளிது. கொஞ்சநேரம் பிரக்ஞையை ஆறவைத்தல்மட்டும்தான் அது.

அதற்கு அடுத்தபடிகள் மிகச்சிக்கலானவை. பிரக்ஞைக்கு அடியில் பிரக்ஞையால் கட்டுப்படுத்தப்பட்டு வைக்கப்பட்டிருக்கும் கனவுமனம் வெளிப்படும் நிலை அது.

அது முழுக்கமுழுக்க கட்டற்றது. ஒருவகையான உன்மத்த நிலை, பைத்திய நிலை. நம் அகத்தின் அத்தனை அத்தனை அழுக்கும் கொடூரமும் வெளிவரும் நிலை.

அதைத்தாண்டுவதும் சுஷ¤ப்தி நிலைகள் வழியாக துரியநிலையில் லயிப்பதுமெல்லாம் பற்பல ஆண்டுகள் முறையான விடப்பிடியான பயிற்சி மூலம் மட்டுமே நிகழ்பவை.

இந்தப் பயணத்தில் உண்மையான வழிகாட்டல் அளிக்கும் குரு தேவைப்படுகிறார். அவர் வெறும் பிம்பமாக இருக்க முடியாது.

அவர் நம்மிடம் உரையாட வேண்டும். நம்மை ஆழ்ந்து அடுத்து அறிந்திருக்கவேண்டும்.

நம்முடன் அவரும் வரவேண்டும். அந்தரங்கமான உறவு வழியாக மட்டுமே சாத்தியமாகக் கூடியது அது. அந்நிலை இந்த பேரமைப்புகளில் சாத்தியமல்ல.

அதே அமைப்பைச் சேர்ந்த இன்னொரு நண்பரிடம் பேசிக்கொண்டிருந்தேன்.

அவர் சொன்னார் ‘என் குரு என்னிடம் எதையும் உரையாடுவதில்லைதான். ஆனால் அவர் என்னுடனே சூட்சும வடிவில் இருக்கிறார். அவரது சக்தியை இந்த படிகமணிமாலையில் ஏற்றி என்னிடம் கொடுத்திருக்கிறார்’ .

நான் கேட்டேன் ‘என்னுடைய இலக்கியத்திறனை ஒரு பாசிமணியில் ஏற்றி நான் உங்களுக்கு தந்துவிட முடியுமா என்ன?’ என்று.

இங்கே இவரிடம் உள்ள சிக்கலே பக்திவழியில் இருந்து அந்த நம்பிக்கைமுறைகளை ஞானவழிக்கு கொண்டுவருவதுதான்.

ஒரு குரு அடைந்துள்ள ஆற்றல் என்பது அவரது ஞானமாகவே இருக்கமுடியும். அந்த ஞானம் அவரது அகத்தில் ஒரு நுண்ணுணர்வாக இருக்கும்.

அவர் சென்ற ஒரு மன ஆழம் அது. அவர் அடைந்த ஒரு பார்வை அது. அதை எப்படி பாசிமணிகளில் ஏற்றி அவர் வினியோகம் செய்ய முடியும்?

சில அபூர்வதருணங்களில் சிலவகையான குறியீடுகள் தேவையாக ஆகலாம். அதை குருநாதர்கள் பயன்படுத்தலாம்.

ஆனால் அதை மூடநம்பிக்கையாக ஆக்கிக் கொள்கிறார்கள் இங்கே. புதுவகையான விக்கிரகங்களை தாயத்துகளை கண்டுபிடிக்கிறார்கள்.

என்ன காரணம் என்றால் பெரும் அமைப்புகள் மூலம் லட்சக்கணக்கானவர்கள் இத்தகைய ஆரம்பநிலை யோகமுறைகளுக்குள் திரட்டப்படுவதுதான்.

அவர்களில் தொண்ணூறு சதவீதம் பேரும் பக்திவழியில் செல்லும் மன அமைப்பு கொண்டவர்கள். அதற்கான மனப்பயிற்சியை இளமையிலேயே அடைந்தவர்கள்.

அவர்கள் தேடுவது சரணாகதிக்கான ஒரு சன்னிதி மட்டுமே. ஞானவழியை தேர்வு செய்வதற்கான சமரசமில்லாத தேடலோ கவனமோ அவர்களிடம் இல்லை.

இந்த தேடலையும் கவனத்தையும் ஒரே சொல்லாக ‘சிரத்தா’ என்று சொல்வார்கள்.

சுவாமி விவேகானந்தர் சிரத்தா என்ற கருத்தாக்கத்தைப் பற்றி விரிவாக ஒரு பேருரை ஆற்றியிருக்கிறார்.

நசிகேதன் யமனைப் பார்க்கச்செல்லும் இடம் அதற்கான சிறந்த உதாரணம்.

மெய்ஞானத்துக்கு பதிலாக வேறு எதை வேண்டுமானாலும் அளிக்கிறேன் என்கிறான் எமன்.

அதைத்தவிர எதுவுமே தேவையில்லை என்கிறான் நசிகேதன். இதற்கிணையாக ஏசுவிடம் லூசி·பர் பேசுவது பைபிளில் வரும்.

இதுவே சிரத்தை. இந்த சிரத்தை இல்லாதவர்களுக்கு ஞானமார்க்கம், யோகம் உரியதல்ல.

சிரத்தை இல்லாதவர்கள் யோக வழிக்கு எளிமையான பிரச்சார உத்திகள் மூலம் திரட்டப்படும்போது அவர்கள் அதை தங்களுக்கு ஏற்ப பக்தியாக மாற்றிக்கொள்கிறார்கள்.

குருநாதரை கடவுளாக்குகிறார்கள். ஞானத்தை மாயமந்திர ஆற்றலாக எண்ணிக்கொள்கிறார்கள்.

இத்தகைய மூடநம்பிக்கைகளில் இருந்துதான் போலி ஆன்மீகம் ஒரு பெருந்தொழிலாக வேர்விட்டு கிளைபரப்புகிறது.

எனக்கு வந்த கடிதங்களில் இந்த சாமியார்களின் சிறந்த உரைகளைப் பற்றிச் சொல்லி அப்படியெல்லாம் சொன்னாரே என்ற துயரத்துடன் எழுதப்பட்டிருக்கிறது.

நான் இந்தச் சாமியார்களின் ஆகச்சிறந்த நூல்கள் என்று சொல்லப்படுவனவற்றை வாசித்திருக்கிறேன்.

உரைகளையும் கேட்டிருக்கிறேன். இந்து ஞான மரபுகளில் அறிமுகம் உடைய ஒருவரைக் கவரும் அளவுக்கு அபூர்வமான, ஆழமான எதுவுமே இவர்களால் சொல்லப்படவில்லை.

அறிவுத்தள அறிமுகம் பெரிதாக இல்லாத எளிய பொதுமக்களைக் கவரும்படியாகச் சொல்லப்படும் எளிமையான கருத்துக்கள் மட்டுமே அவை.

மேலும் இவையனைத்தும் ஏற்கனவே சொல்லப்பட்டு நூல்களில் உள்ள கருத்துக்கள். இவர்களின் தனிப்பங்களிப்பு, இவர்களின் ஆளுமையின் அம்சம் என ஏதும் இவற்றில் இல்லை.

சில நல்ல உரைகளை உருவாக்கிக்கொள்வதென்பது மிகமிக எளிமையான ஒரு செயல். அதிலும் ஆய்வாளர்களும் அறிஞர்களும் உதவினார்கள் என்றால் அது எளியதோர் தொழில்நுட்பமாக ஆகிவிடுகிறது.

வித்தாரமாக, மனம் கவரும்படியாக, உணர்ச்சிகரமாக பேசுவதென்பது பயிற்சியினால் விளையும் திறமை மட்டுமே.

இந்த சாமியார்களைவிட திறமையாகப் பேசுபவர்கள் பல ஆயிரம்பேர் உள்ளனர். எல்லாக்காலத்திலும் அவர்கள் இருப்பார்கள்.

அந்த திறன் ஒருவர் யோகி என்பதற்கோ ஞானி என்பதற்கோ சான்றாக ஆவதில்லை.

மேலும் கருத்துக்களைச் சொல்பவர்களை நம் மரபில் பௌராணிகர்கள் உபன்னியாசகர்கள் என்று சொல்வார்களே ஒழிய ஞானிகள் என்றல்ல.

கருத்துக்கள் முக்கியமென்றால் அக்கருத்துக்களைச் சொன்னவர்களை வழிபடவேண்டிய, முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டிய அவசியமே இல்லை.

வெறும் கருத்துக்களுக்கு எந்த மதிப்பும் இல்லை என்பதை உணருங்கள்.

அந்தக்கருத்துக்களுக்குப் பின்னால் இருக்கும் மனிதர், அவரது வாழ்க்கை மட்டுமே முக்கியம்.

கருத்துக்கள் நம்மை அவரிடம் கொண்டு சென்று சேர்க்கும் பாதை மட்டுமே.

சிந்திப்பவர்களுக்கு ஒரு கட்டத்தில் தெரியும் விஷயம் ஒன்றுண்டு, நூல்களில் இருந்து கருத்துக்களைத் திரட்டிக்கொண்டு எவரும் எதையும் பேசலாம்.

அத்துடன் கருத்துக்களை உருவாக்குவதற்கான ஒரு சட்டகத்தை கண்டுபிடித்துக்கொண்டோமென்றால் அதற்குள் உலகிலுள்ள அனைத்தையும் கொண்டு வந்து போட்டு புதிய கருத்துக்களாகக் கொட்டிக்கொண்டிருக்கலாம். கருத்துக்களுக்கு தன்னளவில் எந்த மதிப்பும் இல்லை.

உண்மையான சாதகர் அல்லது ஞானியை நீங்கள் பார்க்கச் சென்றால் ஒருபோது கருத்துக்களைப்பற்றிப் பேசாதீர்கள்.

நூல்களைப் பற்றிச் சொல்லாதீர்கள்.கருத்துக்களைக் கேட்டு ரமணரே எரிச்சலடைந்திருப்பதை நாம் வாசிக்கலாம்.

வாழ்க்கையாக ஆகாத கருத்து என்பது வெறும் சருகுக் குப்பை மட்டுமே. உங்களுக்குத் தேவை குரு என்றால் அது ஒரு கருத்துநிலை அல்ல, ஒரு பொதுப்பிம்பம் அல்ல, ஒரு மனிதர், ஒரு வாழ்க்கை என்பதை உணருங்கள்.

ஒரு குரு, அவர் உண்மையான குரு என்றால் சீடன் முன் அம்மணமாக நிற்பார் என்று உணருங்கள்.

அவரில் உங்களுக்குத் தெரியாத எதுவுமே இருக்காது. நான் முதன்முதலில் நித்ய சைதன்ய யதியைச் சந்தித்தபோது கேட்டேன்

”நீங்கள் உங்கள் மாணவர்களுக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறீர்கள்?” ”எதுவும் இல்லை. நான் அவர்களை என்னுடன் இருக்க அனுமதிக்கிறேன். எல்லா நேரத்திலும். அவர்கள் எதைக் கற்கிறார்களோ அதுவே அவர்களுக்கு” என்றார். அதுவே குருவின் பாதை.

இங்கே எழும் உண்மையான சிக்கல் ஒன்றை சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது.

பக்தி,விசுவாசம், வழிபாடு ஆகியவற்றை மட்டுமே முன்வைக்கும் மதங்களில் குரு என்ற ஆளுமைக்கான தேவை இல்லை.

அந்த விசுவாசத்தை அமைப்பாக திரட்டிக் கட்டிக்காக்கும் மதகுருக்கள் மட்டுமே போதுமானவர்கள்.

ஏனென்றால் அங்கே தனித்தனியான ஞானத்தேடல், முழுமை நோக்கிய பயணம் என்பது இல்லை. கூட்டான நம்பிக்கை, கூட்டான வழிபாடு மட்டுமே உள்ளது.

ஆனால் ஞானத்தேடல் கொண்ட ஒவ்வொரு மனிதருக்கும் அவருக்குரிய ஆன்மீக பயணத்தையும் முழுமையையும் அளிக்க முயலும் பௌத்தம்,சமணம், இந்து மதங்களில் தனிப்பட்ட குரு என்னும் ஆளுமை தவிர்க்க முடியாத ஒன்று.

அந்த குரு ஒரு நிறுவனமாக இருக்க முடியாது. அது அந்தரங்கமான தனிமனித உறவாகவே இருக்க முடியும்.

குரு சீட உறவென்பது கணவன் மனைவி உறவை விட அந்தரங்கமானது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அப்படியானால் அத்தனைபேரும் குருவுக்கு எங்கே செல்வது? மிகச்சிக்கலான வினாதான் இது.

அதற்கான விடைகள் பல முன்னரே சொல்லப்பட்டிருக்கின்றன. உண்மையான ஞானத்தேடல் கொண்டவர்கள் மிகமிகச் சிலரே.

பெரும்பாலானவர்களுக்கு எளிய விடைகளே போதுமானவை. அந்த விடைகளை எங்கோ எவரோ அளித்துவிட முடியும். ஒரு புராணிகர், ஒரு சொற்பொழிவாளர் , ஒரு பூசகர் கூட அவருக்கு குருவாக அமைந்துவிட முடியும்.

‘சிரத்தை’ கொண்ட ஒருவருக்கு அவருக்கான குரு வந்தே தீர்வார் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அவ்வாறு வரவில்லை என்றால் அவருக்கு அது விதிக்கப்படவில்லை என்றே பொருள் என்பார்கள்.

‘தேடுங்கள் தரப்படும், தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கிடைக்கும்’ என்று மெய்ஞானி அதைத்தான் சொன்னார் என்று நினைக்கிறேன். ‘இலக்கை எட்டும் வரை செல்லுங்கள்’ என்றும் அதுதான் சொல்லப்படுகிறது.

ஒரு பயணம் செல்லும்போது நாம் பலரிடம் வழி விசாரித்துச் செல்வதைப் போன்றதே இதுவும்.

‘அறிதலன்றி எதிலுமே ஆறுவதில்லை’ என்று தேடிச்சென்ற காலங்களில் நான் எத்தனை நித்யானந்தர்களைச் சந்தித்திருப்பேன். இன்று எண்ணும்போது ஆச்சரியமாகவே இருக்கிறது. நான் சந்தித்த துறவிகள், சாதகர்களில் போலிகளே மிகப்பெரும்பாலானவர்கள்

போலிகள் இருவகை. ஒருசாரார், ஒரு ஏமாற்றுத்தொழில்நுட்பமாகவே இதைச் செய்பவர்கள். வேடதாரிகள்.

இன்னொருசாரார் உண்மையான ஊக்கத்துடன் ஆரம்பித்து எங்கோ ஓரிடத்தில் நின்றுவிட்டபின் தங்களை அதற்கும் மேலாக பாவனைசெய்து முன்வைப்பவர்கள். அதற்காக வேடமிடுபவர்கள்.

எது நுண்மையான விஷயமோ அதில்தான் போலிகள் அதிகம் இருக்கும்.

ஆன்மீகம், கவிதை, கலைகள்... ஏனென்றால் அங்கே ஊன்மையையும் போலியையும் பத்துபேர் பிரித்தறிவார்கள் என்றால் பத்தாயிரம்பேரால் அந்த நுட்பமான பாகுபாட்டை நிகழ்த்த முடியாது.

ஆனால் உண்மையான தேடல் கொண்டவனுக்கு முன் வேடங்கள் எளிதிலேயே அம்பலமாகிவிடும் என்றே நினைக்கிறேன்.

அப்படி இருந்தும் பல சமயம் நாம் ஏன் தொடர்ச்சியாக ஏமாறுகிறோம் என்றால் நம்முடைய சொந்த அகங்காரத்தால் அல்லது போலித்தனத்தால்தான்.

போலிச் சாமியார்களின் பல மாணவர்கள் தாங்கள் யோகத்தில் இன்னின்ன நிலைவரை சென்றோம் என்றெல்லாம் சொல்வதைக் கவனிக்கிறேன்.

இங்கே 'நான் மிக எளிதாக யோகத்தின் படிகளில் ஏறக்கூடியவன்' என்ற நம் ஆணவம் நம்மை முட்டாளாக்கியிருக்கிறது.

அந்த அகங்காரம் இல்லை என்றால் ஒரு ஞானியை அல்லது யோகியை அடையாளம் காண்பது மிக எளிது.

அவர்கள் ஒருபோதும் அமைப்புகளை உருவாக்கிக் கொள்வதில்லை.

சில வரலாற்றுக் காலகட்டத்தில் அவர்கள் அமைப்புகளை உருவாக்கினாலும் அவற்றிலிருந்து வெளியேறியும் இருப்பார்கள்.

அவர்கள் சுயப்பிரச்சாரம் செய்வதில்லை. அவர்கள் அணிதிரட்டுவதில்லை. முக்கியமாக அவர்களைச் சுற்றி ஒருபோதும் செல்வமும் அதிகாரமும் திரள்வதே இல்லை.

அவர்கள் அத்தனை எளிதாக கண்ணுக்குச் சிக்குபவர்களும் அல்ல.

அன்றாட வாழ்வுக்கான தியானப்பயிற்சிகளை அளிக்கும் அமைப்புகளை ஒருவகை பள்ளிகள் என்று வேண்டுமானால் கொள்ளுங்கள்.

அதை அளிப்பவர்களை யோகி என்றோ ஞானி என்றோ சொல்லாதிருங்கள். அதை யோகம் என்று எண்ணிக்கொள்ளாதிருங்கள். அதுவே பாதி சிக்கல்களை இல்லாமலாக்கிவிடும்.

போலிச் சாமியார்களைநம்பி ஏமாந்தவர்கள் அடையும் பதற்றம் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்றே.

அப்படி நம்பியது அசட்டுத்தனம் என்றாலும் ஆன்மீகத்தின் பாதையில் அத்தகைய அனுபவங்களை எவராலும் தவிர்க்க முடியாது.

அது நம்முடைய எல்லைகளை நமக்குக் காட்டுகிறதென்றே எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொன்றும் பாடங்கள் என்றே பொருள்படும்.

எனக்கு அத்தகைய பல கசப்பான அனுபவங்கள் உண்டு. என்னுடைய பல புத்தகங்களில் இந்த ஏமாற்றம் பல கோணங்களில் பதிவாகியிருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம்.

நாம் தேடும் விஷயம் நாம் எவ்வகையிலும் நிர்ணயிக்க முடியாத அளவுக்கு நுண்மையானது. ஆனால் ‘சிரத்தை’யுடன் இருப்பது நம் கையில்தான் உள்ளது.

எது நம் ஆழம் அறிந்த உண்மையோ அதில் சமரசமே இல்லாமலிருப்பது. அதைத்தவிர வேறெதையுமே ஏற்காமலிருப்பது. நம்முடைய சொந்த அகங்காரம் அல்லது போலிப்பாவனைகள் நமக்கு தடையாக ஆகாமல் பார்த்துக்கொள்வது.

அதைத்தான் இந்த தருணத்தில் அத்தனை நண்பர்களுக்கும் சொல்ல விழைகிறேன் என்கிறார் எழுத்தாளர் ஜெயமோகன்.

ஏமாறுபவர்கள் இருக்கும் வரையில் எமாற்றுபவர்கள் இருப்பார்கள் என்ற விதிப்படி, இன்றும் போலிச் சாமியார்கள் உலகை வலம் வந்து கொண்டுதானே இருக்கிறார்கள்!

# 8. நாதன் உள்ளிருக்கையிலே.....

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் அதன் அறிவாகக் குடிகொண்டிருக்கிறார் என்பததை சிவவாக்கியார்,

**"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுஷ்பந் சாத்தியே**

**சுற்றிவந்து முணமுணென்று சொல்லு மந்திரம் ஏதடா**

**நட்டகல்லும் பேசுமோ நாதனுள் ளிருக்கையில்**

**சுட்டசட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ"**

நல்ல சுவை மிகுந்த உணவுப் பண்டங்களைச் சமைத்த சட்டியால், அந்த உணவின் ருசியை உணர்ந்து கொள்வது சாத்தியமில்லாதது.

அது போலவே மனம் எனும் கோவிலுக்குள் இறைவன் உறைந்திருப்பதை அறியாமல் வெறும் கல்லை நட்டு வைத்து அதற்கு தெய்வமென்று பெயரிட்டிருக்கிறீர்கள்.

அந்தக் கல்லுக்கு பூக்களாலும் முணமுணென்ற மந்திரங்களாலும் வழிபாடு செய்வது அறியாமையேதான்.

அந்த மந்திரத்தால் ஏது பயன் என்று சிந்திக்காமல் இருக்கிறீர்கள்.

கடவுள் என்ற சொல்லுக்கு என்ன விளக்கம்? மகரிசி சொல்கிறார். உள் கடந்து போ - அதுதான் கடவுள் என்கிறார்.

"கட-உள் என்று சொல்லவிட்டான் கருவறிந்தோன்

கருத்தறியான் ஊன்றிஇதைக் காணவில்லை.

கட-உள் என்ற ஆக்கினையின் குறிப்பைமாற்றி.

கண்டறிந்த நிலைக்கே அப்பெயரைக் கொண்ட

கட-உள் என்ற இரு சொல்லை ஒன்றாய்க்கூட்டிக்

கடவுள் என்றே சொல்லிச் சொல்லி வழக்கமாச்சு!

கட-உள்! என்று மனிதன்ஒரு குறிப்புத் தந்தான்.

கடவுள் எங்கே? என்றுபலர் தேடுகின்றார்."

இறைவன் என்பவர் தனியாக வெளியில் இல்லை, உள்ளத்திலே உறைபவனே இறைவன். அதைப் போய் வெளியில் பல தேடுகின்றனர் என்கிறார் மகரிசி. அப்படி இருக்கையில் நட்ட கல்லைச் சுற்றி வந்தால் அது பேசுமோ? என்கிறார் சிவவாக்கியார்.

"உன்னிலே நானடங்க என்னுளே நீ விளங்க

உனது தன்மை ஒளிர என்னுள்ளத் தூய்மை பெற்றேன்

இன்னும் வேறென்ன வேண்டும் இப்பேறு பெற்ற பின்னர்

எடுத்த மனிதப் பிறப்பெய்தியதே முழுமை"

என்கிறார் வேதாத்திரி மகரிசி.

சிவம் என்பது அசைவற்ற, எல்லையற்ற நிலை. அது அசையும் போது சக்தி. அலைந்தால் மனம். அடங்கினால் சிவம். மனம் அடங்கி எந்தக் காட்சியும் இல்லாத நிலை - சிவம்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும், மருள் நீங்கி

மாசறு காட்சி யவர்க்கு"

என்பது திருக்குறள். மாசறு காட்சி- ஏகம். ஏகத்தைக் காண்பவரிடம் இன்பம் மட்டுமே இருக்கும்.

"எல்லாம் வல்ல தெய்வமது
எங்கும் உள்ளது நீக்கமற
சொல்லால் மட்டும் நம்பாதே

சுயமாய்ச் சிந்தித்தே தெளிவாய்
வல்லாய் உடலில் இயக்கமவன்
வாழ்வில் உயிரில் அறிவும் அவன்
கல்லார் கற்றார் செயல் விளைவாய்க்
காணும் இன்ப துன்பமவன்.

அவனின் இயக்கம் அணுவாற்றல்
அணுவின் கூட்டுப் பக்குவம்நீ
அவனில்தான்நீ உன்னில் அவன்
அவன் யார்? நீயார்? பிரிவேது?
அவனை மறந்தால்நீ சிறியோன்
அவனை அறிந்தால்நீ பெரியோன்
அவன் நீ ஒன்றாய் அறிந்தைடம்
அறிவு முழுமை அதுமுக்தி



உடலும், மனமும் அசைவற்று இருக்கும் அனுபவம் இறை அனுபவம்.

"சிந்தையை அடக்கிறயே சும்மா இருக்கின்ற சீர்"

"அறிவு அசைவற்றிருக்கப் பெரும் ஆனந்தம் பொங்குதங்கே"

என்கிறார் வேதாத்திரி மகரிசி.

வாழ்க்கையே பேராட்டமாக இருக்கிறது. மனம் சுகத்தைத் தேடுகிறது.

தேடுவது பொருளாகவோ, உறவாகவோ இருகக்கும் போது நாட்டம் அதிகரிக்க, அதிகரிக்க சுகம் துன்பமாக மாறுகிறது.

மனம் தேடுவது சுகம். தேடுமிடம் தான் தவறானது.

அளப்பரிய இன்பத்தைத் தன்னுள்ளே கண்டவன் துறவி. அவன் கடும்பற்றுள்ளவன். தன்னையே பற்றிக் கொண்டான்.

"தேடாதே. பார்" -இயேசுநாதர்.

" Have a look " - இரமணர்

"உன்னை நீ அறிந்த போது அனைத்தையும் அறிந்தவனாகிறாய்.-- உபநிடதம்.

"யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்

அதனின் அதனின் இலன்" - குறள்.

"அவனில் தான் நீ உன்னில் அவன்

அவன் யார் நீ யார் பிரிவேது?

"அவன் நீஒன்றாய் அறிந்த இடம்

அறிவு முழுமை அது முக்தி" - மகரிசி

நான் யார் ? என்ற கேள்வியை எழுப்ப , தன்னை அறியும் முயற்சி தான் மனிதனை மகிழ்வாக வாழச் செய்ய இன்றியமையாததாகும் .இதுவே " தன்னை அறிதல்" , "தன்னுணர் நிலை" , "நான் யார்" என்பது.

நான் என்பது ரூபமா? அரூபமா? பொருளா? சக்தியா? உடலா? மனமா?அறிவா? நான் எங்கே இருந்தேன்?

எப்படி இருந்தேன்? ஏன் வந்தேன் ?எங்கே வந்தேன்? ஏன் இருக்கிறேன்? எனக்குச் செல்வேன் ? எப்படி முடிவேன்?

என்று மூலமும் , முடிவும் எதுவென அறிய ஆறாவது அறிவின் பண்பட்ட நிலையே தன்னுணர் நிலை .

இதனை உணர்ந்து கொள்ளும் போது இறைநிலையே நானாக என்னுளே அறிவாக விளங்குவது தெளிவாகும்.

மனஅலைகளின் சுழல் விரைவு குறைய குறைய மனத்தின் நிலைபொருளான அறிவாகி மனமே தரத்தில் உயருகிறது. பிறகு மனம் அசைவற்று அறிவே அகக்காட்சியாகும்.

இங்குதான் " அவனே நான் , நானே அவன் " என்ற அறிவின் முழுமைப்பேறு கிட்டுகிறது என்கிறார் வேதாத்திரி மகரிசி.

மார்கழியையும் டிசம்பர் மாதத்தையும் ”கிழக்கும் மேற்கும் என்பார்கள். மார்கழியையும் ஆண்டாளையும் பிரிக்க முடியாது.

பன்னிரண்டு வைணவ ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாள் பாடிய நூல் **திருப்பாவை** ஆகும்.

இது 30 பாடல்களால் ஆனது. வைணவப் பக்தி நூல்களின் தொகுப்பான நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தின் 473 தொடக்கம் 503 வரையுள்ள பாடல்கள் திருப்பாவைப் பாடல்கள் ஆகும்.

”மாயோமாய் வந்து நம் தூமலர் தூவித் தொழுது

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்

போய பிழையும் புகுதருவா நின்றளவும்

தீயனுள் தூசாகும்செப்போலோர் எம்பாவாய்.“

போய பிழை என்பது பழவினை. புகுதருவா என்பது புதுவினை - ஆகாம்யம்.

இந்த சஞ்சிதப் பிராரப்தமும், ஆகாம்யமும் எல்லா வினைகளும் வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க, அதாவது உன்னைக் கொண்டு என்னில் வைத்தேன், என்னையும் உன்னில் இட்டேன் என்று பேசுவார்கள் ஆழ்வார்கள்.

இந்த முறையில் அவனை முன் வைத்து இவன் அதில் இணக்கமாகி விட்டானேயால் அந்த நிலையில் அவனே பேசுவது, அவனாகவே நிற்பது,

அவன் நினைவாகவே ஆவது, அவன் நினைவிலேயே காரியத்தைச் செய்வது என்ற போது அவனாகி விடுகிறான்.

அந்த நிலையில் போய பிழையும் புகுதருவா நின்றனவும் தீயினில் தூசாகும்செப்போலார் எம்பாவாய் என்று நீங்கள் படித்திருப்பீர்கள்.

கடவுள் தன்மைப் பற்றி விளக்கமாகவும் தெளிவாகவும் சொல்கிறார் மகரிசி

”கண்காது மூக்கு வைத்துக் கதைகள் சொல்லிக்

கருத்துக்குக் கடவுள்தனைச் சிறுமை யாக்கி.

புண்பட்ட நெஞ்சங்கள் மேலும் புண்ணாய்ப்

போகும் வழியறியாது தவித்து. வாழ்வில்

கண்கலங்கி நிற்போர்க்கும், கடவுள் தன்மை

கர்மத்தின் விளைவாக எழுந்தியங்கும்

உண்மையினை விளக்குவதே, இக்காலத் திற்கு

ஒத்தஉயிர்த் தொண்டாகும். உணர்வோம்!செய்வோம்!

இறைவனின் இன்னொரு பக்கம்தான் மனிதன் அல்லது மனிதனின் மருபக்கமாக இருக்கும் இறைவனை தெளிவுபடுத்துவது தான்’ வேதாத்திரியம்’

"அண்டத்தில் கடவுளாய் அழைக்கப் படுபவன்
பிண்டத்தில் உயிரெனப் பேசப்படுகிறான் .
கண்டத்தின் மேலே கருத்தை நிறுத்தினோன்
அண்டத்தும் பிண்டத்தும் அவனையே காண்கிறாய் ."

மனித மனத்தின் உட்பொருளாக , இருப்பு நிலையாக இருப்பதே இறைநிலையாகும்.

நிலைபொருள் நிலையில் அறிவாகவும், அலைபொருள் நிலையில் மனமாகவும் , இரண்டுமாகவும் இருப்பவன் மனிதன்.

அலையை நிறுத்தி அழைக்கு அடித்தளம் கண்டால் அதுவே நிலை. நிலை என்ற இருப்பு நிலைதான் தெய்வமாகவும், அறிவாகவும் இருக்கிறது .

இதுவே அகண்டாகார பேரியக்க மண்டலத்தில் எங்கும் நீக்கமற நிலைத்து உள்ள சுத்தவெளியாக இருக்கிறது.

அகண்டாகார பேரியக்க மண்டலத்தில் சுத்தவெளி அறிவும் மனமுமாக இயங்கும் சீவனில் உயிர்த்துகளாகிய விண்ணின் மையத்தில் இருப்பதுவும் அதே சுத்தவெளி தான் .

அதுவே பேரியக்க மண்டலம் அனைத்தையும் சூழ்ந்து அழுத்தி எல்லாவற்றையும் முறையாக இயங்கச் செய்கிறது .

சீவனுக்குள்ளாக அமைந்த சுத்தவெளி அதன் படர்க்கை நிலையென்ற மனத்தால் தனது அலையாற்றலால் தோன்றி இயங்கும் அனைத்தையும் சீவன்களின் மூலமும் மனிதனின் சிந்தனையின் மூலமும் உணர்ந்து கொள்கிறது என்கிறார் வேதாத்திரி மகரிசி.

நான் யார்? என்ற ஆராய்ச்சி இறையுணர்வில் முடியும். இறைநிலையை உணரத் தொடங்கினால் மனதில் தெளிவுண்டாகும்.

ஆசைகள் ஒழுங்கு பெறும். எது எல்லாவற்றுக்கும் பெரிதோ, அதைவிடப் பெரியது வேறெதுவும் இல்லையோ, அந்தப் பரம்பொருளை உணரும்போது, ஆசை உண்டாக இடம் ஏது?

உடல் அளவில் குறுக்கிக் கொண்டிருக்கும் போது, நான் வல்லவன், செல்வந்தன், பெரியவன், அழகன் என்ற தற்பெருமை உண்டாகிறது.

அல்லது ஏழை, நோயாளி என்ற தாழ்வு நிலை உண்டாகிறது. யாரோடும் ஒப்புமை இல்லாத ஒரு பெரிய பொருளாக நானே இருக்கும் நிலையை உணர்ந்துவிட்டால் தற்பெருமை உண்டாகாது.

நானே பிரம்மாக இருக்கிறேன். பிரம்மமே எல்லாமாக இருக்கிறது என்று உணரும்போது, எதன் மீது ஆசை கொள்வது? பற்று வைப்பது?

அந்நிலையில் "நான்" என்னும் அகப்பற்று, "எனது" என்ற புறப்பற்றுகள் நம்மை விட்டு விலகுகின்றன.

தன்னை அறிந்த நிலையில் உள்ளுணர்வில் அன்பும் அறிவும் பிறக்கிறது. அந்நிலையில் ஞானிகள் எல்லாம் சொல்கின்ற ஆன்மநேய ஒருமைப்பாடு மலர்கிறது.

அப்போது அறிவில் பூரணத்துவமும், அடக்கமும், அமைதியும் உண்டாகும். மனம் அத்தூய்மையான நிலையில் இவ்வுலகம் முழுமைக்கும் வாழ்வு தரும் நிறைநிலையைப் பெறுகிறது என்கிறார் வேதாத்திரி மகரிசி.

இரண்டு இளம் துறவிகள்.

தியானத்தில் அமர்ந்திருந்தார்கள்.

ஒருவர் சொன்னார். ‘நான் நானாக இல்லை.

வாழ்வோடு முழுக்கக் கலந்துவிட்டேன்.

இதுதான் ஜென் நிலை!’

இரண்டாவது துறவி கேட்டார்.

‘எப்படிச் சொல்கிறாய்?’

‘ஆற்றில் மரக்கட்டை மிதக்கிறது, பார்த்திருக்கிறாயா?’

‘ஆமாம். அதற்கென்ன?’

‘அந்த மரக்கட்டை நீரோட்டத்தை எதிர்த்துப்
போரிடுவதில்லை.

அதன் போக்கில் இதுவும் செல்கிறது.

அதுபோல, நானும் என்னுடைய தனிப்பட்ட உணர்வை
இழந்துவிட்டேன், எதையும் எதிர்ப்பதில்லை,
முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன்,
எந்த முனைப்பும் எதிர்பார்ப்பும் இல்லாதபடி
வாழ்க்கையின் நீரோட்டத்தில் மிதந்து செல்கிறேன்!’

இரண்டாவது துறவி சிரித்தார்.

‘அப்படிப் பார்த்தால் நான்தான் உன்னைவிட அதிகம் ஜென்னில்
கலந்திருக்கிறேன்!’

‘எப்படி?’

‘தண்ணீரில் பனிக்கட்டி மிதக்கிறது, பார்த்திருக்கிறாயா?’

‘ஆமாம். அதற்கென்ன?’

‘அந்தப் பனிக்கட்டியையும் தண்ணீரையும் பிரித்துச் சொல்லமுடியாது. இரண்டும் ஒன்றாகக் கலந்துவிட்ட நிலைமை. அதேபோல், நானும் என்னுடைய உணர்வை இழந்து வாழ்க்கையின் நீரோட்டத்தில் பனிக்கட்டியாக மிதக்கிறேன்!’

இவர்கள் பேசுவதைப் பார்த்துக்கொண்டே அவர்களுடைய குருநாதர் வந்தார்.

‘முட்டாள்களே, நீங்கள் இருவரும் இன்னும் ஜென்னைப் புரிந்துகொள்ளவில்லை’ என்றார்.

‘என்ன சொல்கிறீர்கள் குருவே?’

‘தண்ணீரில் மரக்கட்டையாகவோ, பனிக்கட்டியாகவோ மிதப்பது ஜென் அல்ல. அந்தத் தண்ணீராகவே ஆகிவிடுவதுதான்!’ என்றார் குருநாதர்.

‘நீங்கள் இருவருமே அந்த நிலையை இன்னும் எட்டவில்லை." என்றார்.

## 9. கருக்குழியில் ஆசையாய்.காதலுற்று நிற்காதே?

மனதிலுள்ள கேடுகளுக்கு எல்லாம் காரணமாய் இருப்பது காமநோய்.

காமம் என்னும் மலம் சித்தத்தினின்று அறுபடும் பொழுது ஜீவன் சிவமாகின்றான்.

"இதய ஆழம் தனிலே காமம் முதலான ஆறு முதலைகள் உள்ளன. ஆனால் விவேகம், வைராக்கியம் என்னும் மஞ்சளைப் புசிக்கொண்டால் அவை உன்னைத் தாக்காது" என்பார் இராமகிருஷ்ணர்.

"மைஅடர்ந்த கண்ணினார் மயக்கிடும் மயக்கிலே

ஐயிறந்து கொண்டுநீங்கள் அல்லல்அற்று இருப்பீர்கள்

மெய்அறிந்த சிந்தையால் விளங்குஞானம் எய்தினால்

உய்யறிந்து கொண்டுநீங்கள் ஊழிகாலம் வாழ்வீரே."

அழகிய மை நிரம்பிய கண்களையுடைய மயக்கிடும் பெண்கள் மயகத்திலே நிங்கள் அல்லலுற்று இருக்கிறீர்கள்.

அதனை விட்டு உண்மையை உணரும் சிந்தனையால் ஞானம் பெற்றால் நீங்கள் பல ஆண்டு காலம் வாழலாமே? என்கிறார் சிவவாக்கியார்.

"கருவிந்த வாசலால் கலங்குனின்ற ஊமைகாள்,

குருவிருந்து சொன்னவார்த்தை குறித்துநோக்க வல்லீரேல்

உருவிலங்கு மேனியாகி உம்பராகி நின்றுநீர்

திருவிளங்கு மேனியாகச் சென்றுகூடல் ஆகுமே!"

கருவுக்கான விந்து விடும் வாசலில் கலங்குகின்ற ஊமைகளே! குரு சொன்ன வார்த்தைகளை பின்பற்றினால் உய்யலாமே! என்று அழைக்கிறார் சிவாக்கியார்.

"கழுத்தையும் நிமிர்த்திநல்ல கண்ணையும் விழித்துநீர்

பழுத்துவாய் விழிந்துபோன பாவம் என்னபாவமே?
அழுத்தமான வித்திலே அனாதியாய் இருப்பதோர்
எழுத்திலோ எனழுத்திலோ இருக்கலாம் இருந்துமே."

" ஈன்றவாச லூக்குஇரங்கி எண்ணிறந்து போவீர்காள்!
கான்றவாழை மொட்டலர்ந்த காரணம் அறிகிலீர்
நான்றவாச லைத்திறந்து நாடிநோக்க வல்லீரேல்,
தோன்றுமாயை விட்டொழிந்து சோதிவந்து தோன்றுமே".

" உழலும்வாச லுக்குஇரங்கி ஊசலாடும் ஊமைகாள்?
உழலும்வாச லைத்திறந்து உண்மைசேர எண்ணிலீர்?
உழலும்வாச லைத்திறந்து உண்மைநீர் உணர்ந்தபின்
உழலும்வாசல் உள்ளிருந்த உண்மைதானும் ஆவிரே."

என்று பல பாடல்களில் பெண்களின் காம வலையில் சிக்கித் தவிர்க்கும் மானுடத்தை சிற்றின்பத்தை விட்டு பேரின்பம் காண வாரீர் என்று அழைக்கிறார் சிவவாக்கியார்.

மனிதன் தெய்வத் தன்மை எய்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைச் சிவபெருமான தாமே தவம்புரிந்து காட்டுகிறார்

சிவபெருமான் ஆழ்ந்த நிஷ்டையில் இருக்கும் பொழுது காமன் அவர் மனதைக் கலைக்க முயல்கின்றான்.

மன்மதனுக்கு வசப்படாத சிவபெருமான் தம் ஞானாக்கினியால் அவனைச் சாம்பலாக்கி விடுகிறார்.

உயர்நிலையை அடைய விரும்புவர் செய்ய வேண்டிய செயல் இதுவேயாகும்.

காமம், கோபம் முதலியவை விலகாது. அவற்றை இறைவனை நோக்கித் திருப்பி விடுங்கள்.

காமம், பேராசை போன்றவை இருக்க வேண்டும் என்றால் இறைவனை அடைதவற்காக அவற்றைத் திருப்புங்கள்.

கடவுள் நம்மை ஏன் உலக வாழ்க்கையிலிருந்து விடுவிக்கவில்லை?

நோய் குணமடையும்போது விடுவிப்பார். காமம் மற்றும் ஆசைகளில நாட்டம் மறையும்போது விடுவிப்பார்.

காமன் உடலைச் சாம்பலாக்குபவர் உயர் நிலையை அடைகின்றர்.

காமனுக்கு வசப்படுபவர் கீழ்மையும் அவனை வெல்லுபவர் மேன்மையையும் அடைகின்றனர். இது சத்தியம்.

இதனைத் தாயுமானவர் ”மெய் என்றே வேளான் அவனும்மெய் விட்டான்” என்பதில் குறிப்பிடுகின்றார்.

**கால(ன்)ம் வெட்டிய காமக்குழி! - (மருத்துவர். வி.என். இராஜசேகரன்)**

மனிதன் நினைப்பதுண்டு

வாழ்வு நிலைக்கு மென்று.

இறைவன் நினைப்பதுண்டு

பாவம் மனிதனென்று”!

என்று கவியரசர் கண்ணதாசன் பாடல் கூறும்.

அப்படிப்பட்ட பாவப்பட்ட தம்பதிகள் எனக்குப் பழக்கமாயினர். அவர்களைப் பரிசோதித்தபோது இவர்களா இப்படி அல்லது இவர்களுக்குமா இப்படி என்று என்னால் துக்கப்படாமல் இருக்க முடியவில்லை.

அவர் ஒரு பொறியாளர். அமெரிக்காவில் சென்று செட்டிலாகி வாழ்பவர்.

அவர் பொறியாளர் மட்டுமல்ல நல்ல நெறியாளரும் கூட. வாழ்வதெல்லாம் வள்ளலார் போல் தான் தேடிய செல்வங்களில் பெரும்பங்கை வாழ்வில் ரணப்பட்டவர்கள் நல் வாழ்விற்காக வழங்குபவர்.

வள்ளலார்போல் திருமணமே வேண்டாமென்று வெறுத்த அவரை அப்படியே விட்டிருக்கலாம். மாறாகத் திருமணம் என்ற பந்தத்திற்குள் தன் தாயாரால் தள்ளப்பட்டார்.

அன்பு மகன், ஆசை மகன், செல்வமகன் அதுவும் சீமானாய் இருப்பவனை சிவனே என்று எந்தத் தாய் இருக்க விடுவார்? மருமகளைப் பார்க்க வேண்டும். மனதார ரசிக்க வேண்டும். பேரன் பார்க்க வேண்டும், பேர்த்தி சொல்கேட்கவேண்டும் என்று இவரை அசத்திவிட்டார்.

பொறியாளர் தன் நெறிகளில் ஒன்றை மீறி மண வாழ்க்கைக்கு சம்மதித்தார். தாய்க்கு ஆனந்தம் தாங்கவில்லை.

தமிழ்ப் பண்பாடுடைய தமிழ்நாட்டைச் சேர்ந்த பொறியாளர் மணமகளாய் வந்தார். இல்லறத்தில் எந்தச் சிக்கலும் இல்லை.

“இன்பமே அன்றித் துன்பம் இல்லை” என்றுதான் வாழ்க்கைசுகமாக ஓடியது. ஒரே ஒரு குறை. தங்களுக்கென்று வாரிசு உருவாகவில்லை என்பது தான் அவர்களை உறுத்தியது.

அவர்களை விட அவரின் தாய்க்குத்தான் மிகப்பெரும் கவலை. அந்தக் கவலையில் கண் மூடிவிட்டார்.

குழந்தை இல்லாக் குறை என்பது தசரதனையே வருத்தியுள்ள போது சாமான்யர்களை வருத்தாதா?

இவர்களின் மனதுக்குள்ளும் அது உறுத்தலாகத்தான் இருந்தது. அவர்கள் தமிழகம் வந்தால் என்னைச் சந்திக்காமல் போவதில்லை.

அத்தோடு உடற்பரிசோதனை செய்யவும் தவறுதில்லை. இந்த முறையும் அப்படி வந்த போதுதான் அந்த அதிர்ச்சி எனக்குள் காத்திருந்தது.

அவர் அமெரிக்காவிலிருந்து வரும் போதெல்லாம் எனக்கென்று ஏதாவது பரிசுப்பொருள் வாங்கி வருவார்.

இந்த முறை அவர் பரிசுப் பொருளோடு தன் உடலுக்குள் ஹெச்.ஐ.வி. தொற்றையும் வாங்கி வந்திருந்தார்

ஒரு மருத்துவரான என்னால் இதனை சீரணிக்க முடியவில்லை. காரணம் ஒரு நெறியின் படி வாழ்ந்தவர். தவறி இருக்க வாய்ப்பில்லை.

தவறி இருக்காமல் ஹெச்.ஐ.வி தொற்றவும் வாய்ப்பில்லை. என்ன டாக்டர் ரிப்போர்ட்டெல்லாம் எப்படி என்றார். நான் சொல்ல முடியாமல் சொன்னேன்.

எங்கே எப்படி என்றேன். அவரும் யோசித்து யோசித்து தேடித் தேடி ஞாபகப்படுத்தி சொன்னார்.

திருமணம் என்பது புனிதமானது என்பது தெரியும். அதேசமயத்தில் வருபவளை திருப்தியாக வைத்துக்கொள்ளவும் வேண்டும் என்பது தெரியும்.

ஒரு வற்புறுத்தலுக்காக கட்டிக்கொண்ட வள்ளலார் தன் மனைவியைத் தீண்டவே இல்லை, அந்த வைராக்கியம் அவரைப் பின்பற்றிய எனக்கு இல்லாமல் போனது.

தன் மனைவி தன்னைப் பற்றிய உண்மை நிலையை அவர் உணரும் வண்ணம் அந்த மகான் எடுத்துரைத்து உலகின் ஒளியாகத் திகழ்ந்தார்

அடியேன் திருமணம் மறுத்துத் தான் இருந்தேன். தாயின் நிர்ப்பந்தத்தால் மண வாழ்வின் ஒப்பந்தம் போட்டேன்.

ஒப்பந்தத்தில் உடன்படுபவள் எந்த விதத்திலும் உணர்ச்சிக்காக ஏங்கக் கூடாது என்ற உந்துலால் என் உணர்வுகளை அதற்கு ஏற்ற ஆண்மையினை தெரிந்துகொள்ள ஒரு குளத்தில் குளிக்கும் கட்டாயம் ஏற்பட்டது.

நல்ல குளம் என்று நினைத்துதான் மூழ்கினேன். இப்போது வாழ்க்கையே மூழ்கிவிட்டது.

நான் எனக்கும் துரோகம் செய்துள்ளேன். என் மனசாட்சிக்கும் துரோகம் செய்துள்ளேன். என் குருநாதரின் கொள்கைக்கும் துரோகம் செய்துள்ளேன்.

கூட வந்துள்ள மனைவிக்கும் துரோகம் செயதுள்ளேன். இதனால் இயற்கை எனக்கு துரோகம் இழைத்துவிட்டது என்று கண்ணீர் சிந்தினார்.

பயப்படாதீர்கள், இப்போது தான் தொற்றி இருக்கிறது. ஒழுங்காக மருந்து எடுத்துகொண்டால் வாழ்க்கையை ஓரளவு வாழலாம். பயம் மட்டும் வேண்டாம்.

இன்னும் பத்தாண்டுகளுக்கு உங்களுக்கு உங்களுக்கு உத்தரவாதம் தருகிறேன் என்று சொல்லிவிட்டு தயங்கித் தயங்கி இன்னொன்றும் சொன்னேன். சொல்லுங்கள் டாக்டர் என்றார்.

இது போன்ற நேரங்களில் மனைவியையும் பரிசோதிப்பது தான் உகந்தது என்றேன்.

மறுத்தும் மறுக்காமல் மனதில்லாமல் அன்று மறு நாள் மனைவியை அழைத்துவந்தார்.

பரிசோதனையில் அவருக்கும் இவர் தந்த பரிசு ஒட்டியிருந்தது. என்ன செய்ய விதியே என்று அழுதனர்.

சங்க இலக்கியத்தில் வரும் பெண்மானும் பிணைமானும்போல் வாழ்ந்த இல்லறத்தில் இப்படிக் கீறல் விழுந்துவிட்டது.

இருவருமே பொறியாளர்கள், படித்தவர்கள் வருகிறோம் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். நான் வரமாட்டார்களோ என்று தான் இருந்தேன். ஆனால் நான் எதிர்பாராத வண்ணம் அவர்கள் இருவரும் திடீரென்று வந்தார்கள்.

சோதித்ததிலும் மகிழ்ச்சியோடு காணப்பட்டவர்கள், வாருங்கள் வைத்தியம் செய்து கொள்ளுங்கள் என்று அவர்களுக்கு அது பற்றிய செய்திகளைச் சொல்லத் துவங்கும் முன் வைத்தியம் இருக்கட்டும் டாக்டர். நாங்கள் ஒரு கொள்கை முடிவோடு வந்திருக்கிறோம். அதனைப் பேசிவிட்டு வைத்தியம் பற்றி அடுத்துப் பேசுவோம் என்றனர்.

சொல்லுங்கள் என்றேன். டாக்டர் எங்களுக்குப் பிள்ளை இல்லை. ஆனால் பத்துத் தலைமுறைக்கு மேல் சொத்து அமெரிக்காவிலும் இருக்கிறது.

பிள்ளை இல்லையே என்ற குறையோடு நாங்கள் சாகவிரும்பவில்லை. எங்களின் வாரிசாக ஒரு குழந்தையைத் தத்தெடுத்து அதன்பேரில் எழுதி வைக்க விரும்புகிறோம்.

அதும் ஏழைக் குழந்தையாக இருக்க வேண்டும். ஆனால் ஒரே விஷயம் என்னவென்றால் எங்கள் இருவருக்கும் ஹெச்.ஐ.வி. இருப்பதைச் சொல்லித்தான் கேட்போம். தத்துக்கொடுப்பவர்களிடம் பொய்சொல்லிக் கேட்கமாட்டோம் என்றனர்.

எனக்கு இது மிரட்சியாகவும் புரட்சியாகவும் தெரிந்தது. தங்களின் நோய் பற்றி பட்டவர்த்தனத்தனமாக, பகிரங்கமாகப் பறைசாற்றிதான் தத்துக் கேட்போம் என்ற அவர்களின் பிடிவாதமும், புரட்சியாகத் தெரிந்தது.

அதே சமயத்தில் இப்படிப்பட்ட ஹெச்.ஐ.வி. தாக்கிய தம்பதிகளுக்கு எவர் பிள்ளைகளைத் தத்துக்கொடுக்க வருவர் என்ற மிரட்சியும் இருந்தது.

அவர்களோ டாக்டர் இது தான் எங்கள் முடிவு யோசனை சொல்லுங்கள் என்றனர்.

தீர்ப்பு இன்னதுதான் என்று தெரிந்த பிறகு முடிவு பற்றிக் கருத்து கூறுவது முட்டாள் தனம் என்பது எனக்குத் தெரியாதா?

இருந்தாலும் இது பற்றி விழிப்புணர்வு இயக்கங்கள் தொண்டு நிறுவனங்களிடம் கேட்டுப் பாருங்கள். சாமான்யர்கள் அஞ்சுவார்கள் என்று மட்டும் கூறி உங்கள் முயற்சி வெல்க என்று வாழ்த்தினேன்.

அதன்பின் போனவர்கள்தான். இருக்கின்றார்களோ இல்லையோ, தத்து எடுத்தார்களோ இல்லையோ செய்தி ஏதும் இல்லை.

யானைக்கும் அடி சறுக்கும் என்பது போல் ஒழுக்கமானவர்கள் அல்லது உன்னதமானவர்களும் ஒரு சபலத்தில் உலகை விட்டே போகிறார்கள் என்று எண்ணும்போது இது விதியா இயற்கையின் சதியா என்று புரியவில்லை.

காலம் வெட்டிய காமக் குழிகளில் இவர்கள் போன்று இன்னும் எத்தனை யானைகள் விழுந்தனவோ.. விழுமோ..!

## காமத்தில் அளவு முறை வேண்டும்?

காம உணர்ச்சியைப் புறக்கணிக்க வேண்டும் என்று நம் ஆன்மிகம் சொன்னதில்லை. அதை ஒழுங்கு செய்துகொள்ள வேண்டும் என்றே சொல்கிறது அது.

உலகின் தலைசிறந்த ஆன்மிக நூலான திருக்குறளை எழுதிய வள்ளுவர், அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என காம உணர்ச்சியின் முக்கியத்துவம் பற்றி அதற்கெனத் தனியாய் மூன்றில் ஒரு பங்கு இடம் கொடுத்துத் தம் நூலை அமைத்துள்ளார்.

காமத்தை வென்றவர்களே ஞானிகள். காமத்தை அனுபவித்தும் வெல்லலாம். அனுபவியாமலும் வெல்லலாம்.

ஆதிசங்கரர், விவேகானந்தர் போன்றோர் அந்த உணர்ச்சியை அனுபவியாமலே, அது தம் வாழ்வில் தேவையில்லை என திடசித்தத்தால் வென்றவர்கள்.

ராகவேந்திரர், புத்தர், போன்றோர் இல்லறத்தில் ஈடுபட்டு காம சுகத்தை அனுபவித்து மக்கட்பேற்றை அடைந்து, பின் காமத்தை முற்றிலுமாய்த் துறந்து

துறவியானவர்கள்.

'உரன் என்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரன் என்னும் வைப்பிற்கோர் வித்து!' - என்கிறது வள்ளுவம்.

ஞான வலிமை என்னும் அங்குசத்தைக் கொண்டு ஐம்புல உணர்வுகளாகிய யானையை அடக்கி வெல்பவன் போற்றத்தக்கவன்.

அத்தகு ஞானம் வாய்க்கப் பெறும்வரை, உணர்ச்சிகளை அனுபவித்து ஒரு கட்டுக்குள் கொண்டுவந்து இது இவ்வளவுதான் என மெய்யறிவு பெற்று ஞானியாதல் என்பது இயல்பான ஒரு நெறி.

அருணகிரிநாதர் போல, காமத்தில் அளவற்றுத் திகட்டத் திகட்டத் தோய்ந்து, பின் வெறுத்து ஞானியானவர்களும் உண்டு என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

ஆனால், காமத்திலேயே உழல்பவன் ஞானியாக இயலாது என்றும், மெய்ஞ்ஞானியான அருணகிரியார் மற்றவர் அனுபவங்களைத் தம் மீது ஏற்றிப் பாடினார் என்றும் சொல்பவர்களும் இருக்கிறார்கள்.

காம உணர்வு இல்லாத பருவம் என வாழ்வில் ஒரு பருவமும் இல்லை என்கிறார் சிவானந்தர். குழந்தைப் பருவத்தில் அந்த உணர்வு மறைந்திருக்கிறது. இளமைப் பருவத்தில் அது ஓங்கியிருக்கிறது. முதுமையில் அது அடங்கியிருக்கிறது.

இயல்பான இல்வாழ்வில் ஈடுபட்டு, ஒருவனுக்கு ஒருத்தி என வாழ்ந்து, மக்கட்பேற்றை அடைந்து, வாழ்வின் இன்ப துன்பங்களை இணைந்து அனுபவித்து, பின் ஞானியாக மலர்ச்சி அடைதல் என்பது மக்களுக்கு விதிக்கப்பட்டுள்ள அறம்.இந்த அறத்தையே வேதாத்திரியம் வலியுறுத்துகிறது.

அதனால்தான் ஒருவனுக்கு ஒருத்தி என வாழும் வாழ்வில் உள்ள காதல் நயங்களை வள்ளுவம் மனம் தித்திக்கும் வகையில் பேசுகிறது.

மாணிக்கவாசகரின் புலம்பல்கள்.

காமம், வெகுளி, மயக்கம் என்ற அழுக்குகள், உயிரின் தாமத குணத்தினால் வந்து சேர்கின்றன. இவ்வழுக்குகள் உடலளவில் துன்புறுத்துவதோடன்றி மனத்திலும் புகுந்து, உயிரை மறைத்து விடுகின்றன.

தம்முடைய புல்லிய உடலும், தாம் பெற்ற பிழையான அறிவும், குற்றமுடைய தம் மனமும் ஆகிய மூன்றும் இறையருள் பெறத் தடையாய் இருக்கின்றன என்கிறார் மாணிக்கவாசகர்.

பிறவித் துன்பம், அதன் அடிப்படையாகிய காமநோய் ஆகியவற்றின் தாக்குதலால் தாம் அழிவதாக மாணிக்கவாசகர் வருந்திக் கூறுகின்றார்.

துன்பம் என்னும் கடலில், பிறவி என்ற சுழலில் சிக்கிப் பெண்களாகிய அலைகளால் தாக்கப்பட்டுக் காமம் என்னும் சுறாமீன்களுக்கு இரையாவதற்காக உயிர்கள் உடலெடுத்து வருந்துகின்றன என உருவகமாக இதனைக் குறிப்பிடுகின்றார்.

**. . . . இடர்க்கடல்வாய்ச்**
**சுழிசென்று, மாதர்த் திரைபொரக் காமச் சுறவு எறிய**
**அழிகின்றனன்**

(பாடல், 4)

காமம், வெகுளி, மயக்கம் என்னும் மூவகைக் குற்றங்களில் காமமே, ஏனைய குற்றங்களுக்கும் அடிப்படையாய் இருத்தலால், சமயத் துறை சார்ந்த ஆசிரியர் அனைவரும் காமத்தை இகழ்ந்து பாடுவர்.

சுருண்ட கூந்தல் அழகினையுடைய பெண்களால் ஈர்க்கப்பட்டு மயங்கி, இறைவனின் அருட்பண்பை மறந்து அதன் விளைவாக, இருளில் விழச் செய்யும் வினைகளில் சிக்கி உடலில் கிடந்து, பிறப்பு இறப்புகளில் பட்டு வருந்தும் நிலையை உயிர் அடைகின்றது.

**சுருள்புரி கூழையர் சூழலில் பட்டுன் திறம் மறந்திங்கு**
**இருள்புரி யாக்கையிலே கிடந்து எய்த்தனன்**

(பாடல், 5)

இவ்வாறு எய்த்துக் கிடப்பதை உணர்வதே உயிருக்கு ஒரு பக்குவநிலை அல்லவா! இதனைக் குறிப்புணர்த்துகிறது மாணிக்கவாசகர் பாடல்.

மின்னல் போன்ற பார்வையும், அசையும் மெல்லிடையும் கொண்ட பெண்கள் வெகுண்டு

நோக்கும் தம் பார்வையால் காமத்தை உண்டாக்கி வீழ்த்தும் ஆற்றல் உடையவராவர். அவ்வலையில் சிக்கியோர் மீள முடியாமல் உடலும் உயிரும் உள்ளமும் மெலிந்து துன்புறுவர். மாணிக்கவாசகர் இந்நிலையை,

**மின்கணினார், நுடங்கும் இடையார்,வெகுளி வலையில் அகப்பட்டுப்**
**புன்கணனாய்ப் புரள்வேனை**

(பாடல், 7)

என எடுத்துரைக்கிறார்.

தாழியில் உள்ள தயிரை வலிய மத்தினையிட்டுப் பலமுறை வலித்துக் கடைகின்றபோது அத்தயிர்க் கட்டிகள் உடைந்து சிதறுவது போல, மகளிரின் அழகிய கண் பார்வை தம்முடைய நெஞ்சத்தை நிலைகுலையச் செய்கிறது என்கிறார் மாணிக்கவாசகர்.

காமத்தால் தடுமாறும் உயிரின் இயல்பினை இவ்வாறு காட்டுகின்றார். இறையடியைச் சார்வதற்கும், இறைபணி நிற்பதற்கும் காமம் தடையாக உள்ளது.

இத்தடையை நீக்கி,

**எப்போது வந்து எந்நாள் வணங்குவன்**

(பாடல், 6)

என இறைவனை நாடிச் செல்ல விரும்பும் உயிரின் வேட்கையைப் புலப்படுத்துகிறார்.

மாணிக்கவாசகர், உயிரின் உளைச்சலை உணர்த்தத் தறிநெசவுக் காட்சியை எடுத்துக் காட்டுகிறார். நெசவுக்காக அமைக்கப்பட்டிருக்கும் பாவினிடையே இப்பக்கமும் அப்பக்கமுமாக உந்தித் தள்ளப்படுகின்ற குழல்போலத் தாம் உழல்வதாக வருந்திக் கூறுகிறார் (பாடல், 8).

அடியவன் தன் குறைகளை இறைவன் திருமுன்பு வெளியிட்டு அவன் அன்பையும் அருளையும் வேண்டுவது ஒருநிலை.

அடுத்த நிலை, உண்மையான, உயர்ந்த இறையடியார் பெற்ற இறையின்பப் பேறுகளை நோக்கியும் உணர்ந்தும், அந்த நிலைக்கு வளர ஏக்கம் கொள்ளுதல் ஆகும். முதல் பாடலிலேயே,

**நின் சேவடி சேர்ந்து அமைந்த**

**பழுத்த மனத்து அடியர் உடன் போயினர்**

(பாடல், 1)

என அடியவர் இறைவனுடன் கலந்துவிடத் தாம் தனிமைப்பட்ட துயரை வெளிப்படுத்துகிறார்.

இறைவன் திருவடியாகிய தெப்பத்தைப் பற்றிக்கொண்டு அடியவர்கள் துன்ப வெள்ளத்திலிருந்து கரையேறிவிட்டனர் (பாடல், 4).

**பிறிவறியா அன்பர் நின் அருள் பெய்கழல் தாள்இணைக்கீழ்**
**மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார்**

(பாடல், 9)

என்றும் ஏங்குகிறார். குன்றாத செல்வத்தை, இறை இன்பத்தைப் பெற்று விட்ட அடியார்களை நோக்கி ஏங்குகிறது இறையன்பைப் பெறாத உள்ளம்.

ஒருவனை அடியனாக ஏற்றுக்கொண்டு அருள் வழங்குவதும், வெறுத்து ஒதுக்கிப் பிறப்புகளில் வீழ்த்தலும் இறைவன் விருப்பமே. தன் செயலால் ஆவதொன்றில்லை.

**கூவிடுவாய் கும்பிக்கே இடுவாய் நின் குறிப்பு அறியேன்**

(பாடல், 8)

என்று இதனை எடுத்துக் காட்டுகிறார் மாணிக்கவாசகர்.

## கடவுளைக் காணலாம்

காமத்தை கடந்தால் கடவுளைக் காணலாம் என்பது நமது சித்தாந்தங்களில் ஒன்று . புனிதமான கோயில்களில் ஏன் காமம் ததுப்பும் சிலைகள்?

சிவலிங்கத்தை கூட ஆண் பெண் ஆலிங்கம் செய்யும் ஒரு தத்துவமாக விளக்கம் தரும் முயற்சிதான் என்ன?

மனதை கடந்து செல்லவேண்டும் எப்படி ? காமம் என்னும் உயிர்ச் சக்தியை மனம் கடந்து செல்லும் போது எதை கடந்து உள்ள சென்றால் கட+உள் = கடவுளை காணலாம்?

உயிர் என்று நாம் எதை குறிப்பிடுகின்றோம்? உயிருக்கு எதாவது உருவம் இருக்கிறதா? நாத விந்து என்று நமது முன்னோர்கள் எதை சொன்னார்கள்?

உயிர் நிலை தானே இந்த நாத விந்து. காமத்தை அடக்கலாமா? அது அடக்கவேண்டிய ஒன்று அல்ல. சில சமயங்களில் தவிர்க்க வேண்டிய ஒன்று.

நீரிலே அடக்கும் ஒரு பந்து எப்படி மிகவும் வீறுக் கொண்டு மேல் எழுப்புகிறதோ அப்படிதான் காமமும் அடக்க அடக்க இன்னும் அதிகமாகி நம்மை அழித்துவிடும்.

எத்தனை சாமியார்களின் வாழ்க்கையை பாருங்கள், மண்ணாலும் பெண்ணாலும் பொண்ணாலும் விழ்ந்தவர் கோடி.

பால் உறவும் ஆன்மீக மேம்பாடும் (sex and spiritual development) என்ற பொருள் குறித்து விளங்கிக் கொள்ளும் முன் அதனுடைய மதிப்பைப் பற்றி நாம் உணர்ந்துக் கொள்ளவேண்டும்.

இந்த பால் உறவு என்ற ஒன்று, அதை ஒட்டிய அறிவு, எவ்வளவுக்கு எவ்வளவு ஒரு சமுதாயத்தில் தெளிவு இருக்கிறதோ, அந்த அளவுக்குக்தான் சமுதாயம் நல்ல முறையில் மகிழ்சியாக, உடல் நலத்தோடும் மனவளத்தோடும் இருக்க முடியும்..

## வேதாத்திரி மகரிசியின் காயகற்பம் என்னும் சஞ்சீவி.

பாலுணர்வை நெறிபடுத்த ஒரே வழி. நம் மனதை எப்போது ஆரோக்கியமாக அத்தகைய சிந்தனைகளில் விழாமல் வைத்திருப்பது தான்.

அதற்கு பெரிதும் உதவுகிறது தியானம். அவரவர் விரும்பிய வகையில் ஏதேனும் ஒரு தியானத்தை கற்றுக்கொண்டு பயிற்சி செய்து வந்தால் மனம் ஒருமைப்படும்.

இன்னொன்றும் இருக்கிறது. அது தான் காயகல்பம் என்றொரு யோகமுறை. காயகல்ப யோகம் என்ற சித்தர் பயிற்சி உயிர்சக்தியை பாதுக்காப்பதில் உறுதுணை புரிகிறது.

பிரமாச்சாரியத்தையும் இல்லறத்தையும் இணைக்கும் பாலம் தான் காய கல்ப பயிற்சி.

நாத விந்து சக்திகளை குண்டலினியின் சக்தியாக மேல் எழுப்பி அந்த நாத விந்து சக்திகளை உடல் முழுவதும் பரப்பி இளமையை காப்பது மட்டும் அல்லாமல், மன கட்டுப்பாட்டையும் கடைப்பிடிக்கும் ஒரு அருமையான வழி இந்த காய கல்பம் .

காயகல்பம் பிரம்மசாரிகளுக்கு மட்டுமல்ல இல்லற ஜோதிகளுக்கும் ஒரு வரப்பிரசாதம். வயக்கரா இல்லாமலே அதன் வேலையை காயகல்பம் செய்யும்.

அதேநேரம் காயகல்பத்தின் இன்னொரு யுக்தி பாலியல் உணர்வை கட்டுப்படுத்தி, வித்துசக்தியை கெட்டிபடுத்தி இளமை நோன்பு காக்கவும் உதவும்.

உடலில் வித்து சக்தி மிகும்போதெல்லாம் இந்த யுக்தியின் மூலம் கெட்டியாக்கி கொண்டே வரமுடியும். இதன் மூலம் வித்தில் நீர்ப்புத் தன்மை குறைந்து தூண்டுதல் சமன்படும்.

காயகல்பம் என்பது மருந்துகடைகளில் கிடைக்கும் மருந்தல்ல அது ஒரு பயிற்சி. எனக்குத் தெரிந்து உலகில் ஒரே ஒரு யோக மையத்தில் மட்டுமே அது பயிற்றுவிக்கப்படுகிறது.

முயற்சி செய்து பாருங்கள். அதுதான் வேதாத்ரி மகரிஷி குண்டலினி யோக ஆராய்ச்சி மற்றும் அறக்கட்டளை.

. இந்தப் பயிற்சியை மூன்று மணி நேரத்தில் ஒருவர் கற்றுக் கொள்ள முடியும்.

மனவளக் கலை மன்றங்களில் உறுப்பினராகி வாழ்க்கைவள விஞ்ஞானம் பயில்வேலார்களுக்கு இந்தப் பயிற்சியும் சேர்த்துக் கொடுக்கப்படுகின்றது.

முறை தவறிய வழிகளில் விந்துவை நாசப்படுத்தி கொண்டு படிப்பில் விருப்பமில்லாமலும் நினைவாற்றல் குறைந்து வாழ்வில்

சோர்வும் ஏமாற்றமும் காண்கின்ற இளைஞர்களுக்கு அவர்கள் வாழ்வைப் புதுப்பித்துக் கொள்ள இது ஓர் உயர்ந்த சாதனைவழி.

ஆண் பெண் இருபாலரும் வயது பதினான்கு பதினைந்துக்கு மேல் காயகற்பப் பயிற்சியைக் கற்றுப் பயனடையலாம்.

திருமணம் வேண்டாம் என்று பொதுநல ஆன்மீகத் தொண்டில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் இந்த அரிய காயகற்பக் கலை நல்லதோர் தோழனாகப் பயன்படும்.

இரண்டு வேவேறான கோப்பாடுகள். அதாவது துறவறமும் இல்லறம் ஒரே செயல் முறையில் இணைக்கும் இந்த இந்திரிய யோகம். மன ஆளுமை அதே சமயம் விந்து நாதத்தை சேமித்து தேவைக்கு மிகுதியானதை உடலுக்கு உயிர்ச் சக்தியாகி உடல் நலத்தையும் மன நலத்தையும் ஒருங்கே பேணும் அற்புத கலை தான் இந்த காய கல்ப பயிற்சி.

ஆனால் நமது மக்கள் இந்த மாதிரியான வாழ்க்கைக்கு தேவையான அற்புத பயிற்சியை தவிர்த்து விட்டு வேறு எதுக்கோ கவனத்தை செலுத்துகின்றனர்.

இயற்கையும், அறிவும் இணைந்துதான் வாழ்வு நடைப்பெறுகிறது. இயற்கையை உணர்ந்து, இயற்கையை மதித்து, இயற்கையின் விளைவறிந்து எண்ணம், சொல், செயல் பயன்படுத்தி நல்ல முறையில் செம்மையாக வாழ்வை நடத்துவதற்கு ஏற்ற பயிற்சி தான் யோகம்.

கண்ணை மூடிக் கொண்டால், அது தியானம் அன்று. மனம் ஒருமைப்பட்டு மனதை மற்ற எண்ணத்தில் இருந்து விடுப்பட்டு ஒரே சிந்தனையில் வைத்திருப்பதுதான் தியானம்,.

சிலர் நினைப்பது போன்று காவி உடை அணிந்தால் மட்டும் அவன் யோகியாகிவிடுவானா? யோகம் தியானமும் ஒரு மனிதனை செம்மை படுத்திவிடுமா?

அவன் மனவளமும் அகத் திறனும் முழுமை பெற்று மனக்கட்டுபாடுக் கொண்டால் அவன் ஒரு சிறந்த யோகி ஆவான். அது அகத்தை ஆய்ந்துணர்ந்தால் தான் உண்டு.

சரித்திரத்தை புரட்டிப்பாருங்கள். துறவிகள் என்று வெளியேறியவர்களில் பெரும்பாலோர் அறிவின் நிறைவு பெற்றுப் பின்னர் துறவு பெற்றார்களில்லை.

அறியாமை, மனகுழப்பம், எழ்மை, வேலையின்மை, நோய்,சோம்பேறித்தனம், பேராசை, வெறுப்பு, குடுப்பச் சண்டை இவற்றால் இல்லம் விட்டுக் கடமை பிறழ்ந்து வெளியேறினார்கள்,.

சூழ்நிலை நிர்பந்தத்தால் தவிர்க்கமுடியாத நிலையில் வெளியேறியவர்களும் உண்டு. அவர்களில் ஏதோ ஒரு சிலர் சந்தர்ப வசதியாலும், நல்லாசிரியரோடு தொடர்பு கொண்டு ஞானப் பேறு பெற்றார்கள். மற்றவர்கள் வாழ்வு பாழாகி துன்புற்று மடிந்தார்கள்.

புத்தபிரானும் இறுதியாக ஒரு நல்ல ஒரு பெண்மணியிடம் தீட்சை வாங்கி உண்டுவிட்டே போதிமரத்தில் சித்தியை பெற்றார். உலகிற்கு புத்தத்தை தந்தார். இல்லை என்றால் பத்திலே ஒன்றாகி கரைந்து போயிருப்பார் புத்தர்.

நாம் எதை எதையோ நினைக்கின்றோம். ஆனால் நினைத்தெல்லாம் நடப்பது இல்லை. ஏனெனில் நம் எண்ணங்களுக்கு வலுவில்லை.

அந்த வலிமையை “தாரனை” என்னு தியானத்தால் வலுப்பெறச்செய்யலாம்.

எண்ணம் வலுப்பெரும் போது, நமது சிந்தனை செயல் உறுதிபடுகிறது. நல்ல எண்ணங்களை நினைக்க தெரியாதவராக நாம் இருந்தால் துன்பமே அன்றி இன்பம் இல்லை.

தியானம் பயிலும் முன் நாம் நல்ல சிந்தனைக் கொண்டவராக இருக்க வேண்டும். ஆசை பற்று கடந்தவையாக நமது மனம் இருக்கவேண்டும். அது தான் மனக் கட்டுப்பாடு.

நல்ல எண்ணங்களாளே நமது வாழ்க்கையும் வடிமைக்கப்டுகிறது. மனக் கட்டுப்பாடின்றி நல்ல யோகியை நடிப்பவர்களின் வேசம் ஒரு நாள் உலகிற்கு தெரிய வரும்.

அது இயற்கையின் நீதி அனைத்து துறந்தவன் யோகியாக இருக்கலாம். ஆனால் இங்கு பலர் உடையயைதான் துறக்கின்றனர். உள்ளத்தை அல்ல.

துறவிக்கு எதற்கு பல கோடி சொத்து? வீடு, நிலம், பரிபாலனம்?

எடுப்பவன் எப்படி யோகியாவன். நாம் வணங்குவதற்கு அவன் எப்படி யோக்கியவன் ஆவான்? இந்த சமுதாயம் பிச்சைக்காரர்களை வளர்கிறது.

மதத்தின் பெயரால் யோகியின் பெயரால் சத உட்க்கார்ந்து உண்ணும் சோம்பேறி மனிதனை உருவாகிக் கொண்டிருக்கிறது.

நமது சமுதாயத்தில் தான் இலவச அண்ணதானம். அதிலே வேறு உண்ட களைப்பு தொண்டனுக்கும் உண்டு என்ற உறங்கும் சித்தாந்த போதனை.

எப்படி உருப்படும் நமது சமுதாயம். ஆனால் மேலை நாடுகளில் No Free lunch .உழைப்பில்லாமல் அங்கு ஊதியம் இல்லை.

ஒரு வேளை உண்பவன் யோகி
இரு வேளை உண்பவன் போகி
மூன்று வேளை உண்பவன் ரோகி

அளவான உறக்கம், அளவான உழைப்பு. அளவான ஒய்வு, இதிலே அளவான உடல் உறவும், அளவான செல்வம் இருந்தால் சிறப்பு. அளவுக்கு மீறிய எதுவும் துன்பம் தர கூடிய ஒன்றுதான்.

அளவுக்கு மீறிய எந்த ஒரு செல்வமும் மற்றவர்களின் உழைப்பை அவர்களுக்கு சேர வேண்டிய பொருளை நாம் சுரண்டுவது போன்ற செயல்தான். இதுவும் ஒரு வகையான சமுதாய துன்பம் தான்.

இதிலே வேடிக்கை என்னவென்றால் எல்லாம் துறந்த சாமியார்களுக்கு பல கோடி சொத்துக்கள் , கை கால்களை அமுத்தி விட பக்தர்கள்.

உணர்சிகளை அடக்க முடியாத இந்த சாமியார்கள் பெண்ணின்பத்தில் உணர்சிவசப்படுகின்றனர்.

இவர்கள் ஆன்மாவை துறந்தவர்கள் அன்று. பேராசைக் கொண்டவர்கள்.

சில சித்திகளை கொண்டு பணம் பறிபவர்கள். வெட்டகம் கெட்டவர்கள். இவர்கள் எல்லாம் யோகியா?

பணம் தேவை இல்லாத ஒருவருக்கு பணம் காசு கொடுக்கும் முட்டாள்கள் நாம். எவ்வளோ நல்ல இயக்கங்கள் வாழ்க்கை நெறியை சொல்லுகிறது.

ஆனால் அது எல்லாம் நமது கண்ணுக்கு தெரிவதில்லை. ஆடம்பரமும் , ஆர்ப்பாட்டம்தன் இவர்கள் தெரிகிறது. பணத்தோடு வாழ்பவர்கள் எல்லாம் யோகி அல்ல, பகுத்தறிவோடு வாழ்க்கையை உணர்த்த முற்படுவோர்தான் யோகி.

ஒரு யோகி என்றால் இந்த மக்களின் மன வளத்தையும் உடல் நலத்தையும் அவன் சார்ந்த குடுப்ப நலத்தையும் பேணும் ஒரு அமைப்பாக இருந்து செயல் படவேண்டும் அந்த யோகி.

இதுதான் வாழ்க்கை என்று தான் உணர்ந்து, இந்த மக்களும் உணரும் நெறிமுறைகளை தந்து, மக்களின் ஆன்ம நெறிகளை வாழ்க்கை நெறிகளோடு இணைத்து வாழ்பவன் தத்துவர்தமான இந்த வாழ்க்கையை உணரகூடியவனாக இருப்பான்.

# 10. சடங்குவெறி கொள்வதன்று சமயம்

சிவவாக்கியம் சைவசமயத்தில் விளந்ததுமட்டுமன்று, அச்சமயத்தின், முக்கியமாக அதனுடைய ஆசாரக்கோட்பாட்டில் உறுதியாக இருக்கின்ற, சடங்கு வினைகளால் செறிவு குன்றிய அமைப்புமுறைகளின் எதிர்க் கிளர்ச்சியாக எழுந்ததுமாகும்.

எல்லாச் சித்தர்களையும்போல சிவவாக்கியரும் ஒரு சுதந்திரச் சிந்தனையாளரும், சமயம், மறைநூல்கள், ஆசாரச் சடங்குகள், முதலானவற்றால் ஈர்க்கப்படாத புரட்சியாளரும் ஆவார்.

சிவவாக்கியரைப் பொறுத்தவரையில் சமயம் என்பது ஒரு விதிகளின் தொகுப்போ, நம்பிக்கைக் கோட்பாடோ அன்று. பரம்பொருளான இறைவனைப்பற்றிய நுண்ணறிவுத்திறமும், ஆழ்ந்த தொடர்புமாகும் அது.

"ஒன்றும் ஒன்றும் ஒன்றலோ உலகனைத்தும் ஒன்றுமே
அன்றுமின்றும் ஒன்றுமே அனாதியானது ஒன்றுமே"

என உலகம் அனைத்தும் ஒன்று என்றும், அன்றும் இன்றும் அனாதியானவன் இறைவன் ஒருவனே என்றும் பறைசாற்றுகிறார் சிவவாக்கியர்.

அதுமட்டுமன்று. எங்கும் நிறைந்த, எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்திருக்கும் சிவபெருமானை உள்ளும் புறமுமாக உணர்வுபூர்வமாக அறிபவனே ஞானியாவான்;

"பாரடங்க வுள்ளதும் பரந்தவானம் உள்ளதும்
ஓரிடமும் இன்றியே ஒன்றி நின்ற ஒண்சுடர்
ஆரிடமும் இன்றியே அகத்துள்ளும் புறத்துள்ளும்
சீரிடங்கள் கண்டவர் சிவன் தெரிந்த ஞானியே"

எனவும் வரையறுத்துக் கூறுகின்றார்.

சிவவாக்கியர் கருத்துப்படி,

"அண்டர்கோனிருப்பிடம் அறிந்துணர்ந்த ஞானிகள்
கண்டகோயில் தெய்வமென்று கையெடுப்பதில்லையே"

அதாவது, ஞானியான ஒருமனிதன் கோயிலிற்சென்று கைகூப்பி வேண்டுதல் செய்து இறைவழிபாடு நடத்துவதில்லை.

எங்கும் நிறைந்த இறைவன் உமக்குள்ளேயே இருக்கும்போது அவ்விறைவனை அந்தர்முகமாக உன்னி வணங்குவீராயின், அச்சுருக்கமற்ற சோதிவடிவினனான இறைவனை அடையலாம். அவ்வாறிருக்க,

நெருப்பைமூட்டி நெய்யைவிட்டு நித்தநித்த நீரிலே
விருப்பமோடு நீர்குளிக்கும் வேதவாக்கியங் கேளுமின்
என்று கூறி,

நெருப்புநீரு மும்முளே நினைத்துகூற வல்லிரேல்
சுருக்கமற்ற சோதியைத் தொடர்ந்துகூட லாகுமே
என்று சரியானமுறையையும் புகட்டுகின்றார்.

ஆனால், அந்தர்முகமாகச் செய்யப்படுகின்ற வெறுமையான தியானமுறைகளும் பலன்தரப் போவதில்லை.

கையில் உருத்திராட்ச மாலையை வைத்து உருட்டிக்கொண்டு, கண்ணையும் சிமிட்டிக்கொண்டிருப்பினும், மனம்போவது எவ்விடம்!

மனதிற்கிடக்கும் பொய், வஞ்சனை முதலானவற்றைத் துடைத்தெறியாமல் மெய்ப்பொருளை மனதின்கண் காணவும் இயலாது என்பதனை,

"கைவடங்கள் கொண்டுநீர் கண்சிமிட்டி நிற்கிறீர்
எவ்விடங்கள் கண்டுநீ ரெண்ணியெண்ணி பார்க்கிறீர்
பொய்யுணர்ந்த சிந்தையை பொருந்திநோக்க வல்லிரேல்
மெய்கடிந்த தும்முளே விரைந்துகூற லாகுமே"

எனச் சுட்டிக்காட்டுகிறார்.

நல்லெண்ணத்துடன் செய்வதாயினும் கூட சிற்சில கிரியைகள் அதைச் செய்பவன் மனதிற்கு 'நானே அதைச்செய்தேன்' என்ற போலியான நிறைவு தருமேயல்லாமல் வேறெந்த பலனையும் கொடா என்பதனை,

"பூசைபூசை யென்றுநீர் பூசைசெய்யும் பேதைகாள்
பூசையுள்ள தன்னிலே பூசைகொண்ட தெவ்விடம்
ஆதிபூசை கொண்டதோ அனாதிபூசை கொண்டதோ
ஏதுபூசை கொண்டதோ வின்னதென் றியம்புமே"

எனச் செய்த பூசையைக் கொண்ட பொருள் யாதென விளக்கித் தருமாறு கேட்கின்றார்.

சமைத்த கறியின் சுவையை அக்கறியைச் சமைத்த சட்டியும், கிளறும் சட்டுவமும் தெரிந்துகொள்ளாது.

பரம்பொருள் மனத்தின்கண்ணேயே இருக்க

சிற்பியினால் உருவாக்கப்பட்ட கற்சிலை நிட்கள,

நின்மல பர-வத்துவான பொருளாகாது

என்பதனை உணர்த்த,

”நட்டகல்லை தெய்வமென்று நாலுபுட்பம் சார்த்தியே
சுற்றிவந்து மொணமொணென்று சொல்லுமந்திர மேதடா?”

என்று கேட்கிறார்.

சடங்குகளும்,சம்பிரதாயங்களும் தமிழர்களின் வாழ்வியல் வட்டத்துக்குள் தவிர்க்கமுடியாதவைகள் என்பது என்னவோ உண்மைதான்.

ஒருபக்கம் கோவில்கள்,தேவாலயங்கள் இவற்றின் உற்சவகாலங்கள்,விரதகாலங்கள்,என்று மக்கள் ஆன்மீகத்துக்குள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டு பூஜைகள் ,,புனஸ்காரங்கள்,நேர்த்திகள்,நிறைவேற்றல்கள் என்று வருடம் முழுவதும் வளைய வருவார்கள்.

இதைவிடுத்து,நல்ல நாள்,பெருநாள் என்று வருடத்தில் பல நாட்கள் வந்தவண்ணமிருக்கும்.குறிப்பாக உழவர் திருநாள்,வருடப்பிறப்பு
தீபாவளி போன்ற பண்டிகைகள் இவற்றில் அடங்கும்.இவைதவிர கொம்புமுறி, தேங்காய் உடைப்பு,தொழிலாளர் தினம் ஆகியவை தமிழர்களின் பாரம்பரிய கொண்டாட்டங்களாக விளங்கும்.
மற்றும் திருமணவைபவங்கள்,பூப்புனித நீராட்டு,என்று பல சடங்குகளும் தமிழர்களின் சம்பிரதாயங்கள் என்ற வட்டத்துக்குள் வருகின்றன.

இவைகள் எல்லாம் தாயகத்தில் காலம் காலமாக இருந்துவருகின்ற, எம்மக்களால் கட்டிக்காக்கப்படுகின்ற,வாழ்வியலோடு பின்னிப்பிணைந்த,பிரிக்கமுடியாத
சடங்குகளும்,சம்பிரதாயங்களும் ஆகும்.

இப்பொழுது எம்மக்களில் லட்சோப லட்சம் மக்கள் தாயகத்தை விட்டு வந்து
உலகம் முழுவதும் பரவி வாழ்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை.

அத்தோடு மேற்கூறப்பட்ட அத்தனை அம்சங்களும் தமிழர்களின் அடையாளங்கள் என்பது உண்மையே.ஆனால் புலம்பெயர்ந்த நாடுகளில்
இவற்றின் அவசியம் என்ன?

இவைகளில் எல்லாம் அனுட்டிக்கப்பட வேண்டுமா? ஒரு அந்நிய தேசத்தில் இயந்திரமயமான வாழ்வியல் முறையில்
மாற்றுக் கலாச்சார சூழலில் இந்த சடங்குகளும்,சம்பிரதாயங்களும் கண்டிப்பாக நடத்தப்பட வேண்டுமா?

புலத்தில் வாழும் எம் மக்களில் பலர் இன்னும் இந்த சடங்கு,சம்பிரதாயம்.
மற்றும் மூடநம்பிக்கைகள் என்று மூழ்கிபோய் இருப்பதை நாம் பார்க்கிறோம்.
ஒவ்வொரு சனி,ஞாயிறு தினங்களிலும் அநேகமானவர்களுக்கு பிறந்தநாள்,
திருமண விழா,அரங்கேற்ற நிகழ்வு,பூப்படைந்த பெண்ணுக்கு ஒரு விழா,
என்று ஏகப்பட்ட வைபவங்கள் இருக்கின்றன.ஒரு அவசரத்திற்கு,அல்லது
ஒரு முக்கியமான விடயத்திற்கு இவர்களை சந்திப்பதென்பது முடியாத காரியம்.சொல்வார்கள்,"இன்று எங்களுக்கு அந்த பார்ட்டி,இந்தப் பார்ட்டி" இருக்கிறதென்று.ஐந்து நாட்களும் இரவுபகலாக உழைத்த இவர்களுக்கு வீட்டில் ஆறஅமர இருந்து மகிழ்ச்சியாக குடும்பத்துடன் இருப்பதற்கும் முடிவதில்லை.காரணம் இந்த "பார்ட்டிகளுக்கு"இவர்கள் கண்டிப்பாக சென்றே
ஆகவேண்டும் என்ற ஒரு நிலை இருக்கிறது.சரி அது போகட்டும்......
இந்தக்காலக் கட்டத்தில் இந்த சடங்குகள்,சம்பிரதாயங்கள் தேவையா?
ஒரு வாழ்வு கல்யாணம் என்பது மிக முக்கியமான நிகழ்வுதான்,அதை யாரும்
மறுக்க முடியாது.எல்லா இனத்தவர்களிடமும் இந்த திருமண வைபவம்
இருக்கிறது.ஆனால் இந்த பெண்பிள்ளைகள் வயசுக்கு வந்துவிட்டார்கள்

என்று,அதை ஒரு சடங்காக,"சாமத்திய வீடு"என்று ஆடம்பரமாக எம்மக்கள்
கொண்டாடுவதை நாம் பார்க்கிறோம்.இது அவசியம்தானா?என்ற கேள்வி
இப்பொழுது எழுகிறது.

இப்போதெல்லாம் ஒன்பது,பத்து வயதிலேயே பெண் பிள்ளைகள் ஆளாகிவிடுவதை அவதானிக்க முடிகிறது.காரணம் இங்குள்ள உணவுகள்
காலநிலை மாற்றங்கள் காரணிகளாக இருக்கலாம்.இவர்களின் உடலில்
ஏற்படும் ஒரு மாற்றமே இந்த "பூப்படைதல்"என்று கொள்ளவேண்டும். வயசு பிள்ளைகளுக்கு அதுபற்றிய செய்தியும்,அறிவும் கொடுக்கப்பட வேண்டியதே.இதெல்லாம் இப்பொழுது இவர்களின் பள்ளிக்கூடங்களிலே
சொல்லித்தரப்படுகின்றது. இந்தப் பிள்ளைகளின் மன நிலை என்ன?இவர்களின் மன உளைச்சல் என்ன?என்பதுபற்றியெல்லாம் பெற்றோர்
பார்ப்பது கிடையாது. பக்கத்து வீட்டுக்காரனுக்கோ,அல்லது பந்தாவுக்காகவோ
தன மகளை ஒரு சோடனைப் பொருளாக்கி பெரும் எடுப்பில் பலருக்கும் காட்டி விடவேண்டுமென்றே விரும்புகிறார்கள்.தங்களின் பிள்ளைகளின்
விருப்பத்தைக்கூட இவர்கள் கேட்பதில்லை என்பதுதான் கொடுமையான
விடயம்.மேற்குலக நாடுகளில் இப்படியான நிகழ்வுகள் இல்லை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி.ஏதோ சாட்டுக்கு இது எங்கள் கடமை,உரிமை, சம்பிரதாயம்,கௌரவ பிரச்சினை,சொந்தங்கள்,உறவுகள் குறை சொல்வார்கள்
என்ற காரணங்களை சொல்லிக்கொண்டே இந்த "சாமத்தியவீடு"என்ற பெயரில் சாமர்த்தியமாக கொடுத்ததை திரும்பவும் பெற்றுக்கொள்வதட்காக
நடத்தப்படும் ஒரு விழா என்றும் பலர் சொல்கிறார்கள்.இது எவ்வளவு உண்மையோ தெரியாது.

அண்மையில் விஜய் தொலைக்காட்சியில் கூட "நீயா நானா"என்ற நிகழ்ச்சியில் இந்த பூப்புனித சடங்கு தேவைதானா என்ற கேள்வியுடன் ஒரு விவாதமே நடந்தது.உங்களில் பலர் அதை பார்த்திருப்பீர்கள்.அதில் கலந்துகொண்ட இளம் பெண்கள் இது முட்டாள் தனமானது,இந்த அறிவியல்
காலத்தில் இது அபத்தமானது.பழைய சம்பிரதாயங்கள் என்று கூறிக்கொண்டு
பெண்களை காட்சிப் பொம்மைகளாகவும்,கல்யாணத்திற்கும்,பிள்ளைப் பெற்றுக்கொள்வதற்கும் எங்கள் பிள்ளை தயாராக இருக்கிறாள் என்று தம்பட்டம் அடிப்பதற்கும் செய்யப்படுகின்ற ஒரு நிகழ்வுதான் இது என்று
காட்டமாக சாடியுள்ளார்கள்.இதில் அனைத்து பெண்களும் தங்களின் எதிர்ப்பை
தெரிவித்தார்கள்.அத்தோடு இந்த சடங்குக்கு பின்பு தாங்கள் படுகின்ற அவஸ்தைகள்,கேலிகள்,கிண்டல்கள்,எல்லாம் தங்களுக்கு மன உளைச்சலை
தருவதாகவும் தங்கள் கருத்துகளை பதிவு செய்தார்கள்.அதற்க்கு எதிரணி
பெண்கள்,இல்லை,இது எங்களின் பாரம்பரியம்,எமது கலாச்சாரம் இதை காலாகாலமாக செய்துவருகிறோம்.இதை மாற்ற முடியாது என்று வாதாடினார்கள்...

ஆக,இது மேற்குலக நாட்டில் வாழும் எம் தமிழ் பிள்ளைகளிடம் மட்டுமல்ல
தமிழ்நாட்டில் இருக்கும் இளம் பெண்களிடமும் இது ஒரு வேண்டப்படாத
சடங்காகவே பார்க்கப்படுகிறது என்பதை நாம் புரிந்து கொள்ளலாம். யயயயய

நமது வள்ளல் பெருமான் சாதி சமயங்களில் நிறைந்து கிடக்கும் சடங்குகளை ஒழித்து அனைவரும் சுத்த சன்மார்க்கத்தை அடைய வேண்டும் என்ற இறைவனின் விருப்பத்தை நிறைவேற்ற நமக்கு பாதை வகுத்து கொடுத்துள்ளார்கள்.

ஆனால் ஒரு சிலர் புதியதாக சன்மார்க்கத்திற்கு சடங்குகளை ஏற்படுத்துகிறார்கள். இது சன்மார்க்கத்திற்கு எதிரானது.

நமது பெருமானார் கண் மூடி பழக்கம் எல்லாம் மண் மூடி போக என்று சடங்குகளை ஒழிக்க வேண்டும் என்று கூறி உள்ளார்கள்.

அப்படிப்பட்ட நமது பெருமானாரின் பாதையான சுத்த சன்மார்க்கத்தில் சடங்குகள் தேவையா ?

வேதாத்திரியத்தில் சடங்குகள் பற்றிய கருத்துக்கள் சிந்திக்கக் கூடியதாக அமைந்துள்ளது.

இறைவன் யார்? இறைவனுக்கு உருவம் உள்ளது என்று நினைத்து நாம் அவனுக்கு, நாம் என்னவெல்லாம் நமக்காக செய்துகொள்கிறோமோ அவையனைத்தையும் அவனுக்கு செய்கிறோம், ரசிக்கிறோம்.

மேலும் இறைவனிடம் நீ எனக்கு இது செய்தால், நான் உனக்கு அது செய்கிறேன் என்று வியாபாரம் செய்கிறோம்.

சற்றே சிந்தித்துப் பார்ப்போம். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, கோடானுகோடி கோள்களையும், உயிர்களையும் படைத்து, அவை அனைத்தையும் இயக்கிக்கொண்டும், காத்துக் கொண்டும் இருப்பவன் இறைவன். அவனுக்கு தேவை என்பது இல்லை.

ஏனெனில் அவனுக்கு உடலும் இல்லை, குடலும் இல்லை. அப்படியெனில் இவ்வளவு நாட்களாக நாம் செய்துகொண்டிருக்கும் பூஜை, ஆராதனை, திருவிழாக்கள் இவையெல்லாம் எப்படி உருவாகி இருக்கும்?

ஒழுக்க நெறி தவறி வாழும் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை திருத்துவதற்கும், சமுதாயத்திற்கு அவர்களால் ஏற்படும் துன்பங்களைத் தவிர்ப்பதற்கும் உண்மையான இறையுணர்வு பெற்றவர்களும், சிந்தனையாளர்களும் உருவாக்கியதே ஆகும்.

இந்த நன்னோக்கத்தைப் பயன்படுத்தி சில வியாபாரிகளாலும்,

சில சுயநலவதிகளாலும் உருவாகாப்பட்டவைகளே இத்தகைய சடங்கு முறைகள்.

இந்தக் காலத்தில்இத்தயை சடங்குமுளைகளை சிவவாக்கியார் போலவே வேதாத்திரியும் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள்.

# 11. சிலை வணக்கம் எந்த வயது வரை?

சமயம் ஒரு சமூக அமைப்பாக மாறும்போது கூடவே அதையொட்டிய நெறிமுறைகளும், வழக்கங்களும் உருவாகத் தொடங்குகின்றன.

ஆனால் அவை மக்களின் சமய உணர்விலுள்ள தூய்மையை நாளடைவில் குறைத்து விடவும் செய்கின்றன. சம்பிரதாயங்களைக் கடைப்பிடிப்பது என்பது தன்னிலை உணர்வதைவிட முக்கியத்துவம்

பெற்றதாகிவிடுகின்றது.

காலம் செல்லச்செல்ல இவையே பெரும் தளைகளாகவும் மாறி விடுகின்றன.

மெய்யறிவை நாடும் மனித சமுதாயம் இந்த இக்கட்டான சூழ்நிலையிலிருந்து விடுபடவேண்டுமென்பதே சிவவாக்கியரின் ஆவல்.

அந்த வகையில் உருவ வழிபாட்டையும், புண்ணியத் தலங்களை நோக்கியுள்ள யாத்திரை, தீர்த்தங்களில் முழுகுதல், தவவேடச்சின்னங்கள் அணிதல் முதலான சடங்குகளையும் அவர் அறவே மறுக்கின்றார்.

இவற்றைக் கடுமையாகக் கேலி செய்கின்ற போக்கு இவருடைய பாடல்களில் மிகுந்திருப்பதைக் காணலாம்.

உருவ வழிபாட்டை தீவிரமாகக் கண்டனம் செய்கிறார் சிவவாக்கியர்.

“செங்கலுங் கருங்கலுஞ் சிவந்தசாதி லிங்கமும்
செம்பிலும் தராவிலும் சிவனிருப்ப னென்கிறீர்”

கல்லிலும், உலோகத்திலும் பொம்மைசெய்து வைத்துகொண்டு அதில் சிவனைத் தேடிப் பொழுதை வீணழிக்கிறீர்களே என்று வருந்துகிறார்.

உடைக்கப் பட்ட கல்லின் ஒருபகுதி வாயிற்படியில் மிதி கல்லாகவும், மற்றொரு பகுதி கருவறையுள் கடவுள் சிலையாகவும் மாறுவதைக் கண்டு சிவவாக்கியர் வியக்கிறார்.

“ஓசையுள்ள கல்லைநீர் உடைத்திரண்டு செய்துமே
வாசலிற் பதித்தகல்லை மழுங்கவேமி திக்கிறீர்
பூசனைக்கு வைத்தகல்லில் பூவும்நீருஞ் சார்த்துறீர்
ஈசனுக் குகந்தகல் எந்தகல்லு சொல்லுமே”

என வினவுகின்றார்.

ஓசையுள்ள கல்லை இரண்டாய் உடைத்து, வாசலில் பதித்த அந்தக் கல்லை மிதித்துக்கொண்டு செல்லுகிறீர்கள்.

அதையே சிற்பமாய், தெய்வ உருவமாய் செய்து, அதன்மீது நீரூற்றி அபிடேகமும் செய்து, மலர்களையும் சாத்திவிட்டு ஏதோ மந்திர உபாசனைகளையும் செய்துகொண்டு அதைச் சுற்றிச் சுற்றி வருகிறீர்கள்.

ஈசனுக்கு உகந்த கல் எது என்று சொல்லலாகுமோ என்ற ஐயமேற்படுத்துகிறார்.

சிவவாக்கியர் சொல்வது போன்று உருவ வழிபாடு நீங்கப் பெற்றால் நம்மால் மனம் ஒன்றி இறை வழிபாடு செய்ய முடியுமா என்பது சந்தேகம்தான்.

ஒரு வேளை தொன்று தொட்டு வந்த பழக்கம் காரணமாக இருக்கலாம் என்றாலும், வெற்றிடத்தையோ, இயற்கை வளங்களையோ தெய்வமாக நினைத்து வழிபடமுடியுமோ?

தத்துவங்களைச் சடங்காக்கி இறைவனைக் கல்லாக்கிவிட்ட மூடர்கள் உயிரோடுயிராகக் கலந்து நிற்கும் இறைவனைக் காண மறுப்பதை எண்ணிச் சிரிக்கின்றார் அவர்.

“சாவதான தத்துவச் சடங்குசெய்யு மூமைகாள்
தேவர்கல்லு மாவரோ சிரிப்பதன்றி யென்செய்வேன்
மூவராலு மறியொணாத முக்கணன் முதற்கொழுந்து
காவலாக வும்முளே கலந்திருப்பன் காணுமே”

என்கிறார்.

மெய்யான இறையனுபூதியை நேரடியாகப் பெறவேண்டுமே யல்லாமல் மற்றொரு உபாதிமூலமாக அதைப்பெற விழைவது மூடத்தனம் என்பதே சிவவாக்கியரின் கருத்து.

சிற்பிகளின் கைவேலைப்பாடான சிலையுருவங்களை உயர்ந்த தெய்வமென்றெண்ணி அவற்றிற்குப் பெயர்களையும் இட்டு அழைக்கின்றீர்கள்.

அனைத்தயும் படைத்த முழுமுதற்க டவுளை உம்முள்ளத்தில் சிந்தனை செய்யுங்கள் எனும் அவரது அறிவுரையை

“பண்ணிவைத்த கல்லையும் பழம்பொருள தென்றுநீர்
எண்ணமுற்று மென்னபே ருரைக்கிறீர்க ளேழைகாள்
பண்ணவும் படைக்கவும் படைத்துவைத் தளிக்கவும்
ஒண்ணுமாகி யுலகளித்த வொன்றைநெஞ்சி லுன்னுமே”

என்ற பாடல் வெளிப்படுத்துகின்றது.

“கட்டையாற்செய் தேவருங் கல்லினாற்செய் தேவரும்
மட்டையாற்செய் தேவரும் மஞ்சளாற்செய் தேவரும்
சட்டையாற்செய் தேவரும் சாணியாற்செய் தேவரும்
வெட்டவெளிய தன்றிமற்ற வேறுதெய்வ மில்லையே”

என்று இறைவன் உருவற்றவன் என்பதனை உறுதியாக மொழிகிறார்.

சிலைவழிபாடு ஒருக்காலும் மெய்யான இறையின்பத்தை யளிக்காது என்றும் சிவவாக்கியர் முடிவாகக் கூறுகிறார்.

“கல்லுவெள்ளி செம்பிரும்பு காய்ந்திடுந் தராக்களில்
வல்லதேவ ரூபபேத மங்கமைத்துப் போற்றிடின்
தொல்லையற் றிடப்பெருஞ் சுகந்தருமோ சொல்லுவீர்
இல்லையில்லை யில்லையில்லை யீசனாணை யில்லையே”

ஆலய வழிபாடு, புனிதநீராடல் முதலானவற்றின் வீணான தன்மை:

சிலை வழிபாட்டைக் கண்டனம் செய்வதோடு, ஆலய வழிபாடு, ஆறுகுளங்களில் புனிதநீராடல், புண்ணியத் தலயாத்திரை

முதலான நடவடிக்கைகளையும் சிவவாக்கியர் மட்டுமீறிய கடுமையுடன் இகழ்கிறார்.

உருவ வழிபாடு பற்றிய வேதாத்திரி மகரிசியின் கோட்பாடு.

மகரிசி உருவவழிபாடு பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகள் இன்றைய வழிபாடு தெடர்பான சிக்கல்களைப் போக்கி அறிவுப்புர்வமான வழிபாட்டிற்கு வழி வகுப்பதை அறியலாம்.

## சிலை வணக்கத்தின் எல்லை - மகரிசி.

”இறைநிலையே அறிவாக இருக்கும் போது,

இவ்வறிவைச் சிலை வடிவத் தெல்லை கட்டி

குறைபோக்கப் பொருள், புகழ், செல்வாக்கு வேண்டிக்

கும்பிட்டுப் பலன்கண்ட வரையில் போதும்.

இறைநிலைக்கு அறிவு விரிந்துண்மை காண

நேர்வழியாம் அகத்தவத்தைக் குருவால் பெற்று,

முறையாகப் பயின்றுன்னில் இறையைத் தேற,

முனைந்திடுவீர். காலம் வீணாக்க வேண்டாம்.”

- ஞானக்களஞ்சியம்.

இச்சையைத்தொழிலாக உடைய ஆன்மாவை அதன் போக்கிலிருந்து திருப்பிவிட வேண்டும். அதற்கு உளப்பியச்சி அவசியம். இப்பணிங்சி அனுபவத்தால் வருகிறது. அதனை

1. ஓர்மை நிலை 2. அடக்க நிலை 3. .ஒடுக்க நிலை

என்னும் மூன்று பிரிவுகளில் அடக்குகிறார் மகரிசி.

அறிவு செம்மையாகி அடங்கி லயமாகும் பயிற்சியே ஆலயம் ஆகும். ஆ - லயம் (ஆலயம்) என்பதில் மனத்தை ஒருமுகப்படுத்தும் பணி நடைபெறுகிறது.

இப்பணிக்கு அடிப்படை ஆலயங்களில் உள்ள விக்கரகங்கள் ஆகும்.

இவற்றை உருவப் படிமங்கள் என்பது பொருந்தும். இந்த உருவங்களை வழிபடுவது எனும் நிலை, அதன் மூலம் மனத்தை ஒருமுகப்படத்தும் நிலை இன்று பரவலாக வளர்ந்து வந்துள்ளது.

இந்த உருவ வழிபாடு வளர்ச்சியே சடங்குகளுக்கு அடிப்படையாகத் திகழ்கின்றது.

விக்கரக வழிபாடு எவ்வாறு வந்தது என்பது பற்றிய அவரது விளக்கம் அறிவார்ந்த நிலையில் அமைந்திருக்கிறது.

மனிதன் அவனுடைய மனத்தை ஒழுங்குபடுத்து வதற்காகவேர் அல்லது உயர்த்திக் கொள்வதற்காகவோ கடவுளைச் சிருஷ்டிக ஆரம்பித்தான்.

இவனுடைய எண்ணம், குணங்கள் இவை எல்லாவ்றறுயம் கடவுள்கு ஏற்றி வைத்தான்.

இவனது தேவைகளைக் கடவுள் தேயையாகக் கருதினான்.

அதனால் உருவங்களைப் படைத அதில் அணிகலன்களை அணிவித்துச் சடங்குகளை இணைத்து வழிபடத் தொதடங்கினர் என்று அறிவுபுர்வமான விளக்கத்தைத் தருகிறார் மகரிசி.

"உடல்நலம் அறிவோடு செல்வம் கீர்த்தி

ஒழுக்கம் வீரம் அழகு காதல் ஞானம்

கடமை உணர்வினைப் பெற்று இனிது வாழ

கற்பனையால் கருத்துயர்ந்த நினைத் முன்னோர்

உடல்நலம் முதலான ஆற்றலெல்லாம்

ஒன்றிணைத்து உருவமைத்து நம்புதற்கு

கடவுள் கதைகள் பலவும கற்பித்தார்கள்

கருத்துயர்ந் தோர்க்கு இச்சடங்கு தேவையில்லை"

ஆலயங்களில்உருவ வழிபாடு இரு வகையுண்டு எனக்கூறும் மகரிசி, அதனை அறிவியல் கண்கொண்டு ஆராய்ந்து விளக்குகிறார்.

பஞ்சலோகங்களினால் ஆன தகடுகளில் அட்சரங்களை எழுதித் தன் விருப்பத்தை மந்திரங்காக எழுதி உருவேற்றிச் சிலைகளுக்கு அடியில் புதைத்துச் சுற்றி வந்து வணங்குகிறார்கள்.

இவ்வாறு தினமும் சற்றிவந்து வணங்கும் பொழுது ஓர் ஆற்றல் களம்உருவாகிறது.

இந்த ஆற்றல் களம் நீண்ட காலம் சுழன்று கொண்டிருக்கும். இந்த ஆற்றல் களத்தில் இன்னொரு சக்தி நுழைவது சிரமம்.

இவ்வாறு நுழையும் சக்தி ஒன்றுபட்டதாகவோ அல்லது நுண்ணியதாகவே இருக்க வேண்டும். (The introducing force should be of like vibration or it should be subtler)

கோயிலில் ஒருவன் எந்த இடத்தில் சுற்றி வந்தாலும் அங்கே இருக்கக் கூடிய Vibrationனானது ஒருவன் பலவீனயிருக்கிறான் என்றால் அவனுக்கு சக்தி அளிக்கிறது என்றும், ஒருவனுக்குச் சக்தி அதிகமாக இருக்கிறது எனில் அதிலேயிருந்து அவன் தன் சக்தியைத் தருகிறான் என்று பொருள்.

இவ்வாறு பெறுவது தருவது என்ற போது எல்லாக் கோயில்களும், ஓர் ஆற்றல் களம்தான் என்று சொல்ல வேண்டும். (Every temple becomes an energy bank)

ஒவ்வொரு ஆலயமும் முறையாக நிர்வகிக்கப்பட்டால் ஓர் ஆற்றல் களமாகவே அமையும் என்னும் மகரிசியின் கருத்து, ஆலயங்களில் உருவ வழிபாட்டை எடுத்தியம்புவதாக அமைகிறது.

சிலை வணக்கம்எந்த வயது வரை?

1. உருவமைப்பு, 2. குணம். 3. அறிவின் உயர்வு, 4. கீர்த்தி, 5. உடல்வலிவு, 6. சுகம், 7. செல்வம். இவைகளைச் சிறப்பான முறையில் மனிதன் வேண்டுகிறான்.

இந்த ஏழுவிதமான எடுத்துக் காட்டுகளைத் தெரிவிக்கின்ற வகையில் சிற்பிகளின் திறமைகளைப் பயன்படுத்திப் பலவித சிலைகைளை முன்னோர்கள் செய்தார்கள்.

அந்த உருவங்களை மனதில் வைத்து தியானம் செய்தால், அந்தந்த தன்மையாக ஞாபகம் வலுப்பெறும்.

அதனால் வாழக்கை நலமுறும் என்றே அவ்வாறு ஏற்படுத்தினார்கள்.

நாளாவட்டத்தில் இந்த நோக்கம் மாறி விட்டது. தேங்காய் பழம் வைத்துச் சிலைகளைக் கும்பிடுவதோடு அது நின்று விட்டது.

அதே முறைதான் பத்தர் சிலைக்கும் கையாளப்படுகின்ற நிலை ஏற்பட்டுள்ளது.

அறிவு மிக வேகமாக முன்னேறி வருகின்ற இந்தக் காலத்தில் பதினாறு வயதுக்கு மேல் சிலை வணக்கம் செய்வதை நிறுத்திவிடச் செய்ய வேண்டும்.

அவ்வயதுக்குப் பின் மெளனமாக உட்கார்ந்திருப்பது, பின்னர் அறிவைப் பற்றி சிந்திப்பது ,

தினம் தினம் தனது குணங்களை, அவற்றின் இயக்கங்களைச் சோதனை செய்வது,

அறிஞர்களின் போதனைகள், அவைகளின உட்கருத்துகள் இவற்றை ஆராய்ந்து தெளிவாக விளங்கிக் கொள்வது,

இவைகளில் தினம் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சிறிது காலத்தையாவது பதினாறு வயதுக்கு மேற்பட்டவர்கள் செலவிடலாம். இதையே தியான முறையாகக் கொள்ளலாம்.

அந்த வயதுக்கு மேல் மெய்யுணர்வு தீட்சையைப் பெற்று, கருதவம் புரிந்து வரலாம்.

இந்த வழக்கம் இந்திய நாட்டில் முற்காலத்தில் பரவலாக இருந்திருப்பதாகத் தெரிகிறது.

உபநயனம், அதாவது நெற்றிக்கண் திறப்பு என்ற சடங்கு, மெய்யுணர்வு தவம் அறிவிக்கும் சடங்கேயாகும்.

இக்காலத்தில் அச்சடங்கு ஒரு புணூலைப் போட்டுக் கொள்ளவும், சில மந்திரங்களை ஜெபிக்கக் கற்றுக் கொள்ளவும் பயன்படுத்தபடுகின்ற ஒரு சடங்காகிவிட்டது.

மகரிசியின் அறிவுத்திருக்கோயில்களில் விக்கரக வழிபாடு இல்லை. சிறுவயதில் மகரிசி கொண்ட பக்தியைப் பற்றி,

”கடவுள்தான் அனைத்தையும் படைத்தான் என்றேன்

கண்காது மூக்குவைத்துக் கதைகள் சொன்னேன்.

கடவுள்என்று கற்சிலையை அறையில் வைத்துக்

கதவு அடைத்துப் புட்டியும் வைத்தேன். பின்அந்தக்

கடவுளுக்குப் பசிதீர்க்க பால், நெய், தேங்காய்.

கனிவகைகள் கற்சிலைமுன் படைத்தேன் ஆனால்

கடவுள்நிலை அறிந்தபோதென் செய்கை எல்லாம்

கண்டு விட்டேன் சிறுபிள்ளை வியைாட்டாக.”

சிலை வணக்கத்தில் மனிதன் பொருள், புகழ், செல்வாக்கு, புலன் இன்பம் என்ற நான்கிளையும் முன்வைத்துதான் வணங்கி வருகிறான்.

இந்த நான்கு தேவைகளில் மனிதனின் மனம் நிறைவு பெறாது.

இன்னும் வேண்டும் இன்னும் வேண்டும் என்ற எண்ணம் பேராசையாகி துன்பத்தில் ஆழ்த்திவிடும்.

புலன் இன்பத்திற்காக அவதார தெய்வத்தை வணங்குவதற்கு மூலமாக உருவ தெய்வத்தின் மீது மனதை ஒருமகப்படுத்தி மனதுக்கு முறையான பயற்சியளித்தால் கூட நாளாவட்டத்தில் அரூப தெய்வத்தை உணர்ந்து ஞானம் பெறலாம்.

ஆனால் அதற்கு மிகுந்த சிரமங்களும். காலதாமதமும் ஏற்படும்.

ஆனால் சிலைவடிவத்தில் சொல்லப்பட்ட தெய்வ தத்துவத்தை விளங்கிக் கொண்டு அதை உணர்வதற்கான ஆத்ம தியானம் குரு மூலம் கிடைத்துவிட்டால் எளிதாக ஞானம் பெற்று சிலை வணக்கம் இல்லாமலேயே தான் அடைய வேண்டிய வளங்களை எண்ணத்தின் மூலம் அடைந்து நல்லதைச்செய்து வளமுடன் வாழலாம்.

எல்லோரும் எளிதாக ஆத்ம தவம் செய்து வாழ்வாங்கு வாழ உதவியவர் ஞான குருதான் தத்துவஞானி வேதாத்திரி மகரிசி.



அவர்கள் வடிவமைத்த எளியமுறை குண்டலினி தவத்தை 14 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் பயின்று வளமுடன் வாழ்வதற்குரிய பயிற்சிக் கூடமான அறிவுத்திருக்கோயிலில் சிலைவணக்கம் இல்லை. இறைவணக்கம உண்டு.

# 12. ஒன்றே தெய்வம்

தமிழ்ச்சித்தர்கள் கடைப்பிடித்த மெய்யுணர்வு நெறிமுறையில் தனிப்பட்ட தெய்வங்களுக்கு இடமில்லை.

இறைவனைப்பற்றிய ஆத்திகக் கோட்பாடு தவறான இரண்டு கருத்துக்களை உருவாக்கியுள்ளது. தனிப்பட்ட தெய்வம் என்ற கருத்து ஒன்று;

படைத்தவனான இறைவன் படைப்புக்களிலிருந்து நிரந்தரமாக வேறுபட்டிருப்பவன் என்பது மற்றொன்று.

சிவவாக்கியரின் பார்வையில் எனக்கென்றொரு தனிக்கடவுள், உனக்கென்றொரு தனிக்கடவுள் என்று இருக்கமுடியாது. ஏனெனில் அதனால் இரண்டு கடவுளர் உருவாவர்.

“எங்கள்தேவ ருங்கள்தேவ ரென்றிரண்டு தேவரோ
அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றலோ
அங்குமிங்கு மாகிநின்ற வாதிமூர்த்தி யொன்றெனில்
வங்கவாரஞ் சொன்னபேர்கள் வாய்புழுத்து மாள்வரே.”

என இடித்துரைக்கின்றார் சிவவாக்கியர்.

இரண்டற விளங்கும் இறைவனை விஷ்ணு எனவும் சிவன் எனவும் பாகுபடுத்தி வணங்குவது மடமை.

பொன்னாற் செய்யப்படுகின்ற நகைகள் பல வடிவம் கொண்டவையாயிருப்பினும் ஆதாரமாயிருப்பது பொன் ஒன்றே.

”தங்கமொன்று ரூபம்வேறு தன்மையான வாறுபோல்
செங்கண்மாலு மீசனுஞ் சிறந்திருந்த தெம்முளே”

மற்றும்,

”எங்கள்தெய்வ முங்கள்தெய்வ மென்றிரண்டு பேதமோ
உங்கள்பேத மன்றியே வுண்மைரெண்டு மில்லையே”

என்று, கடவுளைப் கூறுபோட்டுக்கொள்வது மனிதர்களிடமுள்ள பேதமையாலும், பேதவுணர்வாலுமே என்பதனையும் வலியுறுத்துகிறார்.

”அரியுமாகி யயனுமாகி அண்டமெங்கு மொன்றதாய்
பெரியதாகி யுலகுதன்னில் நின்றபாத மொன்றலோ
விரிவதென்று வேறுசெய்து வேடமிட்ட மூடரே
அறிவினோடு பாருமிங்கு மங்குமெங்கு மொன்றதே”

எனவும் கூறி, ஒன்றே இறைவன் எனும் உண்மையை வலியுறுத்துகின்றார்.

த்வைதம், அத்வைதம், விசிஷ்டாத்வைதம்-மகரிசி

நீங்கள் வெளியூருக்கு செல்கிறீர்கள்; அங்கு பகல் உணவு கிடைக்காது என்பதால் உணவுப் பெட்டியில் (Tiffin Box) உணவை எடுத்து செல்கிறீர்கள். இப்போது, நீங்கள் வேறு, உணவு வேறு.

பிறகு பகல், ஒரு மணி அளவில் அந்த உணவை உண்ணுகிறீர்கள். இப்போது அந்த உணவு பெட்டியில் இல்லை; உங்களுக்குள் சென்று விட்டது.

இவ்வளவு நேரம் அந்த உணவும் நீங்களும் தனித்தனியே இருந்தாலும் இப்போது ஒன்றாகி விட்டீர்கள்.

இப்போது உங்களை நினைத்துப் பாருங்கள். நீங்கள் யார்? இதுவரையில் நீங்கள் எடுத்துக் கொண்டுள்ள மொத்த உணவின் சாரம் (Essence) தானே?

அணு நிலையில் உடலும் ஒன்றே. சிவம் என்ற இருப்பு நிலையிலிருந்து சக்தியெனும் விண் மலர்ந்தது. சில விண் துகள்கள் உடலாயின.

சில விண் துகள்கள் உணவாயின. இதனால் உடலும், உணவும் தோன்றிய மூலப்பொருள் அணுவே. இங்கு அத்வைதம் துவைதமாயிற்று.

. 1 மணிக்கு, நீங்கள் வேறு அந்த உணவு வேறு. 5 மணிக்கு நீங்களும் அந்த உணவும் இரண்டறக் கலந்து ஒன்றாகி விட்டீர்கள். 1 மணியிலிருந்து 5 மணி வரை நடைபெற்ற வேலைக்கிரமம் (Process) இருக்கிறதே அதுதான் விசிஷ்டாத்வைதம்.

மனிதன் அத்வைதம் என்பதையும், த்வைதம் என்பதையும் உணர்ந்து கொள்கிறான்.

த்வைதம் என்ற நிலையிலிருந்து, உண்மையைப் புரிந்து கொண்டு, இயற்கையின் ஒழுங்காற்றலைப் புரிந்து கொண்டு, தன்னை உயர்த்திக் கொண்டு அத்வைதம் என்ற நிலைக்குச் சென்றடைகிறான்.

இந்தச் செயல் ஒழுங்கு (Process) தான் விசிஷ்டாத்வைதம். அதற்குத் தனித் தன்மையுள்ள அத்வைதம் (Special advaitha) என்பதும் பொருந்தும்.

இவ்வாறான உண்மைகளைத் தெளிவாக உணர்ந்து கொள்ளாமல், "த்வைதம் ஒன்றுதான் கடவுளை அடைய வழி" என்றும் "அத்வைதம் ஒன்றுதான் கடவுளை அடைய வழி" என்றும் சண்டையிட்டுக் கொண்டு மக்களில் பலர் தங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திக் கொள்கிறார்கள்.

ஒவ்வொரு பொருளுக்கும், நிகழ்ச்சிக்கும் மூன்று அடிப்படைக் கொள்கைகள் (Principles) உண்டு. "எல்லாம் ஒன்று" என்பது அத்வைதம்.

"ஒவ்வொன்றும் அதனதன் தனித்தன்மைக்கும் குணாதிசயங்களுக்கும் ஏற்ப ஒன்றுக்கொன்று "மாறுபடுகிறது" என்பதை த்வைதம்.

"எல்லாமே பகுத்துக் கொண்டே வரப்படும்பொழுது (While disintegrating) அணுவாகிப் பின்னர் பரமாகிறது என்பது விசிஷ்டாத்வைதம்.

சிவவாக்கியர் சொன்னதுபோல் கடவுள் ஒருவரே என்பதை பல மகான்களும் விளக்கியுள்ளனர்.

"அவனின் இயக்கம் அணுவாற்றல்,

அணுவின் கூட்டுப் பக்குவம் நீ"

என்ற வரிகள் மூலமகவும்,

பழுத்த நிலை வரும் வரையில்நீ. நான் என்பபோம்

பதமடைந்தோம் ஒன்றானோம் பரமானந்தம்"

என்ற வரிகள் மூலமாகவம் அணுமுதல் அனைத்தும் வெளியின் இயக்க நிலைகளே என்று அனைத்தையும் ஒன்றாகக் காணுகின்ற அத்வைதக் காட்சியைத் தருகிறது வேதாத்திரியம்.

வேதாத்திரி மகரிசியின் மெய்ஞ்ஞான பார்வை அத்வைதப் பார்யைிலமைந்துள்ளது என்பதற்கு அவருமைடய கவிதைகள் அடிப்படையாக அமைந்துள்ளன.

அத்வைதக் கோட்பாட்டை மிக எளிமையாகக் கற்கண்டும் கரும்புரசமும் என்ற எடுத்துக் காட்டால் விளக்குகிறார்.
''கற்கண்டு என்ற ஒரு வார்த்தை சொன்னால்

கரும்ப ரசப்பக்குவத்தின் சரித்திரமாகும்.

கற்கண்டைக் கரும்புரசம் என்றால் அஃது

கருத்துக்கு அத்துவிதத் தத்துவம் போல”

என்பது அவருடைய விளக்கும். கரும்பு ரசமும் கற்கண்டும் இரண்டாகத் தோன்றுகின்ற ஒன்றல்லவா?

அனைத்தும் ஒரு மூலத்திலிருந்து வந்ததே- வேதாத்திரி மகரிசி

பிரபஞ்சத்தில் காணும் எப்பொருளும் அணுக்களின் கூட்டமே, சக்தி என்றாலும் வேகம் என்றாலும் ஒன்றே. வேகம் என்பது பிறக்குமிடம் அணுவேயாகும்.

அணுவில் ஒரு வேகம் இருக்கிறதென்றால் அது ஒரு குறை நிலையாக இருந்து, நிறைவான ஒன்றை நாடி எழுகிறது என்பதுதான் பொருள்.

குறை என்பது நிறைவான ஒன்றை ஆதாரமாகக் கொண்டு இருக்கும் மாறுபட்ட நிலை.

ஆகவே, அணு என்ற ஒரு குறை நிலைக்கு மூலமும் முடிவுமாக இருப்பது ஒரே பூரணப் பொருள் தான் என்று விளங்குகிறது.

அணுவைக் கடந்து ஒரு பொருளோ, அணு நிலையைக் கடந்து ஒரு தனி நிலையோ உண்டு எனில், அது வெட்ட வெளியைத் தவிர வேறொன்றுமில்லை.

ஆகவே, வெட்டவெளி என்ற தத்துவமே அனைத்திற்கும், ஆதாரமாகவும், மூல சக்தியாகவும் உள்ள சர்வ வல்லமையும் உடைய ஒரு உறுதிப் பொருள் என்றும், அதுவே ஆதியாகவும், அனாதியாகவும் உள்ள பூரணப் பொருள் எனவும் திடமாகக் கூறுகிறேன்.




இயற்கையின் ஆதி நிலை என்றும், சிவம் என்றும், தெய்வம் என்றும் பேசப்படுகிறதும் இதுவே.

ஒரு மனிதனால் விந்து நாதத் தொடர்பை பின்நோக்கி ஆராய்ந்து கொண்டே போனால் அது பல்லாயிரம் ஜீவராசிகளைக் கடந்து கடைசியாக அணுவிலே தான் போய் முடிவுபெறும்.

அணுவின் மூலமோ, மேலே விளக்கிய வெட்டவெளி தான் என்றும் தெரிந்து விடும்.

அங்கிருந்து முன் நோக்கிப் பார்த்தால் பிரபஞ்சமாக விரிந்துள்ள அனைத்துமே ஒரே மூலத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்கிக் கொண்டிருக்கும் உண்மை அறிவுக்கு அகக்காட்சியாகும்.



# 13. சாதியாவது ஏதடா?

கடவுட்பாகுபாடுகளை எதிர்ப்பதுபோலவே சாதிப்பிரிவினைகளையும் கடுமையாக எதிர்க்கிறார் சிவவாக்கியர்.

அவரது காலத்தில் சாதிபேதம் பாராட்டுவது மிக மோசமன நிலையில் இருந்திருக்க வேண்டும்.

மேற்குடியினர் கீழ்க்குடியினரை மிகக் கேவலமாக நடத்தியிருக்க வேண்டும்.

சாதிகளின் பேரால் நிகழும் இக்கொடுமைகளைக் கண்டு சிவவாக்கியர் குமுறுகிறார். அவரது வெகுளி இப்பாடலில் பெருக்கெடுத்து எழுகிறது.

“பறைச்சியாவ தேதடா பணத்தியாவ தேதடா
இறைச்சிதோ லெலும்பினும் இலக்கமிட் டிருக்குதோ”



சாதிப்பிரிவையொட்டி மனிதர்களின் மாமிசம், தோல், எலும்பு ஆகியவற்றில் வேறுபடுத்திக்காட்ட இலக்கங்கள், அடையாளங்கள் இடப்பட்டிருக்கின்றனவா என்று சிவவாக்கியர் குமுறுகின்றார்.

சாதியென்பது என்ன என்ற கேள்வியை எழுப்பி அதனுடைய குறிக்கோளின்மையை -

“சாதியாவ தேதடா சலந்திரண்ட நீரெலாம்
பூதவாச லொன்றலோ பூதமைந்து மொன்றலோ
காதில்வாளி காரைகம்பி பாடகம்பொ னொன்றலோ
சாதிபேத மோதுகின்ற தன்மையென்ன தன்மையே”

என்று எடுத்துக் காட்டுகின்றார்.

ஆண், பெண் என்பது தானே சாதி, இதில் பல சாதிகள் ஏதப்பா? இவ்வுலகம் முழுமையும் நீர்தான் நிரம்பியுள்ளது.

அதுபோலவே உயிரும் நீராகத்தான் உள்ளது. உடம்பில் பத்தாம் வாசலாகவும், பஞ்சபூதமாகவும், பஞ்சாட்சரமாகவ்வும் உள்ள பொருள் ஒன்றே.

அது நகைகளில் காதில் அணியும் தோடாகவும், மூக்கில் அணியும் மூக்குத்தியாகவும், கைகளில் அணியும் வளையல் போன்ற பல வகையாகவும் இருப்பது தங்கம் ஒன்றே.

இதை அறியாமல் எல்லா உயிர்களும் இறைவனிடம் இருந்து வந்ததை உணராமல் சாதி, பேதம் பேசுகின்ற உங்களின் தன்மைகளை என்னவென்று கூறுவேன்!!!!

அதாவது, மனிதர்கள் எச்சாதியைச் சார்ந்தவராயினும் பஞ்சபூதச் சேர்க்கையாலான உடலையே அனைவரும் கொண்டுள்ளனர்.

பொன்னாலான அணிகலன்கள் அவற்றை அணிபவரின் சாதியையொட்டி மதிப்பை இழப்பதில்லை என்பதே.

பிறப்பினால் ஒருவன் கீழ்ச்சாதியில் தள்ளப்படும் கொடுமையை வன்மையாகக் கண்டிக்கிறார் சிவவாக்கியர்.

“பிறந்தபோது கோவணம் இலங்குநூல் குடுமியும்
பிறந்துடன் பிறந்ததோ பிறங்குநாட் சடங்கெலாம்.”



அதாவது, தாயின் வயிற்றினின்றும் பிறந்த காலத்திலேயே கோவணம், பூணூல், குடுமி இவைகளும், அந்தந்த நாட்களில் செய்யப்படும் சடங்குகளும் கூடவே பிறந்தனவோ என்று பரிகாசமாகக் கேட்கிறார்.

வேதியர் போன்ற உயர்குடிகளிற் கடைப்பிடிக்கும் உடல்சார்ந்த எச்சில், தீட்டு முதலானவற்றைத் ஆசாரத்தூய்மை

கெட்டவையாக மதிக்கும் வழக்கத்தையும் சிவவாக்கியர் கண்டிக்கின்றார்.

வாயினாற் குடித்தநீர் எச்சிலாகுமெனின் எச்சிலல்லாத வத்து யாதொன்று என்பது அவருடைய கேள்வி.

"ஓதுகின்ற வேதமெச்சி லுள்ளமந்திரங்க ளெச்சில்
போதகங்க ளானதெச்சில் பூதலங்க ளேழுமெச்சில்
மாதிருந்த விந்துவெச்சில் மதியுமெச்சி லொலியுமெச்சில்
ஏதிலெச்சி லில்லதில்லை யில்லையில்லை யில்லையே"

என்கிறார். உணவுஉண்ட கலத்தை எச்சிலென்று கூறி தூக்கியெறிகின்றீர்கள்;

அப்போது அதிலிருந்து எடுத்து உண்ட உமது கைகள் எச்சிலல்லவோ? அந்தக் கை மட்டும் கடவுளுக்கு ஏற்றுக்கொள்ளத் தக்கதோ?

அக்கையில் தண்ணீர் படும்போது மட்டும் அந்த அசுத்தம் எப்படி மறைகிறது? என்பதும் அவருடைய ஐயவினா.

"உண்டகல்லை யெச்சிலென் றுள்ளெறிந்து போடுறீர்
கண்டவெச்சில் கையலோ பரமனுக்கு மேறுமோ
கண்டவெச்சில் கேளடா கலந்தபாணி யப்பிலே
கொண்டசுத்த மேதடா குறிப்பிலாத மூடரே "

என்று கேட்கின்றார்.

வேதியர்கள் ஆன நீவிர் இறைவனையுணர்ந்தவர்களாயின் அனைத்தும் அவனல்லாது எச்சிலென்று என்னவுள்ளது?

"வாயிலெச்சில் போகவே நீர்குடித்துத் துப்புவீர்
வாயிருக்க எச்சில்போன வாறதென்ன தெவ்விடம்
வாயிலெச்சி லல்லவோ நீருரைத்த மந்திரம்
நாதனை யறிந்தபோது நாடுமெச்சி லேதுசொல்"

என்று வினா எழுப்புகிறார்.

அதுமட்டுமன்று, தூய்மையாக்கி வைத்திருக்கின்ற நுமது உடல் எச்சிலாகும். அபிடேகமாக நீங்கள் வைத்திருக்கின்ற தேன் என்பது தேனீயின் எச்சிலாகும்.

அர்ச்சனை செய்யும் பூக்கள் வண்டுகளின் எச்சிலாகும். பசுவின் மடியில் கைவைத்துக் கறந்த பாலும் எச்சிலாகும்.

பின்பு எதை நீங்கள் எச்சில், எச்சில் என்று பழிகின்றீர்கள் எனச் சிவவாக்கியர் கேட்டிருப்பது சிந்திக்கத் தக்கது.

"எச்சிலெச்சி லென்றுநீ ரிடைந்திருக்கு மேழைகாள்
துச்சிலெச்சி லல்லவோ தூயகாய மானதும்
வைத்தவெச்சில் தேனலோ வண்டினெச்சில் பூவலோ
கைச்சுதாவில் வைத்துடன் கறந்தபாலு மெச்சிலே"

சமுதாயத்தில் நிலவிய சாதி சமய வேற்றுமையினை தமிழ்ச் சித்தர்கள் சாடினார்கள்.

"சாதி பேதமில்லை அகப்பேய் தனாகி நின்றவர்க்கே"

என அகப்பேய் சித்தரும்,

"ஒன்றே குலம் ஒருவனே தேவன்

நன்றே நினைமின் நமன் இல்லை நாளுமே

சென்ற புகுங்கதி வேறில்லை நும்சித்தத்து

நின்றே நிலைபெற நீ நினைந்துய்யுமே"

எனத் திருமூலரும்,

"சாதியிலே மதங்களிலே சமய நெறிகளிலே

சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே

ஆதியிலே அபிமானித் தலைகின்றீர்”

என்று வள்ளலாரும்,

”கருவான நாத விந்தில் ஜாதியேது?

கற்பனையால் நாம்மிரண்டு பேசுகின்றோம்

வருநாளில் கல்வியொடு பொருளாதாரம்

வளர்ச்சி பெற்றால் ஜாதியெலாம்ஒழிந்திடாவோ?“

என்று வேதாத்திரி மகரிசியும் சாதியைச் சாடுகின்றனர்.

ரிக் வேதம், மனு தர்மம், பகவத்கீதை ஆகியவை சாதி இறைவனால் ஏற்படுத்தப்பட்ட அமைப்பு என்றே கூறுகின்றன.

பகவத்கீதை குணத்தின் அடிப்படையில் சாதி அமைகின்றது என குறிப்பிட்டாலும், பிற பிறப்பின் அடிப்படையிலேயே சாதி அமைகின்றது என்பதை வலியுறுத்துகின்றன.



சமுதாய அமைப்பே சாதியை உருவாக்கியது என்றும் மதத்திற்கு சாதிக்கும் தொடர்பில்லை என்றும் சுவாமி விவேகானந்தர் குறிப்பிடுகின்றார்.

## தொழிற் கோட்பாடு

சாதி மக்கள் குழுக்கள் செய்யும் தொழில் அடிப்படையில் அமைந்தன என்பதுவே தொழிற் கோட்பாடு. தொழில்களின் தன்மை காரணமாக 'தூய்மை' 'தீட்டு' வரையறை செய்யப்பட்டன.

பிறப்பு ரீதியிலான தமிழ் சமூக அமைப்பை மறுக்கும் பலர், தொழில் ரீதியிலான தமிழ் சமூக அமைப்பு இயல்பான என்றும் கருத்தாக்கம் செய்துள்ளார்கள்.

## சாதி ஒழிய சரியான வழி - வேதாத்திரி மகரிசி.

சாதிகளை ஒழித்துவிட வேண்டுமென்று நாம் விரும்பகின்றோம்.

சாதி எப்படி ஏற்பட்டது? அனால் விளைகின்ற நன்மை தீமை யாவை? என ஆராய்நதறிந்த பிறகே அதை எப்படி ஒழிக்க வேண்டும் என்று வழிகாண முடியும்.

முன்னாளில் ஒவ்வொரு தொழிலின் பேரைக் கொண்டு அத்தொழில் புரிகின்ற மக்களை அழைத்து வந்த பழக்கம் ஏற்பட்டது.

தொழில்கள் பரம்பரையாகப் பின்பற்றிச் செய்யப்பட்டும் வந்தன. தேச வெப்ப தட்ப நிலைக்கேற்றவாறும், தொழில்களுக்கேற்றவாறும், மக்களிடம் -

1. செயல்திறமை,
2. மனோநிலை,
3. அறிவின் வளர்ச்சி,
4. பொருளாதாரம்,
5. உணவுமுறை,
6. ஒழுக்க பழக்கங்கள்

என்ற ஆறு வகையும் இணைந்த பண்பாடு உருவாயிற்று.

உலகம் முழுவதும் ஆங்காங்கு இப்பண்பாடுகள் பாரம்பரியமாகத் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன.

இந்த விதமான பண்பாடுகளில் இன்று மனித வர்கத்தின் வாழ்வில பெருநலம் விளைவிக்கின்ற பண்பாடுகளும் உண்டு.

மேலும் திருத்தி உயர்ந்த வேண்டிய பண்பாடுகளும் இருக்கின்றன.

இயந்திர விஞ்ஞான சாதனங்கள் பெருகியுள்ள இக்காலத்தில், எந்தத் தொழிலையும் எவரும் செய்யலாம் என்று ஒரு பொதுவான் முறை உருவாகிவிட்டது.

ஆகவே தொழிலின் பெயரால் அழத்த வந்த சாதிகள் ஒழிந்தே போயின்.

ஆனால், பழக்க வழக்கம் பண்பாடு கலாச்சாரம் என்ற முறைகளால்தான் சாதிகள் நிலைத்தும் நீடித்தும் வருகின்றன.

உயர்ந்த பண்பாடுகள் மனித வர்க்கத்திற்குப் பொதுவாகத் தேயைாவதால், அவை காப்பாற்றப்பட வெண்டும்.

மற்றவைகளைத் திருத்தி உயர்த்த வேண்டும். அதன் மூலமே இன்று நிலவி வருகின்ற சாதி பேதங்கள் மறைய முடியும்.

உணர்ச்சி. உள்ளம் என்ற இருவகையுமே பண்பாடுகிளல் இணைந்து பழக்கத்தால் பலம் பெற்றிருப்பதால், இவற்றை உடனயே பலாத்கார முறையிலே ஒழித்துவிட முடியாது.

அப்படி ஒழிக்க முயல்வதும் தவறேயாகும். நமது செல்வத்தை நாமே பாழாக்கி விடுவது போலாகும்.

சுகாதாரம், பொருளாதரம், மனோதத்துவம் என்ற மூன்றையும் இணைத்து, தனிமனிதன் வாழ்விலும் சமுதாய வாழ்விலும் நலமளிக்கின்ற ஓர் உயர்ந்த உலகப் பொதுவான பண்பாட்டை கல்வி முறையாக உருவாக்கி, குழந்தைப் பருவத்திலேயே அது எளிதாகப் பழக்கத்தில் வந்துவிடச் செய்ய வேண்டும்.

உணவு, உடை, ஞாபகப் பயிற்சி, ஒழக்க பழக்கங்கள் இவற்றிலே குழந்தைகள் ஒன்றுபட்டு வளர்ந்தால், ஒரு சில

ஆண்டுகளுக்குப் பின்னர் சாதி என்ற வார்த்தை வழக்கற்றே போய்விடும்.

அறிஞர் பெருமக்களே விஞ்ஞான சுகாதார மனோத்ததுவ நிபுணர்களே! அரசியல்வாதிகளே! உங்களுக்கே இத்துறையில் அதிக பொறுப்பு உண்டு என்பதை இதன் மூலம் எடுத்துக் காட்டுகிறேன்.

# 14. செத்தபின் முக்தியா?

அளவு கடந்த அன்பின் வெளிப்பாட்டில் ஆழமான அமைதியுடன் ஆரவாரமற்று வாழ்கிற வாழக்கையின் மறுபெயர் முக்தி.

மனிதர்கள் மனதில் நிழலாடும் முக்தி.

மனிதர்களாகப் பிறந்தவர்களின் ஆசை, முக்தி பெற வேண்டும் என்பதுதான்; ஆனால், இந்த முக்தி ஒரு சிலருக்கு தான் கிடைக்கிறது.

சில ஷேத்திரங்கள், முக்தி ஸ்தலம் என்று சொல்லப்பட்டுள்ளது.

கமலையில் (திருவாரூரில்) பிறந்தால், முக்தி; சிதம்பரத்தை (நடராஜரை) தரிசித்தால், முக்தி; திருவண்ணாமலையை (அண்ணா

மலையை) நினைத்தாலே முக்தி; காசியில் இறந்தால், முக்தி என்றெல்லாம் கூறுகின்றனர்.

இதில், கமலையில் பிறப்பது இவன் கையில் இல்லை; அது, அவன் தாயாரின் விருப்பத்தைப் பொறுத்தது.

அடுத்து, சிதம்பரத்தை தரிசித்தால் முக்தி. எத்தனையோ தடவை சிதம்பரம் வழியாகப் போவர்; ஆனால், இறங்கி, நடராஜ தரிசனம் செய்ய நேரமிராது.

அடுத்தது, ரொம்ப சுலபம். அண்ணாமலையை நினைத்தாலே போதும், முக்தி கிடைக்குமாம்.

எவ்வளவோ வேலைகள், தொல்லைகள். அருணாசலத்தை, அது தான், திருவண்ணாமலையாரை நினைக்க நேரமிராது.

அடுத்தது, காசியில் மரிப்பவருக்கு முக்தி; ஆனால், அது எல்லாருக்கும் கிடைத்து விடாது.

காசியில் மரிக்க வேண்டிய புண்ணியம் உள்ளவர்களை அழைத்து வரவும், புண்ணியமில்லாதவர்களை வரவிடாமல் தடுத்தும், அப்படி, யாராவது தங்கியிருந்தாலும், அவர்களை வெளியூருக்குக் கிளப்பி விடவும் தனித்தனியாக பூத கணங்களை அங்கே பகவான் வைத்திருப்பாராம்.

புண்ணியமில்லாதவன், காசிக்குப் போகிறேன் என்று, எத்தனை தடவை புறப்பட்டாலும் போக முடியாது;

அதே போல், புண்ணியமில்லாதவன் அங்கிருந்தாலும் கடைசி காலத்தில் அங்கே மரிக்க முடியாது.

புண்ணியமுள்ளவன் அங்கே இருந்தால் அது பாக்கியம் அல்லது வேறு எங்கேயாவது இருந்தாலும் மரண காலத்தில் அவன் அங்கே வந்து சேர்ந்து விடுவான்.

இது ஈ, எறும்பு முதல் எல்லா ஜீவன்களுக்கும் பொருந்தும். காசியிலுள்ள அனைத்து ஜீவன்களுக்கும் முக்தி!

காசி செல்ல ஏற்பாடு செய்கிறாள் ஒரு பாட்டியம்மா. எத்தனையோ சாமான்களை சேகரம் செய்து வைத்துக் கொள்கிறாள்.

கூடவே, ஒரு டின் நிறைய முறுக்கு எடுத்துக் கொள்கிறாள். காசியில் போய் டின்னைத் திறந்து பார்க்கிறாள்.

அதற்குள்ளே கட்டெறும்பு ஒன்று முழிச்சு, முழிச்சு பார்க்கிறது. ‘‘அட, சீ… கட்டெறும்பு, வந்துடுத்தே!’ என்று சொல்லி, எறும்பை எடுத்து கீழே தரையில் போட்டு காலால் மர்த்தனம் செய்கிறாள்.

கட்டெறும்பு புண்ணியம் செய்திருந்தது. டிக்கட் கூட வாங்காமல், சாப்பாட்டு செலவும் இல்லாமல் காசியில் மரணம்; முக்தி!

இது எல்லாருக்கும் கிடைத்துவிடாது. அங்கே யாராவது மரணமடைந்தால், அழமாட்டார்கள்; காசி விசுவநாதன் அழைத்துக் கொண்டு விட்டான் என்பர்.

இறந்தவனுடைய அஸ்தியில் (எலும்புத் துண்டு) ஒன்றையாவது கங்கையில் போட வேண்டுமாம். இறந்தவனுக்கு புண்ணியலோக வாசம் கிடைக்கும்.

நாம் பாரதத்தில் எத்தனையோ ஷேத்திரங்கள், புண்ணிய நதிகள். என மனிதன் நற்கதி பெற பல மார்க்கங்கள் உள்ளன. இவைகளிலும் நம் கவனம் செல்ல வேண்டும்.



"கடமையைச் செய் பலனை எதிர் பாராதே.

பன்னெடுங்காலமாக நம் ரிஷிகளும், முனிபுங்கவர்களும், யோகிகளும், தவசிகளும் வனங்களிலும், குகைகளிலும், புலனடக்கி, மனமொடுக்கி கடும் முயற்சியின் பயனாக அடைந்திட்ட ஞானத்தையும், முக்தியையும் வெகு எளிதாகப் பெற்றுத்தருவதாகச் சிலர் சொல்லிக் கொள்கிறார்கள்.

பல ஜென்மங்களைக் கடந்தே நம் முன்னோர்களில் பல பேர் பலன்களை அடைந்திருக்கிறார்கள் என்று புராணங்கள் சொல்கின்றன.

அதன் படி முக்தி அடைவது என்பது அவ்வளவு எளிதல்ல என்பதே உண்மை.

இதை மாற்றி அமைக்கவும், இந்தப் பிறவியிலேயே அதை அடைந்திடவும் தங்கள் அறிவின் தெளிவால் உபாயங்களைக் கண்டுபிடித்து, அவற்றைக் கடைபிடித்து சித்தி அடைந்தவர்கள் சித்தர்கள்.

இந்த சித்தி என்பது முக்தியின் ஒரு பிரிவாகும். அது என்ன பிரிவு ? முக்தி என்றால் இறைவனைக் கலந்து விடுவது தானே ? என்று கேட்கக் கூடும்.

அதாவது முக்தியை நான்கு விதமாகப் பிரித்து சொல்லியிருக்கிறார்கள்.

1.சாரூப்ய முக்தி - இறைவனைப் போன்ற உருவம் பெற்று விடுதல். 2. சாமீப்ய முக்தி - இறைவனுக்கருகில் இடம் பெறுதல். 3. சாலோக்ய முக்தி - இறைவனோடு கைலாசத்திலோ, வைகுண்டத்திலோ வசித்தல். 4. சாயுஜ்ய முக்தி - இறைவனோடு ஒன்றறக் கலந்து விடுதல்.

இதில் முதல் முக்திப்படிப் பார்த்தால் உருவமே இல்லாத இறைவனின் உருவம் அடைதல் என்றால் அதுவும் இறைவனைக் கலத்தலே ஆகும்.

ஆக ஒன்றும் நான்கும் இறையாற்றலோடு கலந்து விடுவதே. இடையில் காணப்படும் இரண்டும், மூன்றுமே சித்தியாகும்.

அதாவது இறையாற்றலுக்கருகில் வசிப்பது என்றால், ஸ்தூல சரீரத்தைத் துறந்து சூக்கும சரீரத்தோடு பரவெளியில் ஸமாதியில் திளைத்திருப்பதாகும்.

எனவேதான் முக்தி அடைந்தவர்கள் வருவதில்லை என்று சொல்கிறார்கள்.

சித்தி அடைந்தவர்களை ஒரு மனதோடு தியானித்தால் வருவார்கள் என்றும் சொல்கிறார்கள்.

இதற்கு ஆதாரமாக குரு இராகவேந்திரரைச் சொல்லலாம். அவர் ஜீவ சமாதியில் புகும் போது இன்னும் 400 ஆண்டுகள் இந்த இடத்தில் நான் இருப்பேன். நீங்கள் அழைத்தால் வருவேன். அதற்குப் பிறகே முக்தி அடைவேன் என்று சொன்னதாக வரலாறு.

இந்த சித்தியோ, முக்தியோ அடைவதற்கு முன் யோகியானவர் அடையும் உண்மையை உணர்ந்த நிலையையே ஞானம் என்கிறோம்.

ஞானம் அடைந்தவருக்கு அறியாமை என்னும் அஞ்ஞானம் நீங்கி விடுகிறது.

ஏனென்றால் அவர் பிரபஞ்ச மனதோடு தன் மனதை இணைத்து விடுவதால் அவருக்குத் தெரியாமல் எதுவும் நடக்காது.

பார்க்கப்படும் பொருள் இன்றி பார்ப்பவர் மட்டுமே என்ற நித்தியானந்த நிலையை அடைகிறார்.

அலைகளற்ற கடலைப் போல சலனமற்ற சமநிலையில் அவர் மனம் இருக்கிறது. பேதமற்ற நிலையில் அது, இது, நீ. நான் என்ற நிலையைக் கடந்து விடுகிறார்.

முப்பரிமாணங்களைக் கடந்து அடுத்த பரிணாமத்திற்குள் நுழைகிறார். அங்கே காலம் கிடையாது, உணர்வுகள் கிடையாது, முக்குண தோஷங்கள் கிடையாது, அது ஒரு பரப்பிரம்ம நிலை.

எனினும் அவர் மனமானது நான் பிரம்மம் என்ற எண்ணத்தில் நிற்கிறது. இதைத்தான் ஈசனோடாயினும் ஆசை அறுமின் என்பார்கள்.

இந்த ஞானிகளை ஜீவன் முக்தர்கள் என்பார்கள். இந்த ஜீவன் முக்தர்களின் சாத்வீக அஹங்காரத் தரத்திற்கேற்ப அவர்களை நான்கு வகையாகச் சொல்வார்கள்.

1.பிரம்மவித், 2. பிரம்மவித்வரன், 3. பிரம்மவித்வரீயான், 4. பிரம்மவித் வரிஷ்டர் என்பதாகும்.

இந்த ஞானத்தின் நிலைகளை ஏழு பிரிவாகச் சொல்வார்கள். அவை சுபேச்சா, விசாரணை, தனுமாநஸி, ஸத்வாபத்தி, அசம்சக்தி, பதார்த்தபாவனை, துரீயம் என்பவைகளாகும்.

இந்த நிலைகளை பூமிகா என்பார்கள். இந்த நிலைகளைப் பற்றியும், ஞானிகளைப்பற்றியும் ஏற்கனவே சொல்லியிருப்பதால், அடுத்த கட்டத்திற்கு வருவோம்.

முதல் மூன்று பூமிகாவில் அதாவது ஞானத்தின் நிலைகளில் செயல்படும் ஞானி முமுட்சு என்பார்கள்.

அதாவது புற உலகப் பொருள்களில் உதாசீனம், வைராக்யம், ஆத்ம ஞான நூல்களை வாசித்தல், பிரம்ம ஞானிகளின் தொடர்பு, கற்ற, கேட்ட விஷயங்களைப் பற்றிய விசாரணை, இடைவிடாத பயிற்சி இவற்றால் மனம் பிரம்மத்தில் லயிக்கிறது.

அது ஒரு மெல்லிய நூலைப் போல மாறி விடுகிறது. பிரம்மாகார விருத்தி ஏற்படுகிறது. இதுவே முமுட்சு.

நான்காவது பூமிகாவில் செயல்படும் ஞானியை பிரம்மவித் என்பார்கள். மேலே சொன்ன மூன்று நிலைப் பயிற்சியால் ஆசைகள் அறவே ஒழிந்து விடுகிறது.

தத்துவ ஞானம் வளர்கிறது. மனம் முழுவதும் சத்துவ குணத்தால் நிரம்பி வழிகிறது. ஐந்தாவது பூமிகாவில் செயல்படுபவர் பிரம்மவித்வரன் எனப்படுவார்.

நான்காவது நிலையில் மனம் சத்துவத்தால் நிரப்பப்படும் போது மனமானது படிப்படியாக பிரம்மத்தில் கரைகிறது.

கர்மாக்கள், சம்ஸ்காரங்கள், சங்கல்பங்கள் யாவும் இல்லாமல் போய் விடுகின்றன.

இனி ஆறாவது பூமிகாவில் செயல்படும் ஞானி பிரம்மவித் வரீயான் என்றழைக்கப்பட்டுகின்றார்.

புற மற்றும் அகப் பொருள்களின் காட்சி அறவே இல்லாமல் போய்விடுகின்றது. அதையும் மீறி ஏதாவது காட்சி இருக்குமானால் அது மற்றவர்களின் வற்புறுத்தலினாலானதாகவே இருக்கும்.

ஏழாவது பூமிகாவில் வசிக்கும் ஞானியே பிரம்மவித் வரிஷ்டன். இதுவே துரீயம். இதில் பன்மை உணரர்வுகளேதும் இல்லை. திரிபுடி எதுவுமில்லை.

இவர்களால் உலக ஷேமத்துக்காக எதுவும் செய்ய முடியாது. உணவே கூட மற்றவர்கள் தான் இவர்களுக்கு வலுக்கட்டாயமாக ஊட்டி விட வேண்டும்.

இவர்களே அவதூதர்களாக ஆடைகளைத் துறந்து நிர்வாணியாக இருப்பார்கள். இவர்கள் இருக்கும் இடம் சொர்க்கம்.

அந்த பிரதேஷமெங்கும் பிரகாசம் விளங்கும். ஆறு, ஏழு பூமிகாவில் இருப்பவர்கள் ஐந்து, நான்கு நிலைகளுக்கு இறங்கி வந்து லோக ஷேமத்திற்காக ஏதாவது செய்ய விரும்பினால் செய்யலாம்.

ஏழாவது பூமிகாவில் ஒரு ஞானி 14 நாட்களே உயிர் வாழ முடியும். அதாவது இந்த சரீரத்தில் இருக்க முடியும்.

ஏழாவது நிலை நீடிக்கும் போது துரீயாதீதம் மலர்கிறது. முக்தியோ, சித்தியோ அவர்கள் விரும்பியதை அடைவார்கள்.

ஏன் அவ்வாறென்றால் விருப்பம் உள்ளவர்களுக்கு அது ஒரு பற்றிருப்பதால் சித்தி. அந்த பற்றும் அறுத்தவர்களுக்கு முக்தி.

எனவே இடைவிடாத பலனைப் பற்றிய சிந்தனையில்லாதப் பயிற்சியும், வைராக்யமும், விடா முயற்சியும் இருந்தால் எந்த நொடியிலும், எப்போது வேண்டுமானாலும் ஞானமடைந்து முக்தியை அடையலாம்.

பலன் குறித்தும் தன்னிலை குறித்தும் கவலை கொள்கிறவர்களுக்கு மேலும் காலதாமதமே ஏற்படும்.

இதைக் குறித்து சொல்லப்பட்ட வார்த்தையே "கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்பது".

## இறைவனடி சேர்தல்

**முத்தி** என்பது வீடுபேறு. சிப்பிக்குள் விழுந்த நீர் இறுகி முத்தாவது போல உடலுக்குள் விழுந்த உயிர் முத்தாகி ஒளிர்வது முத்தி. சமய நூல்கள் இதனை இறைவனடி சேர்தல் எனக் குறிப்பிடுகின்றன.

## முத்தி பெற வழிகள்

நான்கு வழிகளில் முத்தி பெறலாம் எனச் சைவநெறி குறிப்பிடுகிறது.

வழிகளை 'மார்க்கம்' என்பர். இந்த 4 வழிகளுக்கு வடசொற்களால் பெயர்கள் இடப்பட்டுள்ளன. அவை *சரியை, கிரியை, யோகம், ஞானம்* என்பன. தமிழில் இவற்றை *ஒழுக்கம், செயல், தவம், மெய்யுணர்தல்* எனலாம்.

### சரியை

சரியை என்பது பிறரிடம் நடந்துகொள்ளும் நடத்தை முறைமை. அன்பு, அடக்கம், ஒழுக்கம், பொறை, அழுக்காறாமை, வெஃகாமை போன்ற இல்லற நடத்தைகளும், அவாவின்மை போன்ற துறவற நடத்தைகளும் திருக்குறள் காட்டும் ஒருக்க நெறிகள்.

இந்த நற்பண்புகளைக் கடைப்பிடித்து முத்தி பெறுவது சரியை காட்டும் வழி.

சிவதருமோத்தரம், சைவசமயநெறி, வாயுசங்கிரதை, மச்சபுராணம், பிரமோத்தர காண்டம், உபதேச காண்டம் முதலான நூல்கள் சரியை வழியைக் கூறுவன.

### கிரியை

கிரியை என்பது செயல். விருந்தோம்பல், இனியவை கூறல், புறங்கூறாமை, பயனில சொல்லாமை, தீவினை அச்சம், பிறனில் விழையாமை முதலான நற்செயல்களால் முத்தி அடைவது கிரியை கூறும் வழி.

தத்துவப் பிரகாசம் கிரியை வழியைக் கூறும் நூல்.

### யோகம்

யோகம் என்பது தவம். திருமூலர் இதனை அட்டாங்க யோகம் என்று கூறி விளக்குகிறார். [2இதனைக் கடைப்பிடித்து முத்தி பெறுவது இன்னொரு வழி.

### ஞானம்

ஞானம் என்பது மெய்யுணர்தல். இது உள்ளுணர்வு. இறைவன் தனக்குள்ளே, இறைவனுக்குள்ளே யான்; இறைவன் வெளியே, வெளிக்குள்ளே யான் என்றல்லாம் உணர்ந்துகொண்டு செயலாற்றி வாழ்வதால் முத்தி பெறலாம் என்பது ஞானம் உணர்த்தும் வழி.

சிவநெறிப் பிரகாசம், தத்துவ ரத்னாகரம் போன்ற நூல்கள் ஞானவழி பற்றிக் கூறுகின்றன.

## முத்திக் கோட்பாடு

முத்தி என்பது பேரின்பம். இதனை ஆனந்தம் என்பர். இதுபற்றி இரு கோட்பாடுகள் உண்டு. [3

- **ஆன்மானந்த வாதம்** - ஆன்மா இயல்பாகவே ஆனந்தத்தில் திளைக்கும். உடலோடு கட்டுண்டு கிடக்கும்போது மலப்பாசத்தால் துன்புறும். பாசத்தை விலக்கி ஆன்மாவுக்கு ஆனந்தம் தரவேண்டும். - மறைஞான சம்பந்தர் கோட்பாடு.
- **ஆன்ம வாதம்** - ஆன்மா முயற்சியால்தான் பேரின்பப் பேற்றை அடையமுடியும் என்பது மற்றொரு கோட்பாடு. இந்தக் கோட்பாட்டை விளக்குவது குருஞான சம்பந்தர் செய்த முத்திநிலை என்னும் நூல். [7

## அத்வைத வேதாந்த நோக்கில் முக்தி

ஒரு சீவாத்மா பிறப்பு-இறப்பு எனும் மீளாத சுழற்சியிலிருந்து நிலையாக விடுதலை பெற்று, பிரம்மத்தில் ஐக்கியமாவதே முக்தி எனப்படும். சீவ முக்தி, விதேக முக்தி மற்றும் கிரம முக்தி என மூன்று படிகளில் ஒரு மனிதன் முக்தியை அடையலாம்.

### சிவவாக்கியாரும் முக்தியும்.

செத்தபின் முக்தி என்ற கருத்தில் சிவவாக்கியருக்கு ஒப்புதலில்லை. அத்தகைய விடுதலை வெறும் ஒரு அனுமானம் மட்டுமே.

மறுபிறவியை மறுக்கும் சிவவாக்கியரின் புகழ்பெற்ற பாடலொன்று உண்டு.

அறியவிருப்பவனின் மரணம் அவன் அறிவதைத் தடைசெய்யும் என்றும், அதனால் மரணத்திற்குப் பின் முக்தி என்பது சாத்தியமன்று என்பதற்கும் உள்ள சான்றாகும் அப்பாடல்.

"கறந்தபால் முலைப்புகா கடைந்த வெண்ணைய் மோர்புகா
உடைந்துபோன சங்கினோசை யுயிர்களும் முடற்புகா
விரிந்தபூ வுதிர்ந்தகாயு மீண்டுபோய் மரம்புகா
இறந்தவர் பிறப்பதில்லை யில்லையில்லை யில்லையே."

என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறார் சிவவாக்கியர்.

ஓடம்போலோடுகின்ற உடல் கவிழுமுன்னே யோகஞ்செய்து தேகத்தை நிலைநிறுத்திச் மெய்ப்பொருளையறிய வேண்டும் என்பதை,

"ஓடமுள்ள போதெலா மோடியே யுலாவலாம்
ஓடமுள்ள போதெலா முறுதிபண்ணிக் கொள்ளலாம்
ஓடமு முடைந்தபோது வொப்பிலாத வெளியிலே
ஆடுமில்லை கோலுமில்லை யாருமில்லை யானதே"

என்று, இறந்துபட்ட பிறகு சூனியமென்ற இடத்தில் யாவருள்ளனர் என்ற கேள்வியை அவர் எழுப்புகின்றார்.

## அன்பும் கருணையும்.

இறைவனடி சேரும்முக்தியையே பல மகான்கள் விரும்பினார்கள். அதை மானுடத்திற்கும் சொல்லியும் வைத்தார்கள்.

"புனரபி ஜனனம் புனரபி மரணம்

புனரபி ஜனனம் ஜனனம் சயனீ

இஉற சம்சாரே பஉறீதுஸ்தாரே

க்ருபயாபாரே பாஉறி முராரே"

என்று பஜ கோவிந்தத்தில் ஆதிசங்கரர் பாடுகிறார்.

வாழ்க்கை வாழ்வதை விட முடித்துக் கொள்வதே மேல். இது ஆதிசங்கரரின் பிரார்த்தனை.

வாழ;க்கை வாழ்வதற்கு என்பது ஆண்டாளின் விருப்பம். ஆதிசங்கரரைவிட ஆண்டாள் வேறுபடுகிறார்.

ஏழு பிறவிகளிலும் வாழத் தயார். ஆனால் யாருக்காக வாழ்வது? உனக்காகவே வாழ்வேன். எனக்காக அல்ல என்பதே ஆண்டாளின் விருப்பம்.

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

உந்தனோடு உற்றோமே யாவோம்

உமக்கே நாம் ஆட்செய்வோம்

மற்றைய நம் காமங்கள் மாற்லோ ரொம்பாவாய்."

இறைவனுக்காக வாழ்வதுதான் வாழ்க்கை என்ற கோட்பாட்டை திருப்பாவையில் பார்க்கிறோம்.

”அப்பா நான் வேண்டுதல் கேட்டருள் புரிதல் வேண்டும்

ஆருயிர்க்கெல்லாம் நான் அன்பு செயல் வேண்டும்.”

மன்னுயிர்க்கெல்லாம் அன்பு செய்வதே என்னுடைய வாழ்வின் நோக்கமாக அமைய வேண்டும் என்று இறைவனிடமே சொல்லுகின்ற தெளிவையும் வள்ளலாரிடத்தில் நாம் காண்கிறோம்.

சிந்தையும் செயலும் சேர்ந்ததே மனிதன் என்பார்கள். சிந்தைக்கு வேண்டியது இறைநிலை பற்றிய அறிவு, தெளிவு.

செயலுக்கு வேண்டியது மானுடத்தை நோக்கிய அன்பும், கருணையும்.

இதனை வலியுறுத்தும் பொருட்டே வள்ளரலாரின் தாரக மந்திரம் அமைந்திருக்கிறது.

சிந்தைக்கு வேண்டியது அருட்பெருஞ்சோதி. செயலுக்கு வேண்டியது தனிப்பெருங்கருணை.

வள்ளலாரின் வாழ்க்கைத் தத்துவத்தை அடித்தளமாக அமைக்கிறார் வேதாத்திரி மகரிசி.

”நீதிநெறியுணர் மாந்தராகி வாழும்

நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.”

”எத்தகைய உயிர்கட்கும் இன்பநிலை காத்து

இறைணர்வில் இணைந்து அறம் ஆற்றி வாழும் பேறு”

என்ற மகரிசியின் தத்துவம் நமக்கு உணர்த்துவது.

சிந்தைக்கு வேண்டியது இறையுணர்வு. செயலுக்கு வேண்டியது எத்தகைய உயிர்கட்கும் நாம் தரும் பாதுகாப்பும் (அன்பும்) பராமரிப்பும் (கருணையும்) இணைந்த அறநெறி.

இதுவே வேதாத்திரிய வாழ்க்கை நெறி. இறையுணர்வும் அறநெறியும் வேதாத்திரியத்தின் இரு கண்கள்.

அன்பும் கருணையும் கொண்டு பெற்றோருக்கு அன்புள்ள மகனாக அல்லது மகளாக,

இல்லறத்தில் அன்புள்ள கணவனாக அல்லது மனைவியாக,

பெற்ற பிள்ளைகளுக்குப் பொறுப்புள்ள நல்ல தந்தையாக அல்லது தயாயாக,

தொழில் புரியும் இடத்தின் அன்பானவராக,

ஊரார்க்கு உதவும் கரங்களாக

நாம் வாழ்வோமேயானால் அதுவே முக்தி.

இந்த முக்தியை அடைந்த அளவே நமது வாழக்கையின் வெற்றி.

இறந்து அடைகின்ற நிலையல்ல முக்தி. இதைதான் செத்தபின் முக்தியா? என்று கேலி செய்கிறார் சிவவாக்கியார்.

இறப்புக்கு பெருமை சேர்க்குமாறு வாழ்கிற வாழ்க்கையே முக்தி. இந்த முக்திக்கு முறையான வழியே வேதாத்திரியமும் சிவவாக்கியாரின் பாடல்களும்.

# 15.தேர்த்திருவிழா தவிர்த்தல்

பேதமை நிறைந்த மக்கள் அனைவரும்கூடி விழாமுதலான பேரில் செப்புச் சிலையை வைத்துச் செய்யும் பித்தலாட்டங்களையும் கடுமையாகச் சாடுகிறார் சிவவாக்கியர்.

"ஊரிலுள்ள மனிதர்கா ளொருமனதாய்க் கூடியே
தேரிலே வடத்தையிட்டு செம்பைவைத் திழுக்கிறீர்
ஆரினாலு மறியொணாத வாதிசித்த நாதரை
பேதையான மனிதர்பண்ணும் புரளிபாரும் பாருமே."

எனத் தேர்த்திருவிழா போன்ற வெறும் சமய சம்பிரதாயங்களை ஏளனம் செய்கின்றார்.

வேதாத்திரியம் தரும் திட்டங்களில் "தேர்த்திருவிழா தவிர்த்தல்" ஒரு திட்டமாகும்.

"போரில்லா நல்லுலகம், பொருள்துறையில் சமநீதி,

நேர்மையான நீதிமுறை, நிலவுலகுக்கோர் ஆட்சி,

சீர்செய்த பண்பாடு, சிந்தனையோர் வழிவாழ்வு,

சிறப்புணர்ந்த பெண்மதிப்பு, தெய்வநீதி வழிவாழ்தல்,

தேர்திருவிழா தவிர்த்தல், சிறுவர்கட்கே விளையாட்டு,

செயல்விளைவு உணர்கல்வி, சீர்காந்த நிலைவிளக்கம்,

பார்முழுதும் உணவு நீர் பொதுவாக்கல், பல மதங்கள்

பலகடவுள் பழக்கம் ஒழித்துண்மை ஒன்றை தேர்ந்திடுதல்."

திட்டம் 9 தேர்த்திருவிழா தவிர்த்தல்:

வியாபார நோக்கத்தோடு தெய்வத்தின் பெயரால் மக்களை கூட்டத்தை சேர்த்து சுகாதாரக்குறைவு, பண்பாட்டை சீர்குலைக்கும் கலை நிகழ்ச்சிகள், சட்டம் ஒழுங்கு பாதிப்புகள் இவற்றை ஏற்படுத்தும் தேர்த்திருவிழாவை தவிர்ப்பது இக்காலத்திற்கு நன்மையாக அமையும்.



ஓட்டையுள்ள பாத்திரத்தில் ஊற்றும் நீர் விரயமாவதைப் போல் மனிதர் வாழ்வில் எண்ணம், சொல் , செயல் பழக்கத் தவற்றால், நிறைந்த செல்வமான இன்பங்கள் குறையும். அவற்றைச் சீர் செய்தால் வாழ்வு இனிமையாக இருக்கும்.

மனித குலத்திற்கு பொருட்செலவு, ஆற்றல் விரயம், பண விரயம், சுகாதாரக்கேடு ஆகியவற்றையே வழங்கும் தற்காலத் தேர்திருவிழாக்கள் தவிர்க்கப்பட வேண்டியனவாகும்.

வியாபார நோக்கோடு தெய்வத்தின் பெயரால் மக்களைக் கூட வைத்து சுகாதாரக் குறைவு, பண்பாட்டைச் சீர்குலைக்கும் கலை நிகழ்ச்சிகள், சட்டம் ஒழுங்கு பாதிப்புகள் இவற்றை ஏற்படுத்தும் திருவிழாவை தவிர்ப்பது இக்காலத்திற்கு நன்மையாகும்.

**தேர்த் திருவிழா தவிர்த்தல்:**

"கடவுள்தான் அனைத்தையுமே படைத்தான் என்றேன்
கண்காது மூக்கு வைத்துக் கதைகள் சொன்னேன்
கடவுள் என்ற கற்சிலையை அறையில் வைத்துக்
கதவு அடைத்துப் பூட்டியும் வைத்தேன்; பின் அந்தக்

கடவுளுக்குப் பசிதீர்க்க பால், நெய், தேங்காய்
கனிவகைகள் கற்சிலைமுன் படித்தேன்; ஆனால்
கடவுள் நிலை அறிந்தபோதென் செய்கை யெல்லாம்
கண்டு விட்டேன் சிறுபிள்ளை விளையாட்டாக."

வேதாத்திரியத்தில் இன்று நாம் சிந்திக்கக் கூடியது மிக உயர்ந்த ஒரு கருத்தைப் பற்றியது.

இறைவன் யார்? இறைவனுக்கு உருவம் உள்ளது என்று நினைத்து நாம் அவனுக்கு, நாம் என்னவெல்லாம் நமக்காக செய்துகொள்கிறோமோ அவையனைத்தையும் அவனுக்கு செய்கிறோம், ரசிக்கிறோம்.

மேலும் இறைவனிடம் நீ எனக்கு இது செய்தால், நான் உனக்கு அது செய்கிறேன் என்று வியாபாரம் செய்கிறோம்.

சற்றே சிந்தித்துப் பார்ப்போம். இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து, கோடானுகோடி கோள்களையும், உயிர்களையும் படைத்து, அவை அனைத்தையும் இயக்கிக்கொண்டும், காத்துக் கொண்டும் இருப்பவன் இறைவன். அவனுக்கு தேவை என்பது இல்லை.

ஏனெனில் அவனுக்கு உடலும் இல்லை, குடலும் இல்லை. அப்படியெனில் இவ்வளவு நாட்களாக நாம் செய்துகொண்டிருக்கும் பூஜை, ஆராதனை, திருவிழாக்கள் இவையெல்லாம் எப்படி உருவாகி இருக்கும்?

ஒழுக்க நெறி தவறி வாழும் மக்களை நல்வழிப்படுத்தி அவர்களை திருத்துவதற்கும், சமுதாயத்திற்கு அவர்களால் ஏற்படும் துன்பங்களைத் தவிர்ப்பதற்கும் உண்மையான இறையுணர்வு பெற்றவர்களும், சிந்தனையாளர்களும் உருவாக்கியதே ஆகும்.

இந்த நன்னோக்கத்தைப் பயன்படுத்தி சில வியாபாரிகளாலும், சில சுயநலவதிகளாலும் உருவாகாப்பட்டவைகளே இத்தகைய தேர்த்திருவிழா போன்ற பல. இவைகளால் ஏற்படும் செலவுகளையும்,

இத்தகைய நேரங்களில் ஏற்படும் சண்டை, சச்சரவு போன்றவைகளை சிந்தித்து தவிர்ப்போம்.

## 16. பாலானாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்.

இளமை காத்து நீண்ட காலம் இந்த நிலவுலகில் வாழ்வது என்பத மனிதனது சாதனைக்கு உட்பட்டதே.

இதற்கான வழிவகைகளை தமிழ் நாட்டுச் சித்தர்கள் எழுத்து வடிவில் விட்டுச் சென்றிருக்கின்றனர்.நீண்ட காலம் உடலைப் பாதுகாப்பது என்ற சூட்சுமத்தினை-

*ஈராறு கால் கொண்டெழுந்த புரவியைப்*

*போராமற் கட்டிப் பெரிதுண்ண வல்லிரேல்*

*நீராயிரமும் நிலமாயிரத்தாண்டும்*

*போராது காயம் பிரான் நந்தி ஆணையே*

என்று திருமந்திரமும் பலவிதங்களில் விதந்தோதுகிறது.

ஞானம் எய்துவது எப்படி என்பதை சிவ வாக்கியர்,

*உருத்தரித்த நாடியில் ஓடுகின்ற வாயுவை*

*கருத்திலே இருத்தியே கபாலமேற்ற வல்லிரேல்*

*விருத்தரும் பாலனாவார்மேனியும் சிவந்திடும்*

*அருள் தரித்த நாதர் ஆணை அம்மை ஆணை உண்மையே*

என்கிறார்.

மேலும் காயகற்பம் குறித்து,

"மூலமாங் குளத்தினல் மூளைத்தெழுந்த கோரையைக்

காலமே எழுந்திருந்து நாலுகட்டு அறுப்பிரேல்,

பாலனாகி வாழலாம் பரப்பிரம்மம் ஆகலாம்.

ஆலமுண் கண்டர்பாதம் அம்மைபாதம் உண்மையே!"

உயிர் ஆற்றலை பெருக்கிக் கொள்வதற்கான
எளியமுறை காயகல்பப் பயிற்சி :
---------------------------------------------

"ஆய கலைகள் மொத்தம் கணக்கேடுத்தோர்
அறுபத்து நாலுஎன்றார். அனைத்தும் கற்றும்
காயகற்பமெனும் கலைக் கற்கா விட்டால்,
கற்றதெல்லாம் மன்புகுமே உடல் விழுந்தால்"

--அருள் தந்தை

சிவவாக்கியார் போன்ற நம் நாட்டுச் சித்தர்கள் எழுத்து வடிவில் விட்டுச் சென்றிருந்தாலும், அவர்கள் கையாண்ட பரிபாஷைச் சொற்றொடர்களின் முழுப்பொருளும் விளங்காதிருந்த காரணத்தாலே "காயகல்பப் பயிற்சி' யானது பல நூற்றாண்டுகளாக மூடுமந்திரமாகவே இருந்தது.

தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி அவர்கள் 40 ஆண்டு காலம் தொடர்ந்து நடத்திய ஆராய்ச்சியின் பயனாகக் "காயகல்பப் பயிற்சி' அனைத்து மக்களுக்கும் கைகூடி வருகின்ற அளவுக்குத் தெளிவாக்கி உள்ளார்கள்.

இது குண்டலினி யோகத்தின் உச்சக்கட்டப்பேறாகும். இந்த அருமையான பயிற்சியைக் கற்றுக் கொள்ளும் முன் அதற்கு ஆதாரமான தத்துவத்தினையும் விஞ்ஞான ரீதியாக நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

உடல், உயிர்ச் சக்தி, விந்துநாதம், சீவகாந்தம், மனம் இவை ஐந்தும் ஒரு சேர இயங்கும் அமைப்பே மனிதன் என்கிற வடிவமாகும்.

கோடிக்கணக்கான சிற்றறைகள் (Cells) சேர்ந்து அடுக்கடுக்காக இயங்குவது இந்த உடல். ஒவ்வொரு சிற்றறைக்கும் இருபுறமும் காந்தக் கவர்ச்சி உண்டு.

உடல் நிலைத்திருக்க வேண்டுமானால் அதில் அமைந்துள்ள சிற்றறைகளின் எண்ணிக்கைக்கும், பளுவுக்கும் ஏற்ற ஜீவகாந்த அழுத்தம் தேவை.

"ஜீவகாந்தம்' என்பது உயிர்ச்சக்தி இயங்குவதால் எழும் அலையாகும்.

ஒவ்வொரு உயிர்த்துகளும் தன்னைத்தானே மிக விரைவாகச் சுற்றிக் கொண்டு இருப்பதால், அதிலிருந்து விரிந்து கொண்டே இருக்கும் அலை தொடர்ந்து தோன்றிக் கொண்டேயிருக்கிறது.

ஓர் உடலில் உள்ள உயிர்த்துகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப, ஜீவகாந்த அழுத்தம் நிலைபெறும்.

போதிய ஜீவகாந்தம் இருக்கும் வரையில்தான், உடலில் உள்ள சிற்றறைகளின் அடுக்குக் குலையாமல் நிலைத்து இருக்கும்.

இரத்த ஓட்டம், காற்று ஓட்டம், வெப்ப ஓட்டம், இம்மூன்றும் சிதறாது ஒழுங்காக ஓடி, உயிருக்கும் உடலுக்கும் இடையே உள்ள உறவை நிலைக்கச் செய்யும். எனவே உடலைத்தாங்க ஜீவகாந்தம் போதிய அளவு தேவை.

ஜீவகாந்தத்தைப்பெருக்க வேண்டுமெனில், அதற்கு வேண்டிய எண்ணிக்கையுள்ள உயிர்த் துகள்கள் தேவை.

உயிர்த்துகள்களோ விந்துநாத திரவத்தின் அளவையும், தன்மையையும் பொறுத்திருக்கும்.

போதிய அளவு விந்து (ஆண் வித்து) அல்லது நாதம் (பெண் வித்து) இருந்தால்தான் உடலை நடத்தப் போதுமான ஜீவகாந்த சக்தியை உற்பத்தி செய்யும் அளவுக்கு உடலில் உயிர்ச் சக்தித்துகள்கள் நிலைத்திருக்கும்.

ஜீவகாந்த அளவு சரியாக இருந்தால்தான் பரு உடலானது சிற்றறைகளின் ஒழுங்கான இயக்கத்தால் சீராக இயங்கிக் கொண்டிருக்கும்;

மனமும் நல்ல முறையில் இயங்கும். ஜீவ காந்தத்தின் ஒரு பகுதி உடல் சிற்றறைகளின் மூலம் உடலியக்கமாகவும், மற்றொரு பகுதி மூளையின் சிற்றறைகள் மூலமாக மன அலைகளாகவும் இயங்கிக் கொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

உடல், விந்து, உயிர்ச் சக்தி, ஜீவகாந்தம், உடல் மன இயக்கம் என்ற தொடரினை நன்றாக மனதில் பதித்துக் கொள்ள வேண்டும்.

இந்த ஐந்தில் ஒன்று குறைந்தாலும், இயக்க ஒழுங்கு குலைந்தாலும் அது மற்றவற்றையும் ஒவ்வொன்றாகப் பாதிக்கும்.

அப்படி ஒன்றுக்கு ஒன்று ஏற்படும் இயக்க முரண்பாட்டிற்கு ஏற்ப வலி, வியாதி, மரணம் இவை சம்பவிக்கும்.

தனது செயல்கள் மூலமாகவோ, வெளிப்புற மோதுதல் அல்லது கோள்களின் காந்த அலைவீச்சு மூலமாகவோ உடலுடைய ஜீவகாந்தம் அல்லது உடலியக்கம் பாதிக்கப்படலாம்.

உணவு, உறக்கம், உழைப்பு, உடலுறவு, எண்ணம் இந்த ஐந்து வகையில் அலட்சியம், மிதமிஞ்சிய உபயோகம், முரண்பட்ட உபயோகம் இவற்றால் உடல் இயக்கம் பாதிக்கப் படலாம்.

இது தன்னுடைய செயல் மூலமாக வரும் விளைவு. இது தவிர தட்ப வெப்ப ஏற்றத் தாழ்வு மற்றும் தற்செயல் விபத்துக்களால் ஏற்படும் குழப்பங்கள், கோள்கள் சஞ்சாரத்தில் அண்மை சேய்மை, ஒன்றோடு ஒன்று நேர்படுதல், ராசி மாற்றம் ஆகிய காரணங்கள், ஒவ்வொருவரின் பிறந்த நாள் கோள்கள் நிலைகளுக்கு ஏற்ப ஜீவகாந்தம் ஏற்றத் தாழ்வடைதல், இப்படி அநேக அம்சங்களால் குழப்பம் வரலாம்.

பாதிப்பு ஏற்படும் பொழுது, மனிதன் தன்னுடைய முயற்சியினால் உடற்பயிற்சி, உளப்பயிற்சி, உணவு முறை உடல் நலத்தைக் காத்துக் கொள்ளலாம்.

காயகல்பப் பயிற்சியின் பயன்கள் :

காயகல்பப் பயிற்சி மிகவும் மதிப்புடையது. மனிதனின் வாழ்வில் உடல் நலம், மனவளம், பொருள் செழிப்பு, தொழில் திறம், உயர் நட்பு ஆகிய அனைத்தும் அளித்துச் சிறப்பிக்க வல்லது.

பேறு உண்டாகும். காயகல்பப் பயிற்சியினால் உடல் நலமும், மனவளமும் நன்றாக இருப்பதோடு, ஆண்மை ஓங்கும், உடல் உறவு விருப்பம் எப்பொழுதும் மனதுக்குக் கட்டுப்பட்டிருக்கும்.

இளமையிலேயே துறவு கொள்வோர் மற்றும் பொதுத் தொண்டில் ஈடுபடும் ஆண்கள், பெண்கள் ஆகியோர் தங்கள் கற்பு மற்றும் உடல் நலத்தைக் காத்துக் கொள்ள இந்தப் பயிற்சி ஒரு வரப் பிரசாதமாகும்.

நாளுக்கு நாள் அறிவு மேலோங்கி, மெய்ப் பொருள் விளக்கம் ஏற்படும்.

நீண்ட காலமாக இருந்து வரும் நோய்கள் படிப்படியாகக் குணமடைந்து உடல் நலமுறும். திருமணத்திற்குப் பின் உடல் நலமும், அறிவு வளமும் உடைய குழந்தைகள் உண்டாவார்கள்.

சுருங்கச் சொன்னால் மனிதகுல வாழ்வில் உள்ள அனைத்துக் குழப்பங்களும் நீங்கி, அமைதியும் நிறைவும் கொண்ட வாழ்வு அமையும்.

காயகற்பப் பயிற்சியினை ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் தகுந்த பேராசிரியர்களால் கற்பிக்கப்பட்டு வருகிறது.

சிவவாக்கியரின் கனவை நினைவாக்கி. அதனை பாடமாக்கி, பயிற்சியாக்கி மானுடம் முழுவதும் கொண்டு சென்ற பெருமை நமது அருட்தந்தை வேதாத்திரி மகரிசிக்கே உரியதாகும்.

# 17. பெண்ணின் நிலைபாடு

தமிழ்ச்சித்தர்கள் காம இன்பம் துய்ப்பதைப் பெரும்பாவமாகவே கூறியிருக்கின்றனர்.

பொதுவாக பெண்ணாசையைக் கண்டனம் செய்யும் வகையில் பெண்களைப் பழித்துரைக்கின்றனர்.

சிற்றின்பத்தில் மூழ்கிப் பேரின்பத்தை அடைய முடியாமல் தடுமாறும் மாந்தர்களுக்கு அறிவுரை சொல்லுகின்றபோது,

வாழ்க்கையின் நிலையாத்தன்மையை உணர்த்துவதற்கு அவர்கள் பெண்மயக்கத்தை, முக்கியமாக விலைமகளிரிடம் ஆண்கள் சிக்கிச் சீரழிவதைக் கண்டித்துப் பாடியதாகக் கருத வேண்டுமேயல்லால்,

சித்தர்கள் பெண்ணினத்தையே முற்றாக வெறுத்து இருப்பார்கள் என்று எண்ணுவதற்கு இடமில்லை.

சிவவாக்கியத்திலும் பெண்ணாசையால் மதிமறக்கும் மானிடர்களைத் தூற்றும் பாடல்களிருப்பினும் பெண்களுக்குத் தூய்மையின்மையைக் கற்பித்துத் தரம் தாழ்த்துவதைப் பல பாடல்களில் சிவவாக்கியர் கண்டித்துள்ளார்.

முக்கியமாகப் பெண்களின் மாதவிடாய் நாட்களில் பெண்ணை அசுத்தமடைந்தவள் என ஒதுக்குவதை மிகவும் துணிவுடன் அக்காலத்திலேயே எதிர்த்தபெருமை சிவவாக்கியரைச் சேரும்.

“தூமைதூமை யென்றுளே துவண்டலையு மேழைகாள்
தூமையான பெண்ணிருக்க தூமைபோன தெவ்விடம்

ஆமைபோல் வந்து அழைத்தபோது நாறும் இந்த நல்லுடல்

சுடலை மட்டும் கொண்டுபோய்த் தொட்டிகைக் கொடுப்பரே”

தாயான பெண்ணின் இரத்தத்திலிருந்தே குருக்கள், தேசிகர்கள் முதலான பேராளர்களுக்கும் பிறவி பெற்றனர்.

அவளுடைய உதிரமானது அவளுக்குள்ளேயே எக்காலமும் இருக்கின்றது.

அப்படியிருக்க அம்மூன்று நாட்கள் மட்டும் பெண்ணைத் தீண்டத்தகாதவளாக்கித் துவண்டலைகின்றீர்களே என்று விசனத்துடன் கேட்கின்றார்.

ஆய்வறிவின் அடிப்படையில் எந்த ஆதாரமும் இல்லாத மூடவழக்கங்களை, அவை எத்தகைய மறைவான, கொச்சையான

தன்மையுடையவையாயினும், அப்பட்டமாகக் கண்டிப்பதில் சிவவாக்கியர் ஒருபோதும் தயங்கியதில்லை.

பெண் ஒரு அழுக்கு எனப் பேசித்திரிந்திடும் அறிவில்லாதோர் பெண்ணுடன் கூடும்பொழுது அவ்வழக்கு பற்றிக் கவலை கொள்வதில்லை.

மேலும் மந்திரம் ஓதாததற்குத் தூய்மை வேண்டும் என்று எண்ணுபவர்கள் நீரில் மூழ்கி வருகின்றனர்.

ஆனால் அழுக்கால் ஆன குருக்களால் தான் மந்திரம் சொல்லப்படுகிறது" என்றவாறு கூறி பெண்ணின் தாழ்வு நிலை என எண்ணுபவர்களின் சிந்தனையை மாற்றுகிறார்.

"மாதமாதம் தூமைதான் மறந்துபோன தூமைதான்

மாதம் அற்ற நின்றலே வளரந்து ரூப மானது"

என்ற பாடல் அடிகளில், "மாந்தோறும் பெண்க்களுக்குத் தீட்டு வருகிறது என்கிறீர்.

சிலருக்கு வராமல் உள்ளதே அவர்களுக்கு மாதம் இன்னும வரவில்லையோ.....மாமாதம் வராமல் நின்ற பிறகு அத்தீட்டினால் தான் குழந்தையும் வளர்ந்து வடிவு பெறுகிறது" என்ற கருத்தை முன்னிறுத்தும் சிவவாக்கியார் குழூந்தையே அழுக்கு, எனவே பெண்ணின் மாதவிடாய் கால அழுக்ககை தீட்டு எனக் கூறாதீர் எனக் கடிந்து கொள்கிறார்.

மேலும், மனித குலம் வளர்வதற்குத் தூமையே காரணம் என்கிறார்.

"துமையற்று நின்றலோ சுதீபமற்று நின்றது

ஆண்மையற்று நின்றலோ வழக்கமற்று நின்றது

ஆண்மையற்று ஆண்மையற்று சஞ்சலங்கள்அற்று நின்ற

தூமைதூமை அற்றகாலம சொல்லும் அற்று நின்றதே"

தூமையாகிய மாதவிலக்கு இல்லாத மகளிர் ஒளிகுன்றிக் காணப்படுவர்.

ஆண்மை குறைந்த மனிதர்களால் மரபு ஒளிந்து விடும். ஆண்மயற்று இருத்தலால் பெண்களுக்குத் துன்பங்களும் குறைவு.

மாதவிலக்கு நின்றக் காலத்தில பேசவும் இயலாமுடியாமற் போனதே என்று கருத்தை, வலு இல்லா மகளிர் மாதவிடாய் அற்று உள்ளனர்.

அவ்வாறு இருப்பின் நோயாகும். இதனால் உடல் ஒளி குன்றிக் காணப்படும். குழந்தையும் இல்லை.

எனவே மனிதகுலம் வளர்வதற்கே தூமை எனப்படும் அழுக்குக் காரணமாகிறது. எனவே தூமையை இகழாதீர் என அறிவுறுத்துகிறார்.

மேலும் தூமை என்னும் அழுக்கை தன் மொழி அளவிலான கருத்தாகச் சொல்லவில்லை. உலக முழுவதுமாக ஒரு பொதுவிதியாக மாற்ற முனைகிறார்.

"தூமைகண்டு நின்றலெண்ணின் தூமைதானும் ஊறியே

சீமையெங்கும் ஆணும் பெண்ணும் சேர்ந்துலகங் கண்டதே

தூமைதானும் ஆசையாய் துறந்திருந்த சீவனை

தூமையற்றுக் கொண்டிருந்த தேசமேது தேசமே"

எனத் தேசத்தில் தூமையில்லாமல் கிடைக்கும் மனிதர்களைக் காட்டுங்கள் என அறைகூவல் விடுக்கிறார் சிவவாக்கியர்.

தூமை என்பது உலகினர் இகழ்ந்து பேசும் அத்தன்மைதான் கருமுட்டை உருவானதை வெளிப்படுத்தும் விதமாகும்.

அது ஆண்விந்துடன் கலந்து பத்து மாதங்கள் ஆனதும் கையும், காலும், கண்ணும் பெற்று சுவை, ஒளி, ஊறு, ஓசை, மணம்

ஆகியன அறியும் உடலும் பெற்று நமக்குத் துணையாகிறது என்கிறார் சிவவாக்கியார்.

அடுத்து,

”தீட்டம்தீட்டம் என்றுநீர் தினம்முழுகும் மூடரே

தீட்டமாகி அல்லவோ தரண்டு காயமானது

புட்டகாயம் உம்முளே புகழுகின்ற மேயரே

தீட்டுவந்து கொண்டலோ தெளிந்ததே சிவாயமே”

என்றப் பாடலில், தீட்டுத்தான் திரண்டு உம் உடம்பாக மாறியது.

உம் உடம்பை பல்வேறு நிலையில் நீங்கள் புகழ்கிறீர்கள். ஆனால் அவ்வுடம்பு தீட்டால் வந்தது என பெண்ணின் மாவிடாய் பெருமைப்படுத்தப்படுகிறது

அதுமட்டுமன்று, பெண் ஒரு சக்தியாக மாட்டிக்கொண்டதனாலேயே சிவனாரும் கங்கையைத் தனது தலைமேல் வைத்து மகிழ்ந்திருக்கின்றார்.

அதனால் மனைவியோடு சேரும்போது தான் மனிதர் வாழ்வு சிறக்கும் என்பதை

“மாதர்தோள்சே ராததேவர் மாநிலத்தி லில்லையே
மாதர்தோள்பு ணர்ந்தபோது மனிதர்வாழ்சி றக்குமே
மாதராகுஞ் சக்தியொன்று மாட்டிக்கொண்ட தாதலால்
மாதராகும் நீலிகங்கை மகிழ்ந்துகொண்டா னீசனே”

என்று தெளிவுபடுத்துகின்றார்.

பெண் இன்றிப் பெருமையும் இல்லை கண் இன்றி காட்சியும் இல்லை' என்பது நம் முன்னோர்களின் நாட்டார் இலக்கியத்தில் முதுகெலும்பாக விளங்கும் பழமொழிகளுள் ஒன்று. மனித உடம்பில் கண்கள்

எவ்வளவு முக்கியமானதோ அதே அளவு சமூகத்தில் பெண்களும் முக்கியமானவர்களேயாவர்.

**சிவவாக்கியாரைப் போலவே வேதாத்திரி மகரிஷி அவர்கள் பெண்ணின் பெருமையை சிறப்பை உலகறியச் செய்தார். அவரே பேசுகிறார்..............**

**ஆண்களுக்கும், பெண்களுக்கும் உள்ள வித்தியாசம் இது தான். கணவன் அலுவலகத்திற்கோ தொழிற்சாலைக்கோ போகும் போது கூட மனைவியானவள் "அவரை நல்லபடியாகக் காப்பாற்று," என்று ஏதேனும் ஒரு தெய்வத்தை வேண்டிக் கொள்வதைப் பார்த்திருக்கிறோம்.**

**சமுதாயத்தில் ஒரு பழக்கமாகவே இது வந்து விட்டது. ஆனால் ஆண்களோ நல்லதாக இருந்தாலும் பெண்ணை பாராட்டுவதற்கு ஒரு கஞ்சத்தனம்!**

**பெரிய பெரிய நன்மைகளை எல்லாம் தொடர்ந்து பெற்றவர்கள் கூட என்ன எண்ணத்தில் இருக்கிறார்கள்? ஒரு சிறிய பாராட்டு வாய் திறந்து சொன்னால் அவள் கை ஓங்கி விடுமாம்!**

**தானாக தன்னுடைய மனைவியைப் பாராட்டி அதிலே இருந்து அந்த இன்பத்தை அடையக் கூடிய மறுக்கக் கூடிய உள்ளங்களுக்கு அன்பு என்பது எங்கே உண்டாகும்?**

**இதற்கு அடிப்படைக் காரணம் என்ன என்றால் நீண்ட காலமாகப் பழக்கத்தில் பெண்களை சாதாரணமாக உபயோகப்படக் கூடிய பொருளாகவே மதித்து மதித்து, அதே மாதிரி நிலையிலே பல நூல்கள் வந்ததனால் அந்தக் கருத்து இன்றும் நிலவி வருகிறது.**

**பெண்களுக்குச் சம உரிமை மாத்திரம் இல்லை, பெரிய மதிப்பும் உண்டு என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். அது தான் எனது கவிதை நூலிலே ஒரு கவியிலே எழுதி இருக்கிறேன்:**

**"பெண் வயிற்றி லுருவாகிப்**
**பெண் பாலுண்டே வளர்ந்தாய்**
**பெண் துணையால் வாழ்கின்றாய்**

**பெண்ணின் பெருமை உணர்,"**

**என்று, தாய்க்குலத்திற்கு நாம் ஏன் அவ்வளவு மதிப்புத்தர வேண்டியதாக இருக்கிறது என்று உலக சமாதானம் என்ற நூலில் ஒரு இடத்தில் விளக்கம் கொடுக்கும் போது,**

**"பெண்ணினத்தின் பெருமதிப்பை உணர்ந்தே உள்ளேன்**
**பேருலகில் வாழுகின்ற மக்கள் எல்லாம்**
**பெண்ணினத்தின் அன்பளிப்பே எனில் வேறென்ன**
**பெருமை இதை விட எடுத்துச் சொல்லுதற்கு?**
**பெண்ணினத்தின் இயல்பு பெற்ற மக்கள் தம்மை,**
**பிறர் வளர்க்க அனுமதியார், மனமும் ஒவ்வார்,**
**பெண்ணினத்தின் விடுதலைக்கு இந்தத் தியாகம்,**
**பேருலக அமைதிக்கும் அவசியம் ஆம்,"**

**என்று எழுதியுள்ளேன்.**

**வேறு என்ன பெருமை இதைவிட எடுத்துக் கூறுவதற்கு? வேறு ஒரு பெருமையும் நீங்கள் பேச வேண்டியதில்லை;**

**எல்லாருமே பெண்களால் அளிக்கப்பட்ட, பெறப்பட்ட பிள்ளைகள்தான் என்பதை உணர்ந்தாலே போதும்.**

**சம உரிமை மாத்திரம் அல்ல, இன்னும் பிரத்தியட்சமாக சில உரிமைகள்கூட அவர்களுக்குக் கொடுத்து நாம் வாழ வைக்க வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் உணர வேண்டும்.**

**போன காலம் எல்லாம் போகட்டும், இனி வருங்காலத்திலேயாயினும் முதலில் அவரவர்கள் வீட்டிலே தொடங்க வேண்டும்.**

**கருத்தரித்த நாள் முதற்கொண்டு ஒன்பது மாதம் பத்து நாள் வரையில் ஒரு தாய்க்கு என்ன துன்பம் இருக்கும் என்று யாராலும் எண்ணிப் பார்த்ததால் அதை விடத் துன்பம் உலகத்தில் மனிதனுக்கு இருக்க முடியாது.**

எல்லையற்ற பெருவெளியாகி மெய்ப்பொருள் தன்னில் **உள்ளமைந்துள்ள ஆற்றலால் நுண்ணியக்க மூலக்கூறாகிய ஆகாசமெனும் சக்தியாகி, சிவம் சக்தி இரண்டின் கூட்டுச் சேர்க்கையில், விகிதாச்சார அமைப்புக்கேற்ப அணு முதல் அண்டகோடிகளாக விளங்குவதைச் சிந்தனையாற்றல் பெற்ற அனைவரும் அறிவோம்.**

**பேரியக்க மண்டலமெனும் பிரபஞ்சத்தின் ஆக்கம், நிகழ்வு, முடிவு எனும் மூன்றும் அணுக்கள் கூடுதல், இயங்குதல், பிரிதல் எனும் நிகழ்ச்சிகளேயாகும்.**

**எனினும், உயிரினங்கள், தோற்றங்கள், காப்பு இவற்றைப் பெண்மையினிடத்தே அருட்பேராற்றல் அமைத்திருக்கும், ஒப்புவித்திருக்கும் பேருண்மையை உணரும்போது எல்லோரும் பெண்ணினத்தின் பெருமையை உணர்ந்து போற்ற வேண்டியுள்ளது" .**

**" பெண்குலமே மகரிஷி அவர்களுக்கு நன்றிக்கடன் பட்டிருக்கின்றது " என்கிறாள் ஒரு மாணவி.**

**" இது மாத்திரமல்ல...'சிறப்புணர்ந்த பெண்மதிப்பு' என வேதாத்திரியத்தின் ஒரு அம்சமாகவும், 'மனைவி நல வேட்பு நாள் ' உலகமெங்கும் கொண்டாடவைத்து பெண்ணின் பெருமைகளை எல்லோருக்கும் குறிப்பாக ஆண்களுக்கு உணர்த்தியவர் வேதாத்திரி..**

# 18.அறவழிச் சிறப்பு

பூசை, நியமம், நிட்டை முதலானவற்றை வெளியார் மயங்கச் செய்தாலும், அறவழியில் செல்லாது அந்நியர் பொருள்களின் மேல் ஆசை வைத்துத் தினந்தோறும் அவற்றை மோசஞ்செய்து அபகரிப்பதற்காக எப்போதும் அலைந்து திரிபவர்களுக்கு எழுநரகங்களும் காத்துக்கொண்டிருக்கின்றன; இது உண்மையாகும் என்கிறார் சிவவாக்கியார்.

“ஆசைகொண்டு அனுதினமு மன்னியர் பொருளினை
மோசஞ்செய்து அபகரிக்க முற்றிலும் மலைபவர்
பூசையோடு நேமநிட்டை பூரிக்கச்செய் பாதகர்
காசினியி லெழுநரகைக் காத்திருப்ப துண்மையே”

என அதருமவழியைப் பின்பற்றினாலுண்டாகும் விளைவை எடுத்துக்கூறி எச்சரிக்கின்றார் சிவவாக்கியர்.

அறவழி பின்பற்றுவதற்கான மனோதிடமின்றிப் பிறர்பொருளை எதிர்நோக்கி அதன்பின்னே ஊரெல்லாம் சுற்றி அலைந்து சுற்றத்தாரால் இகழப்படுகின்ற அவலநிலயை அடைந்தவர்களை,

“மனவுறுதி தானிலாத மட்டிப்பிண மாடுகள்
சினமுறப் பிறர்பொருளைச் சேகரித்து வைத்ததைத்
தினந்தினமு ரெங்குஞ்சுற்றித் திண்டிக்கே யலைபவர்
இனமதிற் பலர்கள்வையும் இன்பமற்ற பாவிகள்”

என்றும் சாடுகின்றார்.

அளப்பரிய செல்வம் சேர்த்து வைப்பினும் எமனோலை வருகின்ற காலத்தில் குறுக்கே வந்து தடுக்க மாட்டா. பாத்திரமறிந்து ஓடிச்சென்று இட்ட பிச்சையும், மன உவப்போடு செய்த தருமச்செயல்களும் மட்டுமே வந்துதவும் என்பதை,

“ஆடுநாடு தேடினும் ஆனைசேனை தேடினும்
கோடிவாசி தேடினுங் குறுக்கேவந்து நிற்குமோ
ஓடியிட்ட பிச்சையும் உகந்துசெய்த தருமமும்
சாடிவிட்ட குதிரைபோல் தருமம்வந்து நிற்குமே”

என்ற பாடலால் விளக்குகிறார்.

அறநெறி என்பது நமது திறமைகளையும் ஆற்றல்களையும் பன்முகப்படுத்தி, இந்த பன்முகத் தன்மையெல்லாம் ஒருங்கிணைத்து தனிமனித, சமூக மாண்பையும் , இறையாண்மையையும் பரிணமிக்கச்செய்து பாதுகாக்கச் செய்யும் இயக்கச் சக்தியே அறநெறி எனப்படும்' என்று என்றிக் டசில் கூறுகின்றார்.

அறநெறி என்பது வெறும் சட்டம் மற்றும் ஒழுங்குமுறையல்ல மாறாக ஒரு தொலைநோக்கு பார்வை' என்று பேர்னார்டு ஹேரியங் கூறுகின்றார்.

'அறவாழ்வு என்பது கடவுள் மனிதருக்கு தரும் அழைப்பிற்கான பதில்' என்று இரண்டாம் ஜான்பால் கூறுகின்றார்.

இறை உணர்வும் - அற உணர்வும் - வேதாத்திரி மகரிசி

"நாம் செய்கிற செயல் மூலமாகப் பிறருக்கு நன்மை தான் வரவேண்டும், தீமை வரக்கூடாது".

"இந்தச் சமுதாயம் நமக்கு ஒவ்வொரு நாளும் எத்தனையோ பொருட்களைக் கொடுத்து நம்மை வாழ வைத்துக் கொண்டிருக்கிறது. இந்தச் சமுதாயத்திற்கு எந்த வகையிலும் யாருக்கும் நான் செய்வது துன்பமாக இருக்கக் கூடாது".

இந்த இரண்டு நோக்கத்தோடு செயலைச் செய்து வந்தால் தொடக்கத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் பழகப் பழக எளிமையாகச் செய்ய இயலும் என்ற அளவிலே வரும்.

அப்படி வந்துவிட்டதானால் இறை உணர்வும் வந்து விடும், அற உணர்வும் வந்து விடும்.

## அறநெறி அணுகுமுறை - விளக்கம்

மனித சமூகத்தில் தொன்றுதொட்டு மரபுவழியாக வந்தவை அறங்கள்; மனித சமூகத்திற்கு ஒரு கூட்டு வாழ்வையும் தகுதியையும் தருவன அறங்கள்.

இவை மனித ஒழுகலாறுகளின் போக்குகளிலிருந்து சாராம்சமாகக் கண்டறியப்பட்டவை. இலக்கியங்களாக எழுதிவைக்கப்பட்டவை.

எனவே சட்டங்களாக இல்லாமல் மரபுகளாகவும், இறுக்கமானவையாக அல்லாமல் நெகிழ்வானவையாகவும் இவை அமைகின்றன.

இவை, நுண்மையானவை (Abstract). இத்தகைய அறநெறிக் கொள்கையை மையமாகக் கொண்டு இலக்கியங்களை அணுகுதல் **அறநெறி அணுகுமுறை** எனப்படும்.

அறநெறியே இறைவழிபாடு - வேதாத்திரி மகரிசி.

நமக்கு அப்பால் ஒரு சக்தி இருக்கிறது. அது தான் இயற்கை என்று அனைவரும் ஒத்துக் கொள்வார்கள்.

அதை மதவாதிகள் கடவுள் என்று பெயர் வைத்துள்ளார்கள். அடீதபோல் இந்தப் பிபஞ்சத்தை எடுத்துக்கொண்டால் இந்த உலகம் ஒரு நாளைக்கு 25 ஆயிரம மைல் தன்னைத்தானே ஒரு சுற்று சுற்றி வருகிறது.

சூரியனைச் சுற்றி வரும் பாதையிலே ஒரு நாளைக்குப் பதினைந்து இலட்சத்து ஐம்பது ஆயிரம் மைல் ஓடுகிறது.

இதில் எதாவது தாமதம் இருக்குமா? இல்லை தடம்

மாறுகிறதா?

அவ்வளவு நேர் நிர்வாகமாக சிறிதும் பிறழாமல் எந்தப் பெரிய ஆற்றல் நிர்வாகம் நடததுகிறது என்று பார்த்தால், அத்தகைய பெரிய நிர்வாக ஆற்றல் பிரபஞ்சத்தில் எல்லாம வல்ல இறைவெளியின் அழுத்தம் என்ற உந்து ஆற்றலால் தான் நடக்கிறது.

அதே போல் என் உள்ளத்திலே , உடலிலே நடக்கிறதும் அதே தான்.

உடலிலும் சரி, பிரபஞசத்திலும் சரி, அணுவிலும் சரி, அணுவைச் சுற்றிலும் சரி, எங்கும் நிறைந்த ஆற்றலாக இருப்பது அந்த எல்லாம் வல்ல இறைவெளி ஒன்றுதான்.

எனவே அந்த அழுத்தமும், அதன் அறிவும் ஒன்றிணைந்த ஆற்றல்தான் நாம் எந்தச் செயலைச் செய்தாலும் அந்தச் செயலுக்குத் தக்க விளைவுகளைத் தந்து கொண்டே இருக்கின்றது.

கையைத் தட்டினால் ஒலி வருகிறது. அதே போன்று அதிகமாக சாப்பிட்டால் உடனே அசீரணம்.

அவ்வாறு எந்தச் செயல் செய்தாலும் தவறாகச் செய்தால் அது தவறு என்று உணர்ந்த உடனே துன்பம உண்டாகிறது.

சரியாகச் செய்தால் நாம் வாழ்க்கையைச் சீராக வாழ்ந்து கொண்டு வருகிறோம் என்று பொருள்.

தவறு செய்யாது இருக்க வேண்டும். தவறு செயல்தால் உடனே தண்டனை இருக்கிறது என்பதுதான் இறை ஆற்றல் உணர்த்தும் நீதி.

அது கூர்தலறம் இதைத் தெரிந்து கொள்ள இறையுணர்வு வேண்டும். தெரிந்து கொண்ட பிறகு மக்களோடு ஒற்றுமையாக வாழ்வதற்கு அறநெறி வேண்டும். அறநெறிதான் உண்மையில் இறைவழிபாடு.

- ஒழுக்கம், கடமை, ஈகை என்ற அறம் வேண்டும். இந்த அறநெறி உலக வாழ்க்கைக்கு அவசியம்.
- துன்பம் செய்யாதிருப்பது ஒழுக்கமாகும். இன்பத்திலிருப்ப வர்களுக்கு உதவி செய்வது ஈகையாகும். ஒழுக்கமும் ஈகையும் இல்லையானால் அறம் என்பது கிடையாது.
- இறையுணர்வு வந்தால்தான் அறநெறி என்பது இயல்பாக அமையும்.
- துன்பங்களுக்கிடையே அறநெறி காத்து, அத்துன்பங்களை எதிர்கொண்டு செம்மையாக வாழ்தலே ஞான வாழ்வாகும்".
- வாழ்க்கை அனுபவங்களை முறையாகக் காலாகாலத்தில் பயின்று, அறநெறி பிறழாத உறுதிப்பாடும் கொண்டு வாழ்ந்தால், வாழ்வு சிறப்பாகவும், இனிமையாகவும், அமைதியாகவும் அமையும். இத்தகைய உயர்நெறியே ஆன்மீக வாழ்வு எனப்படுகிறது

இறைநிலை விளங்கிய பிறகு அதே இறைநிலை எல்லா உயிர்களிடமும் இருக்கிறது என்று எண்ணும் போது தனக்கோ மற்ற உயிர்களுக்கோ துன்பம் எழாத வகையில் அளவோடும், முறையோடும் நாம் செயல்படும் போது அது ஒழுக்கம்.

துன்பம் எழுந்த இடத்திலே அதைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கருணை பிறந்தால் அது தான் ஈகை.

அதற்கும் மேலாக நமக்கு உதவி செய்த இந்த சமுதாயத்திற்கு திருப்பி சமுதாயத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்று தனது உடல் , மன, ஆற்றைகளை அர்ப்பணம் செய்வது கடமை .

ஒழுக்கம் , கடமை , ஈகை என்ற மூன்றும் தான் அறம் . இறைநிலையை உணர்ந்தால் அறநெறி வழுவாது வாழ முடியும்.

அறநெறியின்றி மனிதகுலம் வாழ்வில் நிறைவும் அமைதியும் பெறமுடியாது, இறையுணர்வின்றி அறநெறி முழுமையாக, இயல்பாக அமையாது. உண்மையில் இறை வழிபாடும், அறநெறியும் ஒன்றுதான் - என்கிறார் அருட்தந்தை வேதாத்திரி மகரிசி

அமைதி வேண்டும் என்றால் அதற்கு இறையுணர்வு, அறநெறி இரண்டும் வேண்டும் !

# 19.புலன்கள்

இறையனுபூதிக்குப் புலன்களையடக்கியுள்ள உள்நோக்கே முக்கியமானது.

சாமங்கள் தோறும் நான்கு வேதங்களையும் சந்தச்சிதைவு வராதபடி பாராயணஞ் செய்தாலும், சகல சாத்திரங்களையும் ஐயந்திரிபுற ஆராய்ந்தாலும் பயனில்லை.

இறைவனையறியப் புலனடக்கம்செய்து ஒருமுகமாக உள்நோக்கினால் மட்டுமே சிவத்தை உணரமுடியும் என்றும், அங்ஙனம் உணர்ந்துகொண்டபின் அச்சிவநிலை உங்களது உடலின்கண் "ஊமையானகாயமாக" – மௌனநிலையாகக் குடிகொள்ளும்.

"சாமம்நாலு வேதமுஞ் சகலசாத் திரங்களும்
சேமமாக வோதினுஞ் சிவனைநீ ரறிகிலீர்
காமநோயை விட்டுநீர் கருத்துளே யுணர்ந்தபின்
ஊமையான காயமா யிருப்பனெங்க ளீசனே"

என்றும் சுட்டிக்காட்டுகிறார்.

## புலனடக்கம் - ஆதிசங்கர்

எனக்கு புலன் இன்பங்களில் விருப்பம் இல்லை. ஆத்ம அனுபவமும், அறிவும், ஆனந்தமும் என்னிடம் நிரம்பி உள்ளன. புற உலகத்தைப் பற்றிய எண்ணங்களில் இருந்து நான் வெகு தூரம் விலகி இருக்கிறேன். புறத்தில் காணப்படாதது எதுவோ, அதனால் என் உள்ளம் மகிழ்கிறது. காமதேவன் உற்பத்தி செய்யும் உணர்ச்சி வேகம் என்னிடம் இல்லை"

## புலனடக்கம் சாத்தியமா ?

இன்றைய காலகட்டத்தில் புலனடக்கம் என்பதெல்லாம் சாத்தியமா ?

அதென்ன இன்றைய காலகட்டம் ? அன்றைய காலகட்டம் ? எல்லா காலகட்டங்களிலும் எல்லாம் இருந்திருக்கிறது.

மனிதனாகப் பிறந்து விட்ட ஒருவன் இதற்குள்ளே இருந்து கொண்டுதான், இவற்றையெல்லாம் கடந்து போக வேண்டும்.

முத்தெடுக்கப் போகிறவன் நீருக்குள் மூழ்கி மூச்சை அடக்கிதான் முயற்சி செய்ய வேண்டும்.

இதைக் கடந்து எங்கே சென்று விட முடியும். எங்கே சென்றாலும் மனம் அடங்காத வரை புலன்கள் வசப்படாது.

சர்க்கரை நோயாளி ஒருவரைச் சுற்றிலும் இனிப்பு வகைகளை வைத்தாலும், அவர் அவற்றை எடுத்து உண்ணுவாரோ ?

அது போலவே பிறவிப் பிணியில் இருந்து விடுபட வேண்டுமானால் மன அடக்கம், புலனடக்கம் எல்லாம் அவசியமாகும்.

இந்தப் பிரபஞ்சமும் மனிதனும் கர்ம சொரூபங்களாகும். எனவே இங்கு கர்மமின்றி உடல் வாழ்வில்லை.

அதாவது இருப்பு நிலைக்கு எதிர் நிலை இயக்க நிலை. கர் என்றால் இயக்கம். இயக்கமே வடிவெத்து நிற்பது உடல் வாழ்வு.

ஆகவே புலனடக்கத்தோடு கூடிய சத் கர்மங்களைச் செய்துதான் பிறவிப் பிணியை அறுக்க வேண்டும். அறுக்க முடியும்.

இன்றைய காலகட்டங்களில் பெண்கள் கவர்ச்சியாக ஆடைகள் அணிகிறார்கள் என்று ஒரு நண்பர் குறைபட்டுக் கொண்டார்.

ஆனால், யோசித்துப் பார்த்தால் பண்டைய காலகட்டங்களில் வாழ்ந்த பெண்கள்தான் அவ்வாறு ஆடைகள் அணிந்திருந்தார்கள், ஒப்பனை செய்து கொண்டார்கள் என்பதை, சிற்பங்கள் மற்றும் இலக்கிய வர்ணனைகள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

நம் பலவீனத்தை மறைப்பதற்காக மற்றவர்களை குறை சொல்வது மனித இயல்பாக இருக்கிறது.

புலன் நுகர்ச்சியின் விருப்பமே ஆசையாக வடிவெடுக்கிறது. எத்தனையோ ஆசைகள் இருந்தாலும் மூவகை ஆசைகளை வெல்வது கடினம் என்பார்கள்.

அதிலும் குறிப்பாகப் பெண்ணாசையை வெல்வது மெத்தக் கடினம். ஏனெனில் மண்ணாசையும், பொன்னாசையும் செயற்கையாக மனிதனால் புற விவகாரங்களினால் ஏற்படுத்திக் கொள்வது.

ஆனால் பெண்ணாசை என்பது அவ்வாறல்ல. அது மனிதனுடனேயே பிறந்த பிரிக்க முடியாத குணமாகவும், அத்தியாவசியத் தேவையாகவும் கூட இருக்கிறது.

அது பிரஜா உற்பத்திக்கு ஆதாரமாகவும், உலகம் தொடர்ந்து இயங்கவும், இயற்கையாக அமைந்த தெய்வீக சம்பத்து. இறைவனால் கொடுக்கப்பட்டது.

தேவை நிமித்தமே ஆண், பெண் இருபாலினரையும் இயற்கை உண்டாக்கி அவர்கள் ஆனந்தம் அடையும் பொருட்டு, அவர்களுக்குள் ஒரு ஈர்ப்பு சக்தியை ஏற்படுத்தியிருக்கிறது.

அதன் சிறப்பை உணர்ந்து வாழ்வில் அதன் பயனை அனுபவித்து மகிழாமல், நமது அறியாமையால் அந்த ஈர்ப்பு சக்தியை தவறாகப் பயன்படுத்தி, கீழ்த்தரமான கவர்ச்சிகளில் மயங்கித் துன்பங்களை அடைகிறோம்.

யோக சூத்திரம் எழுதிய பதஞ்சலி மகரிஷி அவர்கள் பேரரசர் புஷ்யமித்திரர் நடத்திய வேள்வியை முன்னின்று நடத்திக் கொடுக்க அவருடைய தலைநகருக்கு சீடர்கள் புடை சூழச் சென்றார்.

பலதேசங்களுக்குத் திக் விஜயம் செய்து வெற்றி வாகை சூடி வந்த மன்னன், திருவிழா போல வெற்றி விழாவைக் கொண்டாடினான்.

அதின் ஒரு அங்கமாகவே வேள்விகளும் நடந்தது. பல தேசத்து அரசர்கள், உற்றார், உறவினர், கலைஞர்கள், முனிவர்கள், சாஸ்திர மேதைகள், பொது மக்கள் என்று விழா கலை கட்டியது.

எனவே, பலவிதமான கலை நிகழ்ச்சிகளும் அதில் நடைபெற்றன. அதிலும் குறிப்பாக பல்வேறு தேசத்தைச் சேர்ந்த பேரழகிகளும் நிகழ்த்திய கலை நிகழ்ச்சி வெகு நேரம் நடந்தது.

கருத்தை கிளறும் மோகனக் கலை விருந்தாக அது இருந்தது. அரசர்களும், மற்றவர்களும் கண்களை இமைக்காமல் வாயைப் பிளந்தபடி இரசித்துக் கொண்டிருந்தனர்.

அதில் மகரிஷி பதஞ்சலியும் கலந்து கொண்டு கடைசி வரை அந்த நடன நிகழ்ச்சிகளை ரசித்துக் கொண்டிருந்தார்.

பொதுவாக இத்தகைய கலை நிகழ்ச்சிகள், கேளிக்கைகளில் புலனடக்கம் கொண்டு வாழும் யோகிகள், மகரிஷிகள் கலந்து கொள்ள மாட்டார்கள்.

காரணம் தங்கள் சாதனைக்கு இடையூறு ஏதேனும் நேர்ந்து விடக் கூடும் என்பதனில்தான்.

ஆனால், பதஞ்சலி மகரிஷியோ ஆரம்பத்திலிருந்து கடைசி வரை கேளிக்கை கலை நிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டு ரசித்தார்.

இது பதஞ்சலி மகரிஷியின் பிரதான சீடரான சைத்திரன் என்பவருக்குப் பிடிக்கவில்லை. யோக சாஸ்திரம் வகுத்த மகரிஷியே இப்படி நடந்து கொண்டால், சாதாரண மக்களிடம் புலனடக்கத்தை எப்படி எதிர் பார்க்க முடியும்.

முதலில் ஏதோ வேடிக்கை பார்ப்போமே என்றுதான் தொடங்கும். பிறகு அதனால் எழும் மனக் கிளர்ச்சியை அடக்கா விட்டால்தான் என்ன என்ற எண்ணம் தோன்றும்.

மனிதப் பிறவி அமைந்திருப்பதே இத்தகைய சந்தோசங்களை அனுபவிக்கத்தானே என்று எண்ணம் உதயமாகும்.

எப்பொழுதாவது ஒரு முறை சந்தோசமாக இருப்பதில் தவறில்லை என்ற எண்ணமும் ஏற்படும். மனதில் புகுந்த ஆசை திரும்புவதேது ?

புலனடக்கத்திற்கு உதாரணமாக, வழிகாட்டியாக இருக்க வேண்டியவர்களே இப்படி இருந்தால் என்ன செய்வது ?

என்றெல்லாம் பலவாறாக எண்ணி சைத்திரனின் மனம் குழப்பத்தில் ஆழ்ந்தது. யோக முயற்சிகளில் அவர் சிரத்தையும் குறைந்தது.

அவரின் இந்த மாற்றத்திற்கான காரணம் தெரியால் பதஞ்சலி மகரிஷியும் குழப்பமடைந்தார்.

ஆனால், பதஞ்சலி மகரிஷியின் பண்பட்ட உள்ளமோ அரசவையில் இருந்து வெளியே வந்த பொழுதே அனைத்தையும் மறந்து விட்டது.

ஒருநாள் பதஞ்சலி மகரிஷி புலனடக்கம் பற்றியும், அதன் நற்பயன்கள் பற்றியும் விளக்கிக் கொண்டிருந்தார்.

கூட்டத்தில் அமர்ந்திருந்த சைத்திரனின் உள்ளமோ குமுறிக் கொண்டிருந்தது. குருடனுக்கு முடவன் வழிகாட்டுவது போலல்லவா இருக்கிறது ? என்று எண்ணிய சைத்திரனால் தன் மனக் குமுறலை அதிக நேரம் அடக்கி வைக்க முடியவில்லை.

எனவே சட்டென்று எழுந்து "குருவே ஒரு சந்தேகம் " என்றார். பதஞ்சலி மகரிஷியும் சொல் சைத்திரா, உனக்கு என்ன ஐயப்பாடு எழுந்துள்ளது என்று வினவினார்.

சைத்திரனும், குருவே, புலனடக்கம் கடைபிடிப்பவர்கள் கேளிக்கைகளில் கலந்து கொள்வதும், பேரழகிகள் நடனமாடும் கலை நிகழ்ச்சிகளை கண்டு களிப்பதும் தவறில்லையா ? அதனால் புலனடக்கத்திற்கு பங்கம் நேர்ந்து விடாதா ? என்று தைரியமாக வினவினார்.

இதைக் கேட்ட உடனேயே பதஞ்சலி மகரிஷிக்கு சைத்திரனின் மனக் குழப்பங்களுக்கான காரணம் புரிந்து விட்டது.

புலனடக்கத்திற்கான அடிப்படையை விளக்காமல், வெறும் வழிமுறைகளை மட்டும் உபதேசித்து வந்ததன் கோளாறுதான் இது என்பதை உணர்ந்தார்.

எனவே, சைத்திரனின் மனக்குழப்பத்தை அகற்ற வேண்டி, புலனடக்கம் பற்றி தெளிவாக விவரித்தார்.

சைத்திரா, அழிவு, தேய்வு இல்லாத ஆன்மா சுவைகளின் கருவூலம். அதாவது சுவைகளை அனுபவிக்கவும், ஆராயவும் உரிமை பெற்றது.

ஆன்மா நம் உடல் உறுப்புகளை ஏற்படுத்தி, அவற்றோடு கலந்து நிற்பதே சுவைகளை உய்த்து உணர்வதற்காகத்தான்.

ஆனால், ஆன்மாவின் அந்த உணர்வு தூய்மையானது. தீய எண்ணங்களைக் கிளராதது. குறிப்பாக சுவைகளுக்கு அடிமையாகாமல், அவைகளைத் தன் வயப்படுத்திக் கொள்வது ஆத்ம உணர்வின் சிறப்பு. இதைத்தான் ஆத்ம அனுபவம் என்று கூறுவார்கள்.

மனக்கிளர்ச்சி ஏற்பட்டு விடுமோ, புத்தி பேதலித்து விடுமோ என்ற பயத்தில் ரஸ மயமான சுவைகளை ரசிக்காமல் இருப்பது கோழைத்தனம்.

கந்தல் பொதியை எதிரியாக பாவித்து, ஈட்டி கொண்டு தாக்குவதை யாராவது வீரம் என்று சொல்வார்களா ?

உழைக்காமல் வாழும் சோம்பேறி சோற்றுக்கு வழியில்லாமல் பட்டினி கிடப்பதை உபவாசம் என்று சொல்ல முடியுமா ?

பிச்சைக்காரன் வந்து தொல்லை கொடுப்பான் என்று பயந்து எந்தக் குடும்பத் தலைவியாவது அடுப்பு மூட்டாமல் இருப்பாளா ?

கால் நடைகளும், வன விலங்குகளும் வந்து மேய்ந்து விடுமே என்று எண்ணி குடியானவன் தன் வயலில் சாகுபடி செய்யாமல் இருப்பானா ?

இது போலவே ரஸானுபவம் புலனடக்கத்திற்கு ஊறு விளைவித்து விடுமோ என்று எண்ணி, அஞ்சி சுவைகளை அறவே வெறுத்து ஒதுக்கி விடுவதும் மடமையாகும்.

இத்தகைய எண்ணம் தற்கொலைக்கு ஒப்பானது. இத்தகைய எண்ணம் கொண்டவன் கோழை, தன்னம்பிக்கையற்றவன், சஞ்சல புத்தி கொண்டவன். இத்தகையவர்கள் புலனடக்கம் செய்துதான் என்ன பயன் ?

பலமிக்க எதிரியுடன் போராடி வெற்றி கொள்பவனே மாவீரன். அந்த வெற்றியே சாதனையாகும்.

எனவே, சோதனைகளை ஏற்படுத்தும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட்டு, சுவை தரும் அனுபவங்களில் உழன்று, வாழ்வில் பல ஏற்ற தாழ்வுகளில் ஊடுருவி, நிலை கலங்காமல் நின்றுதான் நல்லுணர்வு

பெற்ற எந்த மனிதனும் புலனடக்கம் எனும் மாபெரும் சாதனையைப் புரிய வேண்டும்.

அந்நிலையில் அவன் செயல்படும் பொழுது சிறந்த நடுநிலையானவனாக விளங்க வேண்டும். அதுதான் தீவிரமான சிறந்த சாதனை.

புலனடக்கத்தின் சீரிய உதாரணமும் இதுதான். இவ்விதமாகப் புலனடக்கம் புரிந்து தேர்ந்தவனே சிறந்த யோகியாக, ஞானியாகத் திகழ முடியும் என்றார். சைத்திரன் மனம் தெளிந்து பணிந்து நின்றார்.

எனவே இந்த காலகட்டத்தில் புலனடக்கம் சாத்தியமா ? அந்த காலகட்டத்தில் புலனடக்கம் சாத்தியமா ? என்ற வீணான குழப்பங்களை விடுத்து, உறுதி கொண்ட உள்ளத்துடன் தடைகளைக் கடந்து சாதனைகளைப் புரிய வேண்டும்.

நமக்குத் தடை வெளியிலிருந்து வருவதில்லை. அது நம் மனதாலேதான் ஏற்படுகிறது. இந்த உண்மையைப் புரிந்து கொண்டால் எல்லா காலமும், எல்லா இடமும், எல்லா சூழலும் ஏற்றதே. எல்லாம் சாத்தியமுமாகும்.

புலனடக்கம் பயிற்சி - வேதாத்திரி மகரிசி

கற்பனைகள் மலரும் விதம் ஒரு செயலை அல்லது அனுபோகத்தை அது நடவாத முன் ஞாபகத்தினால் உருவாக்கினால் அது கற்பனையே ஆகும்.

புலனுணர்ச்சிகளிலே குறுகி நிற்கும் அறிவின் நிலையில் எழும் கற்பனைகளுக்கு, அந்த உடல் பலம், அந்த நிகழ்ச்சிக்குரிய சமய சந்தர்ப்பப் பலம் இவைகள் மாத்திரம் உதவியாக இருக்கும்.

விரிந்த அகண்டாகார ஆராய்ச்சி எல்லையிலே எழும் கற்பனைகளுக்கு, இயற்கையில் அமைந்துள்ள எல்லாவகையான பலமும், நீண்ட காலமாகச் சமுதாயத்தைத் தொடர்ந்து வரும் உலக அனுபவங்களும், அக்கால மக்களின் அறிவின் பலமும் ஒன்று சேர்ந்து, அக்காலக் கற்பனை களைச் செயல்படுத்தும் சூழ்நிலைகளை உருவாக்கிப் பின்னர் அவை செயலாக மலரும்படி செய்யும்.

புலனடக்கம் முதன் முதலாக சித்திரம் எழுதப் பழகுபவனுக்கு எண்ணத்தில் உள்ளபடி உருவம் அமைவதில்லை. பழகப் பழக, எந்தவிதமாக எண்ணுகிறானோ அவ்விதமே அவன் எழுதும் உருவமும் அமைந்து விடுகிறது.

ஆராய்ச்சி முடிவுகளில் அறிவின் விழிப்புடன் செயலாற்ற வேண்டுமென முயற்சிப்பவர்களுக்கு, இது போன்றே ஐம்புலன்களும் உடனே கட்டுப்பட்டு விடா. பழகப் பழக எதை எண்ணுகிறானோ அதன் படி செயலாற்றும் திறமையும், வல்லமையும் ஏற்பட்டுவிடும்.

ஆகவே, பொறுமையோடு திட மனத்துடன் நீடித்துப் பழகி இலட்சிய எல்லையை அடைய வேண்டும்.



பகவான் ஸ்ரீகிருஷ்ணர் புலனடக்கத்தை இருவேறு விதங்களில் வேள்வியாகக் குறிப்பிட்டார்.
புலனடக்கம் மிக்கவன் கட்டுப்பாடு என்னும் நெருப்பில், கட்டுப்பாடற்றுத் திரிகின்ற பொறிகளை ஹோமம் செய்கிறான் என்று கூறினார்.
எல்லாவற்றிலும் மிதமாக இருத்தல் என்பது புலனடக்கத்தின் மற்றொரு பரிமாணம்.
அடுத்து, மன அடக்கத்தை வேள்வியாகக் குறிப்பிடுகிறார். கடவுள் நமக்கு அருளியுள்ள அற்புதமான கருவி மனம்.
மனமே மனிதனுக்கு நண்பனாகவும் பகைவனாகவும் விளங்குகிறது. வாழ்வின் இருமை அனுபவங்களில் சிக்கித் திணறும் அதே மனமானது, அவற்றிலிருந்து விடுபட்டு பேரின்பத்தை உணரவும் உதவுகிறது.

மனதை நெறிப்படுத்துவது பற்றி பகவானின் கூற்று :
"ஸர்வாணீந்த்ரியகர்மாணி ப்ராணகர்மாணி
சாபரே I
ஆத்மஸம்யமயோகாக்நௌ ஜுஹ்வதி
ஜ்ஞாநதீபிதே II

(ஸ்ரீமத்பகவத்கீதை 4-27)

மேலும், வேறு சிலர் அனைத்து இந்திரியங்களின் செயல்பாடுகளையும், பிராணனின் செயல்பாடுகளையும், தியானம் முதலான சாதனைகளுடன் கூடிய, பகுத்தறிவினால் தூண்டப்பட்ட மனக்கட்டுப்பாடு என்ற நெருப்பில் ஹோமம் செய்கிறார்கள்.

கட்டுப்பாடு இல்லாத எண்ணங்களை, கட்டுப்பாடு என்கின்ற நெருப்பில் ஹோமம் செய்ய வேண்டும்.

தாறுமாறாகச் சென்று கொண்டிருக்கின்ற எண்ணங்களை நெறிப்படுத்த வேண்டும்.

அறிவுக்கருவிகள், செயற்கருவிகள் ஆகியவற்றின் செயல்பாடுகளையும், பிராணனின் செயல்பாடுகளையும் மனக்கட்டுப்பாடு என்ற நெருப்பில் ஹோமம் செய்ய வேண்டும்.

மனம்தான் பந்தத்துக்கும் மோக்ஷத்துக்கும் ஸாதனம். உலக விஷயங்களில் ஆழ்ந்துள்ள மனம் பந்தத்துக்குக் காரணம். உலக விஷயங்களிலிருந்து விடுபட்ட மனம் மோக்ஷத்துக்குக் காரணம்.

ஓயாமல் உள்ளத்தில் எண்ணங்கள் அலைபாய்ந்து கொண்டிருக்கின்றன. நிலையில்லாத பொருட்களில் மனம் பேயாய் உழலுகிறது.

எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி -
ஏழைநெஞ்சம்
புண்ணாகச் செய்ததினி போதும் பராபரமே!

என்று பாடுகிறார் தாயுமானவர். அனைத்து ஆன்மிக சாதனைகளும் மனதை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

‘மாநஸ ஸஞ்சரரே, மூட மதே’ என்று பெரியோர்கள் அனைவரும் மனதுக்குத்தான் உபதேசம் செய்கிறார்கள்.

மனதுக்குள் இறை நாமத்தை ஓதியபடியே, கோயிலுக்குச் செல்வதாக எண்ணிப் பழகுதல் ஒரு நல்ல சாதனையாகும்.

இவ்வாறு மனம் இறைவனைப் பற்றி நினைத்தல் ஒரு சிறந்த பயிற்சியாக அமைகிறது.

மனதைச் சரியானவற்றில் வைப்பதற்காகத்தான் நம் முன்னோர்கள் மிகப்பெரிய கற்றளிகளை எழுப்பியுள்ளனர்.

குழந்தைகள் பல்வேறு வடிவங்களில் இனிப்புப் பண்டங்களை விரும்புவதுபோல, இறைவன் ஒருவனாக இருந்தபோதிலும், நம் மனதுக்குப் பல்வேறு இறை வடிவங்கள் தேவைப்படுகின்றன.

நம்முடைய மனதில் நமக்கும், சமூகத்துக்கும் நலம் பயக்கும் தரமான, ஆரோக்கியமான எண்ணங்கள் இருக்க வேண்டும்.

மனதில் அளவான எண்ணங்கள் இருக்க வேண்டும். அவை சரியான திசையில் இயங்க வேண்டும்.

இவ்வாறு தரமான, அளவான, நெறிப்படுத்தப்பட்ட எண்ணங்கள் மனதில் இருக்க வேண்டும்.

மனக்கட்டுப்பாடு மிக்கவன் மிகுந்த பகுத்தறிவோடு நாள்தோறும் வாழ்வின் தன்மை பற்றி யோசிக்கிறான்.

எண்ணங்களை அழகாக ஒழுங்குபடுத்தி வைத்துக் கொள்கிறான்.

நதியில் நீர் சென்று கொண்டிருக்கிறது. அதன் குறுக்கே அணை கட்டி, தேவையான காரியங்களுக்குப் பயன்படுத்துகிறோம்.

அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கிறோம், விவசாயத்துக்குப் பயன்படுத்துகிறோம்.

தாறுமாறாகச் செல்கின்ற நீரை, எப்படித் தேக்கி முறையாகப் பயன்படுத்துகிறோமோ, அதுபோல, தாறுமாறாகச் செல்கின்ற எண்ணங்களை நெறிப்படுத்தி, ஒழுங்குபடுத்தி, பயனுள்ள செயல்களுக்குப் பயன்படுத்த வேண்டும்.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியர்
திண்ணிய ராகப் பெறின்

என்கிறார் திருவள்ளுவர். எண்ணம் மிக முக்கியம். எண்ணம் அழகானால் எல்லாம் அழகாகும்.

மிருகங்கள் போகப் பிறவிகள். அவற்றால் புண்ணிய, பாபங்களைச் செய்ய முடியாது.

மனிதனால் தான் புண்ணிய, பாபங்களைச் செய்யவும், அவற்றின் பலன்களை அனுபவிக்கவும் முடியும்.

மனிதனால் நல்லார் இணக்கத்தை நாடி, தனது எண்ணங்களை நெறிப்படுத்திக் கொள்ள முடியும்.

எண்ணங்கள் சரியாக இருப்பதற்குத் தேவை, தெளிந்த பகுத்தறிவு. வாழ்க்கையைச் சரியாக நடத்துவதற்கு அது மிகவும் முக்கியம்.

பகுத்தறிவு மிக்கவன் மிகுந்த எண்ணங்கள் விஷயத்தில் கவனத்துடன், விழிப்புணர்வுடன் இருக்கிறான்.

நம் புத்தி சரியான வழியில் செல்ல வேண்டும் என்பதே காயத்ரீ மந்திரத்தின் பிரார்த்தனை. தீய எண்ணங்களை நீக்க முயற்சி செய்வதைக் காட்டிலும், நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்ள முயற்சிப்பது நல்லது.

நல்ல எண்ணங்களை வளர்க்க வளர்க்க, தீய எண்ணங்கள் தானாகவே விலகிவிடும்.

முதல் எண்ணம் நம் கட்டுப்பாட்டில் இல்லை. ஆனால், அதனை மீண்டும் மீண்டும் எண்ணுவதும், எண்ணாமல் இருப்பதும் நம் கையில்தான் இருக்கிறது.

தீய எண்ணங்கள் தோன்றினால், சத்ஸங்கத்தை நாடி, இறை நாமத்தை ஓதி, அந்த எண்ணம் செயல் வடிவம் பெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நல்ல விஷயங்களிலேயே மனம் ஊறியிருந்தால், தீய எண்ணங்கள் வலுவிழந்து விடும் என்பதை உணர்ந்து நல்லவற்றிலேயே உள்ளத்தைச் செலுத்த வேண்டும்.

# 20. பிரம்ம ஞானம் உம்முள்ளே

**பிரம்மஞானம்** (*Theosophy. Theosophy* ) என்ற ஆங்கிலச் சொல் தெய்வீக ஞானம் எனும் பொருள் கொண்ட கிரேக்கச் சொல்லிலிருந்து தோன்றியது.

இந்த ஞானமே எந்த ஒரு மதத்திற்கும், தத்துவத்திற்கும், போதனைகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

*பிரம்மஞானம் என்றால், முழுமையை உணர்ந்து ,அறிவு என்று பொருள்,*

*அந்நிலை பெற்ற அறிவு வாழும், காலத்தே வாழ்க்கை சிக்கல்களில் இருந்து , தன்னை விடுத்துக்கொண்டு, முழுமையை நோக்கிய பயணத்தில், தொடர்ந்து கொண்டே இருக்கும்.*

பிரம்மஞானம் உன்னிடத்திலேயே உள்ளது. உன்னிடம் பேசுபவனும் இறைவனே. ஐம்பலன்களை அடக்கிக் கொண்டால் இறைவன் உன்னிடம் பேசுவான்" என்பதை சிவவாக்கியார்,

"பேசுவானும் ஈசனே, பிரமஞானம் உம்முளே;
ஆசையான ஐவரும் அலைந்தருள் செய்கிறார்;
ஆசையானா ஐவரே அடக்கிஓர் எழுத்திலே
பேசிடாது இருப்பிரேல் நாதன்வந்து பேசுமே. "

**பிரம்மஞானம் வேதாத்திரி மகரிசி.**

பிரம்மஞானம் என்பது மனிதகுல வாழ்வுக்கு மேன்மையை அளிப்பதும், சிறப்பைத் தருவதும் ஆகும்.

ஐந்து ஞானந்திரியங்கள் எனும் தொடு உணர்வு, சுவையுணர்வு, மணஉணர்வு, ஒளி உணர்வு கருவிகளாகத் தோல், நாக்கு, மூக்கு, கண், காது இவைகளுக்கும் - தொழில் செய்கருவிகளான கை, கால், வாய், பால்குறி, குதம் ஆகியவற்றிற்கும் அறிவை அடிமையாக்கிச் செயல்புரிந்து வாழும் வாழ்க்கையானது ஐயறிவுக்குட்பட்ட விலங்கின வாழ்வாகும்.

ஆறாவது அறிவை மன ஆற்றலோடு இணைத்துக் கொண்டு, ஐந்து உணர்கருவிகளையும், ஐந்து தொழில் கருவிகளையும் விளைவறிந்த விழிப்போடு தனக்கும் பிறர்க்கும் ஆக்க வழிகளில் பயன்படுத்தி வாழும் நுண்ணறிவு வாழ்வே மனித இனத்திற்கு ஒத்ததாகும்.

இத்தகைய உயர் வாழ்க்கைக்கு இயற்கையை, அதன் ஆற்றல்களை, விளைவுகளை, மனிதன் முதலில் உணர்ந்து கொள்ள வேண்டியது அவசியம் ஆகும்.

அடுத்து மனித உடல் அமைப்பையும், மனதின் ஆற்றல்களையும் தெளிவாக உணர்ந்து கொள்வதும் அவசியம் ஆகும்.

பிரம்மஞானம் எனும் பேரியக்க மண்டலம், மனிதன் என்னும் இரண்டு தத்துவங்களின் தோற்றம், இயக்கம் விளைவுகள் பற்றிய முழுமையான விளக்கம் மிகவும் அவசியம் ஆகும்.

பிரம்மஞானம் என்றால் என்ன?

மனிதன் என்பவன் வினைப்பதிவுகளின் தொகுப்பு. ஒவ்வொரு மனிதனிடமும் விலங்கினப்பதிவுகள் அடங்கியிருக்கின்றன.

நாமெல்லாம் நல்லவர்களாக இருக்கிறோம். தவறு செய்யவில்லை என்று கருதுகிறோம். தவறு செய்வதற்கான வாய்ப்பு கிட்டவில்லை என்று தான் அர்த்தம்.

ஆனால் வாய்ப்பு கிட்டியும் தவறு செய்யவில்லையென்றால் அது தான் மனிதத்தன்மை.

அதற்கு மேல்பதிவு போட்டுப் பழகினால் ஒழிய விலங்கினப்பதிவுகள்


கழியாது . வெளிப்படும் .

இறைநிலை வரைக்கும் விரிந்து வரும் பதிவு வந்துவிட்டால் அதன் பிறகு விலங்கினப்பதிவுகள் செயல்படாது அல்லவா?

சாக்கடையில்பதிவு தண்ணீரில் இருக்கிறது . இதே பதிவு (சாக்கடை) சமுத்திரத்தில் விழுந்து விட்டால் அங்கேயும் கொஞ்ச நேரம் அழுக்கு இருக்கலாம். ஆனால் போகப் போக என்னாகும் ? தூய்மையாகிவிடும் .

அதே போல மனித மனம் இறைநிலையோடு சேர்ந்து அதுவானால் இறைநிலையின் தன்மைகளேல்லாம் மனிதனுக்கு வந்து விடும் மனிதனிடம் அத்தன்மைகள் இருக்கின்றன.

அவை ஒளிர ஆரம்பிக்கும். இறைநிலைக்கும் பிரம்மம் என்று பெயர். அதுவாகவே தான் நான் இருக்கிறேன். நானும் இறைநிலையே என்று தெரிந்து கொள்ளக் கூடிய அறிவு தான் பிரம்மஞானம் .




மனிதனின் கதை இது. மனிதன் வந்த கதை இது. இது தெரியாமல் வாழ்வில் எழும் சிக்கல்கள் என்ன? அதைப் போக்குவது எப்படி? என்று விஞ்ஞான விளக்கத்துடன் எழுதியுள்ளார் மகரிசி. உலக விஞ்ஞானிகளின் சிந்தனைக்கு ஒரு சவால் இந்நூல்.

# துணைநின்ற நூல்கள்.


1. சிவவாக்கியர் பாடல்கள்.
2. இண்டர்நெட் தகவல்கள்.
3. திருமந்திரம்
4. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள்.
5. அன்பொளி மாத இதழ்கள்.
6. இண்டர்நெட் தகவல்கள்
7. ஞானக்களஞ்சியம் -வேதாத்திரி மகரிசி
8. Poetry and the philosophy of the Tamil Siddhars -A.V. Subramania Iyyer

# ஆசிரியரின் பிற நூல்கள்

**ஆன்மீகம்**

1. **தியானம் பழக 100 தியான சிந்தனைகள்**
2. **அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்**
3. **கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்**
4. **தாயுமானவரின் ஆனந்தகளிப்பு**
5. **குதம்பைச் சித்தரின் ஞானப்பட்டறை**

**வாழ்க்கை வரலாறு**

1. **நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
2. **புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
3. **இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
4. **நபிகள் நாயகம் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**
5. **குருவுடன் வாழ்ந்தவர்**
6. **வேதாத்திரி மகரிசி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்**

**தன்னம்பிக்கை**

1. **தன்னம்பிக்கை மலர்கள்.**
2. **டென்சனை வெல்வது எப்படி?**
3. **காலமே உன் உயிர்**
4. **வேதாத்திரி மகரிசியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.**
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

**ஒப்பாய்வு**

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரசியும்.

2. மகாவீரரும் வேதாத்திரி மகரசியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரசியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞானஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (அச்சில்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் சித்தர்களும் வேதாத்திரி மகரிசியும்.
11. **புத்தரும் வேதாத்திரியும்**
12. **இயேசுவும் வேதாத்திரியும் மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்**

**வேதாத்திரி மகரிசி**

1. **வேதாத்திரி மகரிசி பற்றி 100 அறிஞர்கள்.**
2. **வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000 (மூன்று பாகங்கள்)**
3. **தினசரி தியானம்.**
4. **வேதாத்திரி மகரிசி காட்டும் வறுமை**
5. **பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிசி**
6. **வேதாத்திரியம் கற்போம்**

**பயணங்கள்**

1. **ஞாபகம் வருதே ஞாபகம் வருதே**
2. **அமெரிக்க மண்ணில் ஆறுமாதங்கள்.**
3. **சிம்லாவில் ஐந்து நாட்கள்**

**வரலாறு**

1. **மன்னார்குடி வரலாறு**

**சிறுகதைகள்**

1. **செயலே விளைவு**
2. **தவம்**

**ஆய்வு நூல்கள்.**

1. **நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்.**